G.V

மாரிக்காதை

(விண்டர்ஸ்டேல் ஷேக்ஸ்பியர் நாடகம்)

தழுவிய மொழிபெயர்ப்பு :
புலவர் இரா. ஏகாம்பரநாதன்

★

Prescribed for the Pre-University Course 1964–'65
MADRAS UNIVERSITY.

★

T15261
R005E07
T-15261

Price Rs. 1-25

மாரிக்காதை

(விண்டர்ஸ்டேல் ஷேக்ஸ்பியர் நாடகம்)

Prescribed for the Pre-University Course 1964–'65
MADRAS UNIVERSITY.

★

தழுவிய மொழிபெயர்ப்பு:

புலவர் இரா. ஏகாம்பரநாதன்
தஞ்சாவூர்.

Copies can be had from the Registrar,
University of Madras.

Price Rs. 1–25

முகவுரை

இந் நாடகநூல் தமிழ் மொழியின் வளர்ச்சி குறித்து எழுதப்பட்டதென்பதினும், மக்களின் உளநிலை காண உதவுமாறு எழுதப்பட்டதென்பதுண்மை. அரசர், அமைச்சர்களின் நிலைமை, பிரபுக்களின் தன்மை, ஆயர்களின் செய்கை, பெண்களின் போக்கு இவற்றை ஓரளவு இதில் காணலாம். கதைத் தொடர்பு சிற்சில இடங்களில் ஊகித்தறிந்து கொள்ளக்கூடிய அளவில் அமைக்கப்பட்டுள்ளது. கதை சற்று இலக்கியச் சுவை பெறுதலினும் பாத்திரங்களுடன் படிப்போர் ஒன்றுமாறு ஆசிரியர் அமைத்துள்ள தன்மை பாராட்டத்தக்கதாகும். பலவகை இயல்புள்ள மக்களின் போக்கை அறிந்து கொள்வதால் அது உலகினை நன்கு அறிய உதவுவதாகும்; வாழ்வுக்கு வழிகாட்டித் துணைசெய்வதாகும். அன்றியும் வாழ்வுடன் ஒட்டிய தமிழ் மொழிக்கு இது போன்ற மொழிபெயர்ப்பு இன்றியமையாதது என்பதும் எனது கருத்து. ஆதலின் தமிழ் மரபுக்கேற்பப் பல நிகழ்ச்சிகளைத் திருத்தியும் மாற்றியும் தந்திருக்கின்றேன். இதில் என்னை ஊக்கி உதவி செய்த திரு. கோபால ராவ், B. A., L. T. அவர்களுக்கு எனது நன்றியை உரித்தாக்குகின்றேன்.

இரா. ஏ.

மதிப்புரை

தஞ்சாவூர் வீரராகவ உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் திரு. இரா. ஏகாம்பரநாதன் அவர்களால் ஷேக்ஸ்பியர் நாடகமாகிய "விண்டர்ஸ்டேல்" தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளதை நான் நன்கு படித்துப் பார்த்தேன். மொழி பெயர்ப்பு மிகவும் பொருத்தமாக உள்ளது. ஷேக்ஸ்பியர் எண்ணங்கள் ஆங்கிலத்தில் அமைந்திருப்பதை யொட்டியே தமிழில் அமைந் திருப்பதையும் நான் அறிந்தேன்.

ஆங்கிலத்தில் உள்ள நாடகபாத்திரங்களுக்கேற்பப் (பொருளாலும் ஓசையாலும்) பெயர்கள் அமைக்கப் பட்டுள்ளன. உதாரணமாக "கேமிலஸ்" என்ற பிரபுவுக்குக் கமலாபதி என்றும், "ஆண்டிகோனசுக்கு" ஆனந்தன் என்றும், "பிளாரிசல்" என்பவனுக்குப் புட்பகாந்தன் என்றும், "பாலினே" என்ற பெண்ணுக்கு முத்தம்மாள் என்றும், "பர்டிட்டா" என்பவளுக்கு மாசிலாமணி என்றும், "சிசிலித்" தீவுக்குச் சிம்மளத் தீவென்றும் பெயர் இட்டிருக்கின்றார்.

மேலும், ஷேக்ஸ்பியர் பூகோள இயல்புக்கு மாறாகக் கடற்கரையற்ற "பொகிமியா"வைத் தன் நாடகத்தில் கடற்கரையுடன் காட்டுகிறாராதலின், அக் குறையை நீக்கிக் கடற்கரையுடன் கூடிய சிம்மளத்தை இவர் மொழிபெயர்ப்பில் அமைத்திருப்பது போற்றத்தக்க தாகும்.

மாரிக்காலத் தொடக்கத்தில் அந்த நாட்டு மக்கள் ஆட்டு மயிர் கத்தரித்தலை மிகவும் விருப்பத்தோடு செய்வார்கள் என்பதனை, ஷேக்ஸ்பியர் நான்கு ஐந்தாம் அங்கங்களில் விவரமாகக் கூறியிருப்பதால், விண்டர் ஸ்டேல் என்று அவர் பெயர் வைத்தார்போலும் என்பர். அதனையொட்டியே மாரிக்காதை என்ற பெயர் வைக்கப் பட்டுள்ளதும் பொருத்தமே.

இந்த நாடகத்தின் முதல் மூன்று அங்கங்களில் ஒரு கணவன் தன் மனைவியின் மேல் வீண் ஐயம் கொள்வதால் ஏற்பட்ட தீங்குகள் நன்கு விவரிக்கப்பட்டுள்ளன. அவை மனோன்மணியின் சிறை, வீரகேசரியின் மரணம், ஆனந்தன் அழிவு, அவனது (ஐயுற்ற கணவனின்) பதினாறு ஆண்டு வேதனை முதலியனவாம்.

ஷேக்ஸ்பியர் நாடகங்களுள், இது அவரது பிற்காலத்தது என்பர். முதலில் எழுதிய அவரது நாடகங்களில் (மகிழ்ச்சி முடிவில் முடிக்கப்படும் நாடகங்களில்) இது பெரிதும் மாறுபட்டுள்ளது. முதலில் எழுதப்பட்டவைகளில் நிகழ்ச்சிகளை ஒட்டியே மகிழ்ச்சி முடிபினைக் கூறுவர். இது ஷேக்ஸ்பியரின் கடைசி நாடகமாகிய (இவரால் மொழிபெயர்க்கப்பட்ட புயல் – நாடகம்) 'டெம்பஸ்ட்' டுக்கும் முந்தியது. டெம்பஸ்ட்டில் நாடக இலக்கணத்துக்குப் பொருந்த ஒரு இரவில் நடிக்கத்தக்க முறையில் சிறந்த நாடகத்தைச் செய்து முடித்துவிட்டுப் பிறகு நாடகம் எழுதும் வேலையையும் முடித்துவிட்டார் என்று அவரைப்பற்றிப் பலர் கூறுவர்.

ஆனால் இது மாறுபட்ட முடிபினைக் கொண்டுள்ளது என்பர். அதாவது, இவரது அனுபவ முதிர்ச்சி, நம் நாட்டு விதியின் கொள்கைப்படி வினைப்பயன் விடாது என்பதனை ஒட்டி நாடகத்தை முடிக்கச் செய்கின்றது எனலாம். நிகழ்ச்சிகளை அடுத்தே மகிழ்ச்சி முடிபினைக் கூறாமல் கற்புடைய தன் மனைவியை வீணே ஐயுற்ற காரணத்துக்குத் தண்டனையைத் தாராளமாக அரசனுக்குக் கொடுத்துப் பதினாறு ஆண்டுகளுக்குப்பின் இன்ப முடிபினைக் காட்டுகிறார். இந்த முறை முந்திய வேறு நாடகங்களில் காணமுடியாது

இதில் ஆனந்தன் மரணத்தை ஷேக்ஸ்பியர் அமைத்ததற்குக காரணம் தெரியவில்லை. ஆனந்தனின் மனைவி முத்தம்மாளுக்கு மறுமணம் செய்தது கவியின் இளகிய மனத்தைக் காட்டுகிறது.

முத்தம்மாளின் சூழ்ச்சிகள் மிகவும் வியப்பினைக் கொடுப்பதாகவும், நுனித்தறியக் கூடியனவாகவும் உள்ளன. பதினறுயாண்டுகள் அரசியைத் தன் வீட்டில் மறைத்து வைத்திருந்ததும், அது ஓர் சிலையெனக் கூறியதும், அரசர் முதலியோர் முன் சிலையைப் பேசச் செய்ததும் ஓர் கலை தான்.

ஆட்டு மயிர் கத்தரிக்கும் விழாவுக்கு அங்கமாக ஆடல் பாடல் நிகழ்த்தலும், பெண்கள் தெருவில் சாமான்கள் வாங்குதலும், விழாக் காண வந்தவர்களுக்கு ஏற்பத் தரமறிந்து பூக்கள் வழங்குதலும் பிறவும் ஊன்றிப்பார்த்துச் சுவைக்கத் தக்கன.

இறுதியாகப் பதினறு ஆண்டுகளின் நிகழ்ச்சிகளை இணைப்பதற்குக் காலனையே ஒரு நடிகனைக் கொண்டு முடிக்கின்றது இன்புறத்தக்கது.

T. இராசமையங்கார், B.A., L.T.
தஞ்சைக் கலியாணசுந்தரம் உயர்நிலைப்பள்ளி,
ஓய்வுபெற்ற தலைமையாசிரியர்,
10—8—1957.

கதைச் சுருக்கம்

மதுரை மன்னன் நரசிம்மனும் சிம்மள மன்னன் கயவாகுவும் பள்ளித் தோழர்கள், சிம்மளன் மதுரைக்கு விருந்தினனாய் வந்திருந்து தன் ஊருக்குச் செல்ல விடை கேட்டான். நரசிம்மன் தனது நண்பனைச் சில நாள் தன்னுடன் தங்கிச் செல்ல வற்புறுத்தியும் கேளாமையால் தனது மனைவி மூலம் தங்கவைத்தான். தனது பணியை நிறைவேற்றிய தன் மனையாள் மனோன்மணியிடம் அவன் ஐயுறவு கொண்டான். கமலாபதியாகிய தனது மந்திரி மூலம் கயவாகுவை நஞ்சிட்டுக் கொல்லப் பணித்தான். கமலாபதி கயவாகுவின் தூய்மையும் மனோன்மணியின் கற்பும் உணர்ந்தவனாதலின் கயவாகுவையும் காத்துத் தானும் சிம்மளம் சென்றான். நரசிம்மனின் ஐயம் கோபமாக மாறியது. கருவுற்றிருந்த தனது மனைவியிடமிருந்து சிறுவன் வீரகேசரியைப் பிரித்து மனைவியையும் சிறையிலடைத்தான். அவள் ஒழுக்கத்தை அறிய விசாரணை நடத்திப் பழனிக் கோவிலுக்கு இரு தூதர்களை அனுப்பினான். ஆனந்தன் மனைவி முத்தம்மாள், மனோன்மணிக்காகப் பரிந்து கொண்டு சிறை சென்று அங்கிருந்த பச்சிளங்குழவியை எடுத்துக் கொண்டு சபை சென்று அரசனுடன் வாதாடுகிறாள். அரசன் குழந்தையைக் கண்டு அமைதி பெறாமல் அதிகம் சினந்து ஆனந்தனையே அக்குழந்தையைக் கொல்ல ஆளாக்குகின்றான். ஆனந்தன் தனது மனைவியால் தரப்பட்ட உடை, பொருள், கடிதம் இவற்றுடன் குழந்தையைச் சிம்மளத் தீவில் விட்டுத் திரும்பும்போது அங்கேயே கரடியால் தின்னப்படுகிறான். கப்பலும் கடலில் அமிழ்கிறது. மனோன்மணி சபைமுன் விசாரிக்கப்படும்போது பழனி வாக்கு மனோன்மணி குற்றமில்லாதவள் என்று வருகிறது. அரசன் அதை நம்பாமல் இழித்துரைக்கிறான். அப்போது வீரகேசரி இறந்ததாகச் செய்தி வருகிறது. உடனே அரசன் மனம் மாறுகிறது. மனோன்மணி மயங்கி வீழ்கிறாள். முத்தம்மாள் மனோன்மணியை எடுத்துச்சென்று காப்பாற்றுகிறாள். ஆனால்

ம்மாள் அரசனிடம் அரசி இறந்ததாக நம்பும்படிச் கிருன். அரசன் மிகவும் வருந்திக்கொண்டிருக் ன்.

சிம்மள தேயத்தில் குழந்தை மாசிலாமணி என்ற பெயருடன் கந்தக்கோனர் வீட்டில் வளர்கிருள். கயவாகு வின் மகன் பூக்காந்தன் மாசிலாமணியுடன் காதல் கொள்கிருன். கோனர் வீட்டிலேயே குடியாயிருப்பதைப் பொறுக்காமல் தந்தை, கமலாபதியுடன் மாறுவேடம் பூண்டு கோனர் வீட்டுக்கு வருகிருர். அன்று ஆட்டு மயிர் கொய்யும் திருநாள். பூக்காந்தன் மாறுவேடத் தந்தையாரை யறியாமல் மாசிலாமணியை மணக்க முனே கிருன். வேடம் மாற்றி அரசன் மணத்தைத் தடுக்கின் ருன். பூக்காந்தனும் மாசிலாமணியும் கமலாபதியின் கடிதம் கொண்டு மாறுவேடத்துடன் மதுரைக்குப் பய ணம் ஆகின்ருர்கள். கண்ணனுடைய ஏற்பாட்டால் கோனர்களும் மாசிலாமணி வந்த கப்பலிலேயே மதுரைக்கு வருகின்ருர்கள். கமலாபதியின் கடிதத் துடன் பூக்காந்தன் நரசிம்மனேக் காணுகிருன். அடுத்த ப்பலிலேயே சிம்மளனும் கமலாபதியும் மதுரைக்கு வரு கின்றனர். நரசிம்மன் மாசிலாமணியைப்பற்றிய செய்தி களைக் கயவாகு மூலம் அறிகிருன். முத்தம்மாள் தன் வீட்டில் உள்ள சிலேயைக்காண அழைக்கிருள். யாவரும் சென்று சிலே மனோன்மணியாக ஆவது கண்டு வியப்புறு கிருர்கள். முத்தம்மாள் கமலாபதியுடன் வாழ வேண்டப் படுகிருள்.

நடிகர்

நரசிம்மன்	—	மதுரை அரசன்
வீரகேசரி	—	அரசன் மகன்
ஆனந்தன் கமலாபதி இரத்திஞகரர் தேவதாசு	—	மதுரை அரசனின் அமைச்சர்கள்
கயவாகு	—	சிம்மள அரசன்
புட்பகரந்தன்	—	சிம்மள அரசனின் மகன்
மேகநாதன்	—	சிம்மளப்பிரபு
கந்தக்கோஞர்	—	சிம்மள இடையர்
அப்புக்கோஞர்	—	கந்தக்கோஞர் மகன்
கண்ணன்	—	விகடன்
தோழிகள் மாலுமிகள் சிறைகாப்போர் கணக்கர்	—	உரிய இடங்களில் வருபவர்
மாசிலாமணி	—	நரசிம்மன் குழவி
மஞேன்மணி	—	நரசிம்மன் மனைவி
முத்தம்மாள்	—	ஆனந்தன் மனைவி
கோதை பொன்னி அமெரி	—	வாழ்த்துவோர்

மதுரை அரண்மனை — மேகநாதன், கமலாபதி

மகநாதன்: கமலாபதி! தாங்கள் சிம்மளத்திற்கு வர வேண்டுகிறேன். அடுத்த திங்கள் அங்கு அனுராத புரத் திருவிழா. மதுரைக்கும் சிம்மளத்திற்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விழாவின்போது நேரே காணலாம். எம்மரசர் இங்கு வந்து நெடிது தங்கினர்; அவர் விரைவில் மீளவேண்டிய அவசியம் ஏற்பட் டுளது. தங்கள் காதுக்கும் சிங்கபுரச் செய்திகள் எட்டியிருக்குமே?

கமலாபதி: ஆம், மதுரை மன்னரும் ஒரு முறை சிம் மளம் செல்ல எண்ணியிருந்தனர். இக்கோடையி லேயே அக்கடமையை நிறைவேற்றவும் முடிவு செய் துள்ளார்.

மேக: யாம் (சிம்மளத்தார்) மதுரையரைப்போல் நாக ரீகச் [illegible] பனம் [illegible]துல் து[illegible]தவ[illegible]லர். விருந்தோம்பலும், [illegible] பாளையில் பால் இறக்கித் தருவதுதான்! ஒன்பது திங்களாய் இங்கு துய்த்த இந்திரபோகம் அப்பப்பா ...

மலா: இது என்ன? இம்முகமனுல் செருக்கல்லவா உண்டாகும். அவ்விதையை இங்கே தூவவேண்டாம்.

மேக: உண்மையைச் சொன்னேன். மதுரை செழுமை மிக்கது; அரசரும் அதில் விளைந்தவர். யாம் ஆவின் பாலும், முப்பழமும் கசப்பொருவிய ஐஞ்சுவையுணவும் அருந்தினேம். எயிலாம் மதுரம்.

கமலா: மதுரை மதுரமாக விருந்தோம்பியதில் வியப் பில்லை. இலக்கியம் நிறைந்த சிம்மளப் பண்பாடு முக மன் பேசுவதோ என எண்ணும்போது, அதுவே வியப்பைத் தருகிறது.

மேக: உற்றுநோக்கின் எதில் வியப்பில்லை? நான் நாளையே எம்மன்னனை அழைத்துக்கொண்டு சிம்மளம்

செல்லல் வேண்டும். தாங்கள் தட்டின்றி விழாவிற்கு வர நேரில் மீண்டும் வேண்டுகிறேன். மரப் பால் அருந்துவோம் மது மகிழ்ச்சி, மதிமகிழ்ச்சியாய் உலகினை மறக்கச்செய்யும். அதனால் மதுரைக்கும் சிம்மளத்துக்கும் உள்ள வேறுபாடும் மறையும்.

கமலா : ஒருமைப்பாட்டிற்கு இதுவா வழி ? இறப்பில் எல்லாம் ஒன்றென்பர். இவ்விறப்பு எமக்கு வேண்டாம். மதுரையர்க்கு இளநீர், தேங்காய் மிகவும் பிடிக்கும். அவற்றில் மயக்கம் அங்கும் இராதல்லவா ?

மேக : சோதனைக்கு வழியில்லை. நும் விரவினை எதிர் பார்த்தே ஒரு பானைகூட மிஞ்சாது யாவுங் கலயங்கட்டி மறைக்கப்பட்டுள்ளன. கண்ணில் ஒரு குரும்பைகூடப் படாது. மயக்கமும் இராது.

சுமலா : நட்பினர் நஞ்சு பெயக்கண்டும் உண்டு அமைவர். அதுவே நாகரீகம் விருந்தோம்பலில், வேறு வழியில்லை ஊர் பேரற்றுக் கவலையும் துன்பமும் ஒழித்துக் கடவுளரைப்போல் இருக்க உதவுவதாகவும் சொல்லப்படும் கள்ளைக் குடித்துக் காண்போம்.

மேக : கண்டது தான். மெய்ம்மறந்து மதியிழந்து உணர்விழந்து இறப்பில் ஊழிக்காலம் கிடத்தலினும் அறிவண அறிந்து நல்லுணர்வுடன் சில பொழுது வாழ்ந்தாலும் போதுமே !

கமலா : ஆருயிர் நண்ப ! நும் முகம் உளத்தைக் காட்டுவதில் தவறியதெனினும் நும் உரையே என் செவிக் கண்ணுக்கு நும்மை நன்கு காட்டியுள்ளது. அரசாங்க ஊழியத்தில் இருப்பவர் மெஞ்ஞானிகளாகவும் இருத்தல் சாலும் எனல் நும் மூலம் உணர்ந்தேன். திருநீறு ஒட்டாக் கழற்காயும், தண்ணீர் ஒட்டாத தாமரை இலையும் உவமேயமாக நும் மூலம் கண்டேன்.

மேக: பாடத்தை நான் திருப்பிப் படிக்கவேண்டியது தான். முகமன் எதற்கு ? இவை எம்மரசைச் சாரும். முடிபோல் குடியென்பது நாமறிந்த செய்தியே. எம் மரசன் மண்ணிலிருந்து கொண்டே விண்ணையும் பிற வற்றையும் உளத்தால் அறிபவர். சிம்மளத்தில் விரைவில் நேர்வோம்.

அங்கம் 1] [களம் 2

மதுரை அரண்மனை — மற்றொரு பக்கம்

[தேவதாசன் — ஆனந்தன்]

தேவதாசன்: ஆனந்தரே! தங்களுக்கு எண்ணற்ற வேலைகள். அரசனின் பற்றுக்குப் பற்றான பெருமை யில் வேலைத் தொல்லைகள் துன்பம்தரா; ஊக்கத்தை யும் மகிழ்வையும்தான் தரும். தாங்கள் செய்த ஏற்பாடுகள் பொருமைக்காரர்களையும் புகழச் செய்யும்.

ஆனந்தன்: இவ்வுடல் அரசனது உணவு. உணர்வது கடமையுணர்ச்சி. ஆற்றலும் திறமையும் நம்மை யறியாமலே நாம் அடைகின்றோம். அஃதிருக்கட்டும்; நமது இளவரசன் வீரகேசரி பருவத்துக்கொவ்வா உயர் அறிவும் நடப்பும் பெற்றிருக்கிறான். கல்வியறிவு இன்றெனின் ஏரல் எழுத்தாய் மதிப்பிராது. அவரைப் பள்ளியில் வைத்துப் பல்கலைகளும் பயிற்றுவிக்கப் பெருஞ் செலவிட அரசர் எண்ணியுள்ளார். செலவால் குடிகள்தானே பயன்பெறுகின்றனர். குடி உயரக் கோன் உயர்வான்.

தேவ: உண்மை யாவர்க்கும் நன்மைதான். சிற்பம், ஓவியம், இசை கூத்து, இலக்கியம் முதலிய கலைகளின் வளர்ச்சியில் அரசர்க்கும் பிரபுக்களுக்கும் பங்குண்டு. பொழுதுபோக்குக்காக அல்ல, மக்களின் வளர்ச்சிக் குரிய அக் கலைகளைக் கற்றவர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ...

ஆனந் : பொது மக்களுக்கும்தான் பங்குண்டு. ஆனல் கலைவளர்ச்சி செல்வரிடம் விடுதல் எவ்வளவு தவருே அதைவிட எளிய பொதுமக்களிடம் விடுதலும் தவருகும். மக்கள் வளர்ச்சியைக் கருதும் அறிவுடைப்பணியாளர்களிடம் விடப்படுதல் வேண்டும். இல்லையேல் நன்கு துய்க்கக்கூடிய கலைகள் அழிந்து பொருளற்றவையே மலியும்.

தேவ : துய்ப்பவர்களில் பலவகையுண்டு. அவர்கட்கேற்பக் கலைகளின் தகுதி, குறைதலோ, மாறுதலோ கூடாதுதான். சிம்மள மன்னனின் வருகையால் நம்மவர் (வயிற்றுக்கு மட்டும் அல்ல) ஐம்புலன்களுக்கும் நல்ல உணவு பெற்றனர்; துய்த்துத் திளைத்தனர். நரசிம்மனுக்கும், கயவாகுவுக்கும் அமைந்த நட்பு ஓர் இரத்தத்தில் சுரந்து ஓர் வயிற்றில் தங்கிப் பிறந்த உடன்பிறப்பினும் உயர்ந்ததாக உள்ளது.

ஆனந் : உடன் பிறப்பு பழக்கத்தால்தான் வலியுறுகிறது. ஆனல் பழக்கத்தினும் மற்ற யாவற்றினும் மேலாக நட்புக்கு ஒத்த உணர்ச்சியே சிறந்த கருவியாம். இவர்கள் நட்பில் நானறிவது—இளமையில் இருவரும் குருகுல முறையில் கல்வி பயின்றனர். பின்னர் அரசியல் பொறுப்பில் பிரிந்தும் திருமுகங்கள் எழுதிக்கொண்டனர். கொடைப் பொருள்களை ஒருவர்க்கொருவர் உதவிக்கொண்டனர் அரசியல் பதிலிகள் மூலம் உசாவிக்கொண்டனர். அஃதிருக்கட்டும்; இப்போது நமது மன்னருக்குக் கயவாகுவைச் சிம்மளத்துக்கும் அனுப்ப மனமேயில்லை.

தேவ : அதனல் நம்போன்ருேர்ட்குப் பன்னள் விருந்துண்டு. வாழ்க இளவரசன்! இளந்தலையில் முதுபுலமை நான் வேறெங்கும் கண்டதில்லை. அவரைப் புகழாதார் யார்? சீவனற்ற கிழங்கள்கூட அவரது முடிசூட்டு விழாவைக் கண்டுதான் பின்னர் உயிர்விட

வேண்டுமென்று தம்தம் உயிரை வாயால் கௌவிக் கொண்டிருக்கின்றனர்.

ஆனந் : அதுமட்டுமா? முடிசூட்டு நிகழ்ந்துவிட்டால் அரசருக்கு ஓர் ஆண்பிள்ளை பிறக்கின்ற வரையில் தம்தம் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டிருக்கவே முயல்வார்கள். இப்படியே மேலும் மேலும் ஏதேனும் ஒரு செயலை முன்னிருத்தி அதனைப் பிடித்துக்கொண்டு தம வாழ்நாளைப் பெருக்கிக்கொள்ளுவோர் பலர்.

தேவ : மிகவும் சரியாகக் கூறினீர். நிற்க, இன்று சிம் மளர் ஊருக்குத் திரும்புவார். உமக்கும் அலுவல்கள் இருக்கும். வணக்கம்.

அங்கம் 1] [களம் 3

அரண்மனை – சபை

[நரசிம்மன், மனோன்மணி, வீரகேசரி, சுபவாகு, கமலாபதி, மேகநாதன்]

சுபவாகு : நண்ப! நான் உமைக் காண இங்கு வந்த பின்னர் சந்திரன் ஒன்பது திங்கள் கடந்தான். எனது அரியாசனமும் மாசு படிந்திருக்கும். நுமது வர வேற்போ கூறப்புகின் நாளும் போதா, நானும் போதேன். நான் இரவில் முழுமதி—நீ பகலில் பருதி. உன்னைச் சார்ந்தே எனது ஒளி. நீயின்றி நான் வெறும் வட்டம்; பயனற்றவன். ஆனல் உனனை முன்வைத்து நின்றே மதிப்படைகிறேன. ஆதலின் வணக்கம் என ஒருமுறை கூறுகிறேன். உன் முன் என்னைப் பல வட்டங்களாய் அமைத்துக்கொணடு பல்லாயிரம் வணக்கம் பெறுவாய்.

நரசிம்மன் : இவையெல்லாம் எதற்கு? வணக்கம் இருவருக்கும் பொது.

கய : நண்ப! நான் நாளைப் பயணம். ஆதலின் இன்றே பிரிவு வணக்கம். அரியில்லாக் காட்டில் நரிகளின் ஊளை கடலை முட்டும் என்பர். அரசனில்லா நாட்டில் குடிகளின் கலவரம் கடலையும் தாண்டலாம். விருந்தும் மருந்தும் மூன்று நாள் என்பர். நான் இங்கு வந்து எத்துணை மூன்று நாள்—தொண்ணூறு மூன்று நாட்கள் ஆகிவிட்டன. நான் மட்டுமா? அமைச்சர்கள், மெய்காப்பாளர். வீரர்கள், எவ்வளவு பெரிய தொகையினர்! எவ்வளவு ஏற்பாடு! எவ்வளவு செலவு! எதற்கும் ஒரு எல்லை உண்டு.

நரசிம் : கயவாகு! எனது ஆற்றலை நீ நன்கு அறிந்திலை. எவ்வளவு மக்கள் வரினும் எத்துணை யாண்டுகள் இங்கிருந்தாலும் எமக்கு மகிழ்வேதான்; சுமையாகாது, விருந்தோம்பலும், அரசாளலும் சுமையாக எண்ணுபவர் சிலர் உண்டு.

கய : இல்லை; அதற்காக இல்லை. திரும்பவேண்டிய காலம் வந்துவிட்டது.

நரசிம் : இன்னும் ஒரு வாரம் மட்டும் தங்கிச் செல்க.

கய : நான் ஆளும் கடமையில் பிரிய எண்ணுகிறேன். நீ விருந்தோம்பலில் எனக்குப் பணிக்கின்றாய். நான் பிரிவது உன் சொல்லை மீறியதாகாது. நான் இங்கு இனித் தங்குவதில் பொருளில்லை. நீ அங்கு அனுராதபுரத் திருவிழாவிற்கு வரும்போது மீண்டும் கூடி மகிழ்வோம்.

நரசிம் : மறுக்கவேண்டாம், ஒரு மூன்று நாளேனும்...

கய : நண்ப! உன் சொல்லை மீறவோ, உன் அன்பைப் புறக்கணிக்கவோ என்னால் இயலாது. சிங்கபுரத் தகவல் பற்றியே நான் முனைந்து நிற்கின்றேன்.

நரசிம் : மனோன்மணி, என்ன மோனம். நீயும் வாய் திறந்து கேள். தம்பி இணங்குவான்.

மனோன்மணி : தென்னவர் தம்திறம் அறியாரோ, மந்திரம் எதற்கு? சிங்கபுரத்துக்கு ஒற்றரை அனுப்பி உண்மை கொணரச் செய்தால் சிம்மளர் தங்குவார்.

நரசிம் : உண்மை! கமலாபதி, ஆள் அனுப்பிப் புலன் அறிந்துவரச் செய்க.

மனோன் : வேறென்ன? ஒரு வாரம் கழித்துச் சென்று மகனைக் கண்டு மகிழலாமே. எனது கணவர் அனுராத புரம் வந்து கெடுவிற்குப் பின்னரும் ஒரு வாரத்துக்குப் பதிலாக ஒரு திங்கள் முழுதும் வேண்டுமானாலும் இருக்கட்டும். என்ன சம்மதந்தானே?

கய : முடியாது. உண்மையில் நான் தங்கமுடியாது,

மனோன் : தங்க முடியாது எனத் தங்க முடியோன் கூறின் யாம் செயத் தக்கதொன்றுண்டு. தாங்கள் அன்பர்களின் சொற்சிறையில் அடைபட மறுத்தால் அரசாங்கத்தின் கற்சிறையில் ஒரு வாரம் அடைபடு வது உறுதி. நட்டார்க்கு அடங்குதலும், மேற்சென் றிடித்து அடக்குதலும் இரண்டும் நீதிதான்.

கய : நும் இருவரின் மனச் சிறையிலும் அடைபட் டுள்ள நான் நும் மனமார்ந்த பிரிவுரைக்கும் பின்னர் ஒரு வாரம் கழித்தே செல்வேன்.

(மனோன்மணியும்-சிம்மளனும் ஒருபுறமாக)

மனோன் : (நெருங்கி) ஏழு நாட்கள் உண்டல்லவா? நீங்கள் இருவரும் பள்ளித தோழர்கள். உங்கள் இரு வரில் பெறும குறும்பர் யார்? சாது யார்? இப்போ தல்ல இளமையில்.

நரசிம் : சிம்மளர் இணங்கினரா?

மனோன் ; ஐயம் ஏன்? ஒருவாரம் இங்குதான்.

சிம்மளன் : யாம் இருவருமே சாதுதான். தீமை செய்யோம். கருத்திலும் இல்லேம். இளமை கழிய வயது முதிர்ந்து அரசியல் பொறுப்பும் பெற்ற பின்னர்தான் உலகம் பொய், வஞ்சம், களவு, தீமை யாவும் நிறைந்தது என்பதனை யாம் இருவரும் அறிந்தோம்.

மனோன் : இவை யாவும் உண்மை தானே ?

சிம் : ஆம், முற்றிலும் உண்மைதான் கூறுகிறேன். அப்போது என் மனையாள் சிறுமி. உம் கணவரும் உம்மைச் சிறுமியாகத்தான் கண்டனர். வஞ்சனையற்ற உண்மை. யாங்கள் இருவரும் பிரம்மச்சரிய நிலையை வழுவாது காத்தோம்.

மனோன் : இல்லறம் தொடங்கிய பின்னர்தான் பிரம்மசசரியம் கெட்டதுடன் எல்லாமும் கெட்டுவிட்டன போலும் !

சிம் : மனம்போனபடி யெல்லாம் பேசவேண்டாம். மானிட இனத்திற்குப் பற்பல சோதனைகள். யாம் இருவரும் சோதனைகளில் வெற்றி பெற்றவர்கள் தாம்.

மனோன் : ஆகவே நீங்கள் இருவீரும் உடலில் உயிர் போல் உங்கள் துணைவிகளை வைத்து வாழ்வீர்கள்.

நரசிம் : (கோபமாக) என்ன, சிம்மளர் இணங்கினரா ?

மனோன் : (மகிழ்வுடன்) ஐயம் என்ன ? இன்னும் ஒரு வாரம் நம் அரண்மனையில்தான் முன்னமே சொன்னேனே !

நரசி : (முகம் சுளுக்கி) கலைமகளைப் படைத்து அவள் வசமான பிரமன்தான் நாக்கையும் படைத்தான். அது யாவற்றுக்கும் வெற்றிதரும் கருவி. நீ இப்போது வெற்றிகொண்டாய் ; ஆனால் இது இரண்டாவது.

மனோன் : (வியப்புடன்) இது இரண்டாவதா ? முதல் தரம் எது ? எப்போது ?

நரசிம் : (சிம்மளனைப் பார்த்துக்கொண்டு) சில ஆண்டு கட்கு முன்னர் ஓர் அரசன் உன்னைக் காதலித்தான் ; தொடர்ந்து மன்றாடினன். பின்னர் நீ உன் கை கொடுத்து "யான் உன்னுடையவளே" என்று உறுதி கூறினாய்: அதுதான் முதல் தடவை நீ வெற்றி கொண்டது.

மனோன் : பெண்ணாய்ப் பிறந்தவருள் என்னைப்போல் நலத்துக்குரியார் வேறு யாருளர்? ஒரு தரம் பேசி மதுரை அரசனைக் கணவனாய்க் கொண்டேன். இரண் டாம்தரம் பேசியதால் சிம்மளரைப் பின்னும் ஒரு வாரம் தங்கும்படி செய்தேன்.

நரசிம் : (பெருமூச்சுடன் தனிப்பேச்சு) நான் கேட்டது மூன்று நாள் ; இணங்கவில்லை. இப்போது ஒரு வாரத் திற்கு. மனமே, பதறாதே. என்ன! யார் கூப்பிட் டது? சூடு தாங்க முடியவில்லையே! என்ன? நான் உளறுகிறேனா? கடும் நட்புக் கண்ணைக் குத்தும் என்பார்கள். மிகவும் நெருங்கிவிட்டது தவறு. (நாடி யைப் பார்த்துக்கொண்டு) இதயம் அதிகம் துடிக்கின் றது. படபடப்பு மகிழ்ச்சியாலா ? தங்க வைத்ததில் ஏற்பட்ட துக்கத்தால் தான். வெளித் தோற்றததால் உண்மை யறிய முடியாதா ? புகை கண்டு தீயை யறிய வில்லையா ? எனக்கு மனைவி. அரசி. குடிகளின் தாய். அவளது நிறைந்த அருளுக்கும் இளகிய குணத்துக் கும் அளவேது? ஆயினும் அவை அளவுக்கு மிகக் கூடாது. ஒருவர் முகத்தை ஒருவர் பார்ததுக்கொள்ளு கிறார்கள். என்ன கண்ணாடியா தெரிவதற்கு. ஒருவர் கையை ஒருவர் ஏன் பிடித்துக்கொள்ளவேண்டும் ? வேட்டையாடிக் களைத்த நாய்போல் மூச்சு விடு வதின் பொருள் என்ன ? தலை எனக்கு எப்படியோ இருக்கின்றது. "வீரகேசரி"! (அப்பா, ஏன்) நீ என் பிள்ளை தானே ? (அதென்னப்பா — அப்படீன்னா) உண்மை. உண்மை. அக் குட்டையில் ஊறிய மட்டை தான். மூக்கைத் தேய்க்காதே தம்பி, அது எனது மூக் கின் நகல் என்று பலரும் சொல்லுகிறார்கள். தம்பி, நாம் எப்போதும் தூய வாழ்வையே மேற்கொள்ள

வேண்டும். எண்ணம்கூடத் தூய்மையாகவே இருக்க வேண்டும். இன்னும் கைகள் பிரியவில்லை. மக்களா இவர்கள்? இல்லை; நாற்கால் பசுக்கள். பசுவென்றுலே உயிருடைய மக்களைத்தான் குறிக்கும். தம்பி, நீ என் கன்று தானே ?

வீரகேசரி : அப்பா, உங்களுக்கு விருப்பமானுல் அப்படியே கூப்பிடுங்கள். ஆனுல் அப்பெயருக்காக என் தலையில் கொம்பு முளைக்குமோ !

நரசிம் : இல்லை. இப்போது இல்லை. நாம் இருவரும் இரண்டு முட்டைகளைப்போல ஒரு தன்மையாக இருக்கின்ருேம் என்று கூறக்கேட்டிருக்கின்றேன். ஆனுல் அவ்வாறு கூறியவர்கள் பெண்கள். அவர்கள் வாய்ச் சொல் எந்தப் பொருளைத் தருமோ? கருப்பு மை, கானல் நீர், பகடை இவற்றுக்குள்ள திரிபும், சூதும், இயல்பாகவே பெண்களுக்குண்டு' பயலே உன் நீலக் கண்ணுல் என்னை நேரில் பார். நிமிர்ந்து நில். இல்லை வேறுபாடில்லை. தாயன்பு என்பார்களே என் அன்பு ? ஏ, அன்பே! நீ ஒரு கொலைகாரன். உயிரை வைத்து உடலை வதைப்பவன், குரங்கு. உலகில் முடிவதெது முடியாததெது ; உனக்கு எல்லாம் ஒன்று. கனவும் நினைவும் ஒன்று. இல்லாததை உள்ளதுபோல் செய்வாய். உள்ளதை இல்லாததாகவே ஆக்குவாய். உனக்கு ஒப்பு நீயேதான். ஒன்றுமில்லாததிலிருந்தே ஒன்றை உண்டாக்கும் நீ சிறிய பிடிப்புக் கிடைத்தால் விடுவாயா? இப்போது ஏதோ செய்து விட்டாய். அதன் பலன் மூளை குழம்பிவிட்டது. மண்டையில் கொம்புகள் கூட ... ...

சிம்மளன் : மதுரை அரசே இது என்ன கோலம்?

நரசிம் : இதுவா ? அலங்கோலம்.

மனேன் : அவருக்குப் புத்தி எப்படியோ இருக்கிறது ?

சிம்ம : எனது நண்ப, அரசே !

நரசிம் : என்ன ? எப்படி ? எத்தனை நாள் தம்பி ?

மனோன் : ஏன் ? இப்படி யெல்லாம் ? என்ன தலை நோயா ?

நரசிம் : நோயின்றி உடலேது. (தனக்குள் உண்மையறிந்தால் ஆராய்ச்சி எதற்கு ? உறுதிகொண்ட உள்ளம் எதனையும் கண்டுகளிக்கும்; கலங்காது. சிலரே அதற்குரியவர்.) என் மகனது தோற்றம் என் இளமை நினைவைத் தந்தது. இருபத்து மூன்று ஆண்டுகள் உருண்டோடின. இதுபோல் பச்சைப் பட்டுடையும் பூட்டின வுடைவாளும் அழகுக்கென்று செய்வன ஆபத்தாகவும் முடியலாம். வீரகேசரி, பணம் என எண்ணி நத்தைக் காசுகளைக் கொள்வாயா ?

வீரகேசரி : இல்லையப்பா. நான் சண்டைதான் போடுவேன்.

நரசிம் : அது சரிதான். உனக்கு வெற்றிமேல் வெற்றி கிடைக்கட்டும். தம்பி, (சிம்மளனை) எனக்கு என் பிள்ளையிடத்துள்ள அன்பு உனக்கு உன் பிள்ளையிடம் உண்டா ?

சிம்ம : நான் ஊரில் இருக்கும்போது எல்லாம் அவன் தான். நான் விளையாடுவது, சிரிப்பது, பேசுவது எல்லாம் அவனுடன் தான். அவனே நண்பன் ; பகைவன் ; எனக்காகப் போரிடும் வீரன் ; அறிவுரை கூறும் அமைச்சன் ; என் சொத்தை யெல்லாம் சுரண்டித் தின்னும் திருடன். எல்லாம் அவனே. சூன் 22-ஆம் பகலை டிசம்பர் 22 போலச் சுருக்குவான். குழந்தை முகம் காணக் கோடி துக்கம் ஓடுமென்பர். அது என்னளவில் உண்மை.

நரசிம் : இதுபோது எனக்குத்தான் மிகவும் பொருந்தும், வேறு வழியில்லை. வீரகேசரி வா ; நாம் போவோம். தம்பி அண்ணியைக் கவனித்துக்கொள். மனோன்மணீ.

உனக்குத் தெரியாததென்ன? தம்பிக்கு ஒரு குறையும் இருக்கக் கூடாது. கவனித்துக்கொள். மதுரையில் எது அதிக விலை பெற்றதோ அது தம்பிக்கு வரவேற்பில் எளிதாய்க் கிடைக்கட்டும். யாம் போகின்றோம்.

மனோன்: தாங்கள் திரும்பி வரும்வரையில் யாங்கள் இருவரும் இத்தோட்டத்தில் இருக்கலாமா அல்லது உங்கள் பின்னே வரலாமா?

நரசி: வேண்டாம், இங்கிருங்கள். நும் விருப்பப்படி நடக்கலாம். பரந்த விண்ணின் கீழ் நீவிர் எங்கிருந்தாலும் கண்டுபிடிக்கமுடியும். (தனியே) மீன்பிடிப்பவர் முதலில் மீனின் விருப்பப்படியெல்லாம் தூண்டிலின் நூலைத் தாராளமாக விட்டுக்கொடுப்பர். என் எண்ணம் அவர்களுக்குத் தெரியாது. நீர் தலைக்கு மேலானால் சாண் போனால் என்ன? முழம் போனால் என்ன? என்ன ஆனால்தான் என்ன? கேசரி, நீ போ; போய் விளையாடு. அவள் அங்கே அதோ விளையாடுகிறாள். நானும்தான் ஆடுகிறேன். எனது ஆட்டம் திண்டாட்டம். பழிக்கு ஆளானவர்கள் முன்னரும் இருந்தனர், பின்னரும் இருப்பர். கோதம முனி முதல் அடுத்த வீட்டுச் சுப்பன் வரையில் எத்துணையோபேர் மனையாளைப் பறிகொடுத்தவர்கள். மனையாளின் குற்றம் தெரியாத வரையில் கவலையில்லை. முனியும் சுப்புவும் என்ன செய்ய முடியும்? வீட்டிற்குக் கதவுகள், தாள் பூட்டு எல்லாம் உண்டு. கதவைத் திறந்து வலுவில் வீட்டிற்குள் பட்டிகள் நுழைந்தால் அதற்கு யார்மேல் குற்றம் கூறுவது? அது மனையாள் குற்றமும் அல்ல! எனது நிலை அதற்கு முழுதும் மாறுபட்டது. ஐயமே ஒரு பெரிய நோய். அதற்கு மருந்து இல்லை. அதிலிருந்து மீள்பவரும் இல்லை. இம்மண்ணுலக வாழ்வே காமம் மிக்கது. அதனைத் தடுக்கக் காவலும் இல்லை, கோட்டையும் இல்லை. எவ்வாற்றானும் தடுக்க முடியாது. என் திசையும் திறந்தவெளிகள்தான். சிறந்த

நண்பர் என்பதும் இல்லை. அணுகிப் பழகின் அங்கு இடம் பெறலாம். நன்னெறியெல்லாம் நல்லுதவியாக மாறும். தாம் இருளிலும் உலகம் ஒளியிலும் இருந்த நிலை மாறும். தாம் ஒளியிலும் உலகம் இருளிலுமாகத் தம் குறையை உலகோர் காண்பர். எல்லாம் தத்தம் விருப்பில் இயல்பாக நிகழ்ந்துவரும். பயலே (என்னப்பா) நீ என்னைப் போலவே இருக்கிறாய், இது ஒன்றே எனக்கு அமைதி தரும். கமலாபதி, என்ன? தாங்களும் இங்குதானா?

கமலா: ஆம், இங்குதான்.

நரசி: கேசரி, போய் விளையாடு, உனக்கென்ன கவலை. கமலாபதி, சிம்மளர் பயணம் ... ...

கமலா: பயணமா? அதற்கு நங்கூரம் போட்டாய் விட்டது.

நரசி: உனக்குத் தெரியுமா?

கமலா: அதில் என்ன மறைவு. மூன்று நாள் மட்டு மல்ல ஒரு வாரம்.

நரசி: அதுவும் தெரியுமா?

[தனிப்பேச்சு, இனி மறைவென்ன? மிஞ்சிவிட்டது செய்திகள். மென்று விழுங்க வேண்டியதுதான். எனது அறியாமைக்கு வேண்டியதுதான்]. கமலாபதி, ஒரு வாரத்திற்கு எவ்வாறு இணங்கினார்?

கமலா: நமது நல்லரசியின் வேண்டுகோளால்தான்.

நரசி: இங்கு நல் என்ற நல்ல சொல் பொருந்தாது. அதையும் கெடுக்கவேண்டாம். நும் போன்ற நுண்ணறிவாளர்க்குத் தெரிவதுபற்றி கவலையில்லை. ஊர்ப் பொதுமக்களும் அறிந்திருப்பார்களோ?

கமலா : யாவரும் அறிந்ததுதான். சிம்மளர் புறப்பட்டார். அரசரது மூன்றுநாளைய வேண்டுகோளையும் மறுத்தார். பின்னர் ஒரு வாரம் தங்கினர். இச் செய்திதானே தாங்கள் கேட்பது ?

நரசி : ஒரு வாரம் தங்கக் காரணம் எதுவென்று பேசப்படுகிறது ?

கமலா : அரசியின் விருப்பத்திற்காக வென்றுதான்.

நரசி : போதும் போதும். இராணியின் எதற்கு ? கமலாபதி, நீ எனது தோழன்கூட, உன்னிடத்தில் நான் எதனையும் ஒளித்ததில்லை. பலதடவை நான் உன் மூலம் நல்லறிவையும் பெற்றிருக்கிறேன். தேற்றினய், திருத்தினய், இப்போது என்னை ஏமாற்றுகிருய். உண்மையை மறைக்கிருய்.

கமலா : இல்லை ; ஒருநாளும் இல்லை ; வீண் பழி.

நரசி : கமலாபதி, மீண்டும் கூறுகிறேன். பயமின்மை வேண்டும். சான்ருண்மை வேண்டும். சான்ருண்மையின் கால் கைகளைக் கட்டிப்போட்டுக் கெட்ட காரியங்களை நடக்கவிடக் கூடாது, எனது அரசியலில் உன்னை உயர்ந்தவொரு கிளையாக ஒட்டிவைக்க இணங்கினேன். இயற்கையில் ஒட்டு நல்ல பலன் தரும். நின்னளவில் தக்க பலன் இல்லையே. ஒருவேளை கண்ணெதிரில் நடக்கும் பெருஞ் சூதாட்டத்தில் உயர்ந்த பணயம் நழுவுவதைக்கண்டு மூளைக்குழப்பம் ஏற்பட்டு மூடனுய்விட்டாயா ?

கமலா : அரசே, ஒவ்வொருவரும் ஒவ்வொரு சமயத்தில் தத்தம் சொந்தக் காரியங்களில் மூடஞவதும், பயங்கொள்ளியாவதும் இயற்கையின் கோளாருக இருக்கலாம். ஆனல், நான் தங்களுடைய ஒவ்வொரு காரியத்திலும் ஒருபொழுதும் வேண்டுமென்று அவ்வாறெல்லாம் இருந்ததில்லை. நான் குற்றவாளியல்ல ; தாங்கள் மெய்ப்பிக்க முடியுமா ?

நரசி: கமலாபதி, காதில் பஞ்சிருக்கிறதா? கேட்கவில்லையா? கண்கள் கூழாங்கல்லா? பார்க்கவில்லையா? எல்லாம் வெளிப்படையாகத்தானே நிகழ்கின்றன. உன் மனதைக் கேட்டுப்பார். மனத்திலும் ஒருவகை எண்ணமும் நிலவவில்லை, பளிங்குபோல் இருக்கின்றது மனம் என்கின்ருயா? அப்படியென்ருல் முட்டாள் மனத்தின் இலக்கணம் அதுதான் என்பதையாவது அறிந்துகொள். இல்லையேல் கண், காது, மனம் யாவும் சரியாகத்தான் இருக்கின்றன. ஆனல், மெய்பார்த்து நகைக்கப் பொய்யாகிய கலையை நாணமின்றிக் கற்க முற்பட்டேன் என்று என்னிடம் காட்டுகிருய் போலும். இது சரியல்ல. இது வேண்டாம் பெண்ணென்ருலே மண் என்று வாதி, ஒரு சமயம் அது சரியாயிருக்கலாம். பெண்ணென்ருலே கன்னிப் பெண்களும் அப்படித்தான் என்ருல்—மணத்திற்கு முன்னரே தவருெழுக்கம் உள்ள சில பெண்களுடன் என் மனைவி — இல்லை மனேன்மணியின் பெயரையும் சேர்த்துவை.

கமலா: ஐயா, தாங்கள் கூறவும் யான் கேட்கவும் சிறிதும் தகாதவை. முயற்கொம்பு, ஆகாயப் பூ போன்ற—சிறிதும் உண்மையற்ற ஏதோ மயக்கப் பேச்சு. இப் பேச்சுக்கு நான் செவிடனுவது நல்லது.

நரசி: உண்மையற்றதா? முயற்கொம்பா? பாம்பு போல் ஒருவரை ஒருவர் பார்த்துக்கொள்வது; யானை போல் கைகளால் பிடித்துக்கொள்வது; உதடு துடித்தல், பெருமூச்சு விடுதல்; முணுமுணுத்தல், இரவு வருகையை எதிர்பார்த்தல்; உள்ளம் உருகுதல், பூனை ஊரவர் அறியக்கூடாதென்று தன் கண்களை மூடிக்கொள்வது போல் கண்களை அடிக்கடி மூடுதல் இவை எதனைக் காட்டுகிறது? இது பொய்யென்ருல், ஒன்றுமில்லையென்ருல் உலகில் வேறு எது உளது? (பூமியைப் உதைத்துக்கொண்டு) இப் பூமியே இல்லை; மேலே கவிழ்ந்துள்ள விண்ணும் இல்லை. சிம்மளமும் இல்லை; மதுரையும் இல்லை. இவ்விருவரும் இல்லை.

இல்லாத இவர்களிடத்தில் உண்மையாகவே குற்றம் குறை ஒன்றும் இல்லை தான்.

கமலா : அரசே, நோயிலிருந்து விரைவில் உளம் திரும்பட்டும்.

நரசிம் : நோய், யாருக்குநோய். நான் சொல்லு கிறேன் நம்பு. தவருன நடத்தைக்குத் தண்டனை தரல் வேண்டும்.

கமலா : அல்ல, தவறல்ல. தவறென்று நினைப்பது உண்மையல்ல.

நரசிம் : நீ பொய்யன், திருடன் கூட ; உடல், உரை, உளம் மூன்றிலுமே, பழுதுடையவன். நன்று தீது அறியும் அறிவு இல்லை. நடுநிலைமையும் கிடையாது. உன்னை நான் வெறுக்கிறேன். அவளது மனம் அழுகிவிட்டது. அவள் ஈரலும் அவ்வளவுக்கு அழுகி யிருந்தால் இன்னும் ஒருமணி நேரத்தில் உயிர் துறப்பாள்.

கமலா : நல்ல சோதனைதான். அவள் மனம் மாசுடைய தாகக் காணும் கண்தான் மாசு...........

நரசிம் : கண்ணில்லாவிட்டால் உலகில் பாவமே இல்லை. தன்னலம் கருதுவதுபோல அரசனுக்குச் செய்ய வேண்டிய தனது கடமையையும் செய்யும் வேலைக் காரர்கள் இருந்தால் அரசாங்கத்தில் தீமையே நிகழாது. கமலாபதி! எல்லாம் தவறிப்போயின. அருகில் வா. நீ சிம்மளனின் அடைப்பை தாங்கி யல்லவா? இது யாவருக்கும் கிடைப்பதல்லவே எனது அன்பின் வளர்ச்சியே உன்னைக் கீழிருந்து மேலே உயர்த்திக்கொண்டு வருகிறது. இப்போது நல்ல வாய்ப்பு. மண்ணை விண்ணும், விண்ணை மண்ணும் பார்த்துக்கொண்டிருப்பது எவ்வளவு தெளிவோ அது போல் தெளிவாகச் செய்யவேண்டிய தொன்றுண்டு. கொடிய நஞ்சினை உணவுடன் கலந்து தெளிவற்ற பகைவனுக்குத் தந்து எனது முழு அன்பையும் பெறுக. தெளிவடைந்தாய ? விரைவில்........

கமலா : (சிறிது சிந்தனைக்குப் பின்) அரசனே, எளிதில் நிறைவேற்றுவேன். ஆனால் ஒன்று. கொடுநஞ்சால் இங்கேயே முடிப்பதைவிடச் சிம்மளம் சென்றபின் வேலை செய்து முடிக்கக்கூடிய தெளிநஞ்சு கொடுப்பது நமக்கு நல்லதல்லவா? தங்கள் கட்டளையை நிறைவேற்றுவேன். இது அவசியமா? அரசி அப்படிப் பட்டவரா?

நரசிம் : என் வார்த்தையில் உனக்கு உறுதியில்லையா? மனதில்வைத்து அழுகிப்போவதைவிடக் காரியம் செய். எனது படுக்கையில் நான் வீணாகவா ஐயுறுவேன். எந்த மகனாவது தன் சொந்தச் செய்தியில் இம்மாதிரி ஐயுற்று அழிய—பழிபெற—முற்படுவானா? நான் பித்தம் கொண்டு பேசவில்லை, நான் கணவனாய்—நீதிபதியாய்—அரசனாய் உன்னிடம் பணிக்கின்றேன். என்ன கமலாபதி?

கமலா : நம்புகிறேன். நம்பவேண்டும். சிம்மளன் தென்னாடு (யமபுரம்) சென்றபின் தாங்கள், வீரகேசரியின் தாய் என்பதற்காகவேனும் மனோன்மணியை அரசியாக வைத்து நடத்தவேண்டும். அப்போதுதான் ஊர்வாய் அடங்கும். நட்பரசர்களும் முன்போலவே நடப்பர். இதுவே எனது வேண்டுகோள்.

நரசிம் : கமலாபதி, அரசியல் போக்கினை ஒட்டி நீ கூறியது நியாயத்திற்குப் பொருந்துவதாயும் இருப்பதை நான் முன்னரே எண்ணிவிட்டேன். வெளிப்படையாக நான் அவளிடத்தில் குற்றம் சாட்டப் போவதில்லை.

கமலா : அரசே, செல்லுங்கள். விருந்தில் மகிழ்ந்திருப்போர் முகத்துக்கு, முன்னறிவிப்பாகத் தங்கள் நடத்தையில்லாமல் கவனித்துக்கொள்ளுங்கள்—இயல்பாக நடந்துகொள்ளுங்கள். நான் என் காரியத்தைச் செய்து விடுவேன்.

நரசிம் : சரி. செய். அது நிறைவேறியதும் எனது உள்ளத்தில் பாதி உனக்குச் சொந்தம். தவறினால் உன் உள்ளம் உன்னாலேயே பிளக்கப்படும்.

கமலா : வணக்கம். வருகிறேன். (தனிப்பேச்சு) ஐயோ, இதற்குப் பேர் தான் 'தர்மசங்கடம்' என்பது. தலைவன் கட்டளை. தவறற்ற சிம்மளர். நஞ்சிட்டுக்கொல்வது. நமது விருந்தாயுள்ள சிம்மளர். (சிந்தனை) அரசனுக்கு அறிவு மயக்கம். மயக்கத்தில் வரும் வார்த்தை. எனது உத்தியோகம் உயர்வதாயிருந்தாலும் தெளிந்த நிலையில் நான் இதனைச் செய்யேன். இவ்வாறு அரசர்களைக் கொன்று உயர்ந்த வாழ்வு பெற்றதாகச் சரித்திரம் கூறுகிறதென்றாலும் அதனை நான் நம்பேன். அவ்வாழ்வு எனக்கு வேண்டாம். கொடுமை, வஞ்சனை இவைகளை அழைத்துக் கைப்பொருள் கொடுத்து இக்காரியத்தைச் செய்யென்றாலும் அவைகளும் செய்யா என்றே நம்புகிறேன். நான் இனிக் கணமும் இங்கு தங்கேன்.

(சிம்மளர் வருகை)

சிம்ம : *(தனிப்பேச்சு—ஏதோ விந்தையாகத்தான்* தோன்றுகிறது. மரியாதை, பொலிவு யாவற்றினும் *(மாறுதல்தான்)*. கமலாபதி, நற்பொழுதாகட்டும். (அரசே! வணக்கம்) அரண்மனையில் என்ன?

கமலா : புதிதாய் ஒன்றுமில்லை.

சிம்ம : நரசிம்மன் முகத்தில் பெரிய மாறுதல். அரசின் ஒரு சிறந்த பகுதியை இழந்தால் உண்டாகக்கூடிய அவ்வளவு மாறுதல். இப்போது அவரைக் கண்டேன். ஏதோ பேச நினைத்தேன். ஆனால் அவர் என்னைக் காணவே பிடிக்காத விதமாகச் சென்றார். என்னை இழிவாக எண்ணியிருப்பது போல அவருடைய ஒவ்வொரு உறுப்பும் கூறியது. இவ்வளவு மாறுபாட்டுக்குக் காரணம் என்ன? ஒன்றும் நிகழ்ந்ததாகத் தோன்றவில்லையே.

கமலா : நான் என்ன அரசனா? துணிந்து எண்ணவும் கூறவும் துணிவு என்னிடமில்லையே.

சிம்ம : மருத்துவ நூலோ, உள நூலோ எனக்குத் தெரியாது. ஆனல் காரணம் உனக்குத் தெரியும்போல் உன் பேச்சால் அறிந்தேன். உன் முகம் இப்போது எனக்கு உறுதிப்படுத்துகிறது உன் முகக்கண்ணுடி யில் உனது உள்ளமும் தெரிகிறது. எனது உருவமும் தெரிகிறது. என் உருவில் சிறு மாறுதல் காண்கின் றேன். கண்ணுடி காட்டுவதைக் காண்கின்றேன். ஆத லால் அக்காரணத்தில் என் சம்பந்தமும் உண்டா?

கமலா : ஆம் இது ஒரு புதுமையான நோய். வெகு சிலரைத்தான் இந்நோய் பற்றும். நோய்க்குப் பெய ரும் இல்லை. மருந்தும் இல்லை மருந்துவருக்கும் இதில் வேலையில்லை. நோயுற்ற நும்போன்றவர்களிடமிருந்து நோயாகப் பரவுவதாகவும இருக்கின்றது.

சிம்ம : கமலாபதி, என்ன! நான் திட்டிவிடம் போன்ற நச்சுவா? திடமான என் காட்சியால் பிறர் நோயடை வதா? இல்லை. எம் பெற்ரேர் தம் தூய குருதியையும் உயர்ந்த கல்வியையும் தந்து நன்னடத்தை உறுதியை யும் தந்திருக்கின்றனர். எனது காட்சியால் பிறர் நன்மையே அடைவர். நான் நும்மை மன்ருடிக் கேட்டுக்கொள்ளுகிறேன்; நான் அறியவேண்டியவை உண்டேல் அறிந்து கொள்ளாமல் இருப்பது அறி வுடமை ஆகாதல்லவா? அறிவு ஒளி உருவம் அல் லவா? இருளில்—மறைவில் இருப்பதை ஒளிகொண்டு காண்போம்.

கமலா: காணவேண்டியதுதான்; காட்ட என் நாவிற்குச் செயல் இல்லை. நா எழவில்லை. பேச அஞ்சுகிறது; நாணுகிறது.

சிம்ம ; எனக்கு நோய் இல்லை. ஆனல் என்னிடத்தி லிருந்து நரசிம்மனுக்கு நோய் பரவியது என்ற உமது நாவுக்குத்தான் ஏதோ நோய்போல் தோன்றுகிறது. நரம்பற்ற நாவுக்கு நோய் ஏது? எப்படியும் நான் அறிந்தே ஆகவேண்டும். கமலாபதி, நமது

பதவியை மறப்போம். இருவரும் மனிதர்கள் என்ற நிலேயில் பேசுவோம். மனிதநிலேயில் இரக்கம், உதவி, ஒற்றுமை காண்போம். ஏதாவது தீமை உண்டா? அணிமையிலா? சேய்மையிலா? தடுக்க இயலுமா? அனுபவித்துதான் ஆகவேண்டுமென்ருல் அதனே எளிமையாக்குவதற்கு வழியுண்டா? கணமும் தாழ்க்க லாகாது. விரைவில் கமலாபதி,

கமலா : நான் சரியான அமைச்சன் அல்லன்; கடமை தவறியவன். ஆனல் மதுரை அரசின் மாறுதலினுல் நான் மனிதனுகிறேன். சொல்லிக்கொண்டிருக்க நாழி யில்லே. சொல்லும் செயலும் ஒன்ருய் நிகழவேண்டிய நிலேமை.

சிம்ம : உளமறியாத வெறுவினேயையா நான் செய்வது. குறிப்பாக அறிவியும் செய்கிறேன். விரைவில் கூறும்.

கமலா : தங்களே நான் கொல்லுமாறு கட்டளே.

சிம்ம : யாரிடமிருந்து?

கமலா : மதுரை அரசரிடமிருந்துதான்.

சிம்ம : எதற்கா?

கமலா : அவர் நினேக்கிருர்; ஏன்! நேரில் கண்டதாக ஆணேயிட்டுக் கூறுகிருர். தாங்கள் அரசியைத் தீண்டியதாக.

சிம்ம : ஐயோ, இப்படியும் ஒரு பேச்சா? அது உண்மையானுல் அப்போதே என் உடலின் குருதி யோட்டம் நஞ்சாகியிருக்குமே. கொல்லவேண்டிய வேலே இருக்காதே. என் பேர் "யூதாஸ்காரியட்" போன்று இழிக்கப்படட்டும்; எனது புகழ் பழியாக மாறட்டும்; நான் யாராலும் புறக்கணிக்கப்படுவேன். நான் மக்களினத்துக்கு ஒரு தொத்துநோய் ஆவேன். இது என்ன அடாப்பழி?

கமலா : அரசே, இதனை அவர் உளத்தினின்று நீக்க ஒருவராலும் ஆகாது. இறைவன்மேல் ஆணையிட்டுச் சொன்னாலும் அரசியின் தூய்மையை அவர் நம்பார். நம்பாமை, அறியாமை, ஐயம் என்ற தளவாடங்களால் கட்டிடம் கட்டிவிட்டார். அவர் உயிர் உள்ளளவும் அதில்தான் குடியிருப்பார்.

சிம்ம: தவறு எங்கிருந்து தொடங்கியதென்று ஆராய வேண்டாமா ?

கமலா : முன்னரே கூறினேன் ; காலம் இல்லை ; ஆராய்ந்து கண்டுபிடிக்க முற்படுவதினும், முனைந்து இங்கிருந்து வெளியேற வேண்டும். எனக்கிட்ட பணியை நிறைவேற்ருமல் நான் உயிருடனிங்கிருக்க முடியாது. தங்கள் மேல் சாற்றப்படும் குற்றத்தை மறுத்துரைக்க எவரும் முன் வரமாட்டார். வந்தால் உயிருக்கு இறுதிதான். ஆதலால் நும் ஆட்களை ஐயம் நிகழாதபடி இருவர் மூவராக ஊருக்கு அனுப்பி விடுங்கள். நாமும் சிம்மளம் சென்றுவிடுவோம்:

சிம்ம : கமலாபதி, கையைக்கொடு, (பிடித்துக்கொண்டு) அரசனைப் பார்த்தபோது எனது மரணச் சீட்டை அவர் முகத்திலே படித்தது நினைவு வருகிறது. அரசி பெருந்தன்மை வாய்ந்தவள். உயர்ந்த முத்து நானும் அவரின் இளமை நண்பன். எங்களிடம் அவருக்கு ஐயம் தோன்றினல் அவரது பேருமைக்கேற்பச் சின மும் பெரிதாகத்தான் இருக்கும். தண்டனையும் கடுமை யாகத்தான் இருக்கும். பயம் என்பதை இப்போது தான் அறிந்தேன். விரைவில் நீங்குவோம். நான் விலகுவது அரசிக்கும் அமைதியைத் தரலாம். கமலா பதி, 'தங்களைத் தந்தைபோல நடத்துவேன். விரைவில் சிம்மளம் செல்லுவோம். இரண்டு நாட்களாகவே எனது கப்பல்கள் காத்துக்கொண்டிருக்கின்றன.

கமலா: நான் அமைச்சன் அல்லன் என்றாலும் அதிகாரம் இன்னும் உள்ளது. கோட்டை கொத்தளச் சாவிகள் என்னிடம் உள்ளன. வாருங்கள் கடற்கரைக்குப் போகலாம்.

அங்கம் 2] [களம் 1

மனோன்மணி, வீரகேசரி, தோழிகள்
[மதுரை அரண்மனையில் ஓர் இடம்]

மனோன்மணி: யாராவது ஒருத்தி குழந்தையைத் தூக்கிக்கொள்ளுங்கள். எவ்வளவு தொல்லைப்படுகிறான்?

முதல் தோழி: வாங்க சாமி நாம் விளையாடலாம்.

வீரகேசரி: ஊகூம் — நீ யெனக்கு வேண்டாம்.

முதல் தோழி; என் கற்கண்டல்லவா? வாங்க.

வீரகே: வேண்டாம் நீ. என்னை இன்னும் சிறு குழந்தையாகவே நினைத்து முத்தம் தருவது எனக்குக் கொஞ்சங்கூட பிடிக்கல்லே.

(இரண்டாம் தோழியைப் பார்த்து) — உன்னைப் பிடிக்கிறது.

இரண்டாம் தோழி: என்னைப் பிடிக்கிறதா? என் சாமி வாங்க. என்னை ஏன் பிடிக்கிறது?

வீரகே: உன் புருவங்கள் எப்படி இருக்கு பாரு. அதனால்தான். சிலபேர் புருவங்களில் மயிர் அதிகம் இல்லாமல் இருப்பது அழகு என்கிறார்கள். அது எனக்குப் பிடிக்காது.

இ. தோழி: இதெல்லாம் யார் உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தவர்?

வீரகே: சொல்லிக் கொடுப்பதா? ஒரு நாளைக்கு எத்தனை பேர் முகங்களை நான் பார்க்கிறேன்? உன்னுடைய புருவங்கள் என்ன நிறம்? அதைச் சொல் பார்ப்போம்.

இ. தோழி: நீல நிறம் ராசா.

வீரகே: நீலமா? போ, போ, பொய். நீலப் புருவம் உள்ள பெண்ணை நான் கண்டதே இல்லை.

முதல் தோழி: கண்ணூறுபடும், தம்பி. இதை மட்டும் கேளுங்கள் (அம்மா வயிறு பெறுகுகிறது) புதுப்பாப்பா வரப்போகிறது. நாங்கள் யாவரும் அதைத்தான் ஆதரிப்போம். நீங்கள் எங்களை விரும்பி ஓடி வருவீர்கள். அப்போது எங்களுக்கு உங்களைப் பிடிக்காது!

இ தோழி: நல்ல நாழியில் தாயும் சேயும் தனிப்பட்டுமே.

மனோன்: என்ன பெரிய தர்க்கம்? போதும். கண்ணே, இங்கே வாங்க (அருகில் வருகிருன் — பிடித்துக் கொண்டு) எனக்கு ஒரு கதை; சின்னக் கதை.

வீரகே: துக்கக் கதையா, சிரிப்புக் கதையா?

மனோன்: சிரிப்புக் கதை சொல்லு.

வீரகே: இது மாரிக்காலம். இதற்குத் தக்கது துக்கக் கதைதான். இதில் பேய், பிசாசு எல்லாம் வரும்.

மனோன்: (கொஞ்சிக்கொண்டு) அப்படியானல் அதனைக் கட்டாயமாகக் கேட்கவேண்டும். எங்கே அவைகளையெல்லாம் கொண்டுவா. எனக்குப் 'பயமாக இருக்கிறது ஆனல், நீ இருக்கும்போது அவைகள் என்னை ஒன்றும் செய்யாது. எங்கே சொல்லு.

வீரகே: ஒரு ஊரிலே ஒருவன் இருந்தான்.

மனோன் : கிட்டே (அணைத்துக்கொண்டு), எங்கே, சொல்லு, சொல்லு.

வீரகே : அவன் கல்லறைப் பக்கம் குடியிருந்தான். அம்மா, இக்கதை ஒரு சிள்வண்டுக்குக்கூடக் கேட்கக் கூடாது.

மனோன் : (குனிந்துகொண்டு) அப்படியானால் என் காதில் மெதுவாக...

நரசிம்மன், ஆனந்தன், பிரபுக்கள்—மற்றவர்கள் வருகை.

நரசிம் : அங்கே கண்டீர்களா? கூட யார் யார் இருந்தவர்கள்? கமலாபதி கூடவா?

முதல் பிரபு : ஆம். கமலாபதியும் அரசர் பின் சென்றார். கடற்கரைச் சவுக்குத் தோப்புக்குப் பின்புறமாய்ப் பூனை போல் சென்றார்கள். கப்பலேறியதையும் பார்த்தேன்.

நரசிம் : எனது ஊகம் மிகவும் சரி. ஆனால் எனது நுண்ணறிவு எனக்குத் துன்பத்தை மிகுதியாகத் தருவதற்குத்தான் பயன்படுகிறது. சிலந்தி விழுந்த பாலை கலத்திலிருந்து அறியாது குடித்தவன் அவதிப்படுவதில்லை. யாராவது அறிவுறித்தினால் உடனே வாந்தியும் மயக்கமும் கூட உண்டாகும். ஆனால் நானோ சிலந்தி விழுந்ததையும் கண்டு பாலையும் குடித்தேன். இது என்ன அறிவுடமை? இனி அழிவுதான். எல்லாம் அழியவேண்டியதுதான். அவனது ஆளையே—முன்னரை அவன் கைப்பொருள் பெற்ற அக்கழுதையையே -பேரைப்பார்! கமலாபதி-நான் நம்பிவிட்டேன். சிலந்தி விழுந்த பாலைக் குடித்த மடையன் நான். ஆம்! கோட்டைக் கதவுகள் எவ்வாறு திறக்கப்பட்டன?

முதல் பிரபு : கோட்டைச் சாவிகள் எல்லாம் கமலாபதியிடம்தான் இருந்தன. அது தங்களின் ஆணைதானே?

நரசிம் : ஆம்; இருக்கட்டும். மனோன் மணியைப்பார்த்து) பையனை என்னிடம் விடு அவன் உன் பாலைக்குடித்து வளரவில்லை என்பதை நினைக்குந்தோறும் மகிழ்ச்சி உண்டாகிறது. எனது சாயல் அவன் உடலின் ஒவ்வொரு உறுப்பிலும் இருக்கிறது. என்றாலும் அவன் உடலின் உனது இரத்தம்தான் மிகுதியாக உள்ளது.

மனோன் : என்ன இது ஒருவகை விளையாட்டுப்பேச்சா?

நரசிம் : (ஏவலாளரைப் பார்த்து) யாரடா அங்கே? பையனை இழுத்துக்கொண்டு போ. என்ன தயக்கம்? அரசிக்கு என்ன குறைவு. வயற்றில் இருப்பதை அவள் கொஞ்சட்டும். சிம்மள மாறுதல் இது. எல்லாம் தெரியும் எனக்கு.

மனோன் : சிம்மளத்தை நான் அறியேன். இது உண்மை, தாங்கள் என்னை நம்புங்கள்.

நரசிம் : பிரபுக்களே, கேட்டீர்களா? கூர்ந்து கவனியுங்கள். அரசி மிக மிக அழகிதான். ஆனால், தொடரை நிரப்பி போட்டு நீங்களே முடித்துக்கொள்ளவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். மணமும் குணமும் அற்ற வெளித் தோற்றத்தைக் கண்டு புகழ்தலும்; உள்ளியல்பு கண்டபின் தலைநடுங்குதலும் உலகியல்பு. சட்டியில் இல்லாதது அகப்பையில் வராதென்பர். இதனைச் சிந்தித்தறிந்த நான்தான் வெளியிடுதற்கு உரிமையும், அதிகாரமும் பெற்றவனேவேன். இதில் அணுவளவும் ஐயம் இல்லை. திரண்டு சிவந்த இலந்தைப்பழம் வெளிக்கு அழகில்லையா? உள்ளே பார்த்தால்தானே புழுவைக் கண்டு பழத்தை அறிய முடிகிறது. கற்பிலி; வஞ்சகி; அவர்கள் தப்ப வழியும் செய்பவள்.

மனோன் : இல்லை; எனக்கு ஒன்றும் தெரியவில்லை. பலர் முன் என்னைப் பழிப்பது இழிப்பது இவற்றால் உங்களுக்குக் குறைவில்லையா? குறையென்ன, உங்களையே நீங்கள் இழித்துக்கொள்வதாகும். காலம் வரும்.

உண்மை உண்மையாகவே வெளியாகும். தெளிவிலும் மயக்கம் வருமானுல், மயக்கம் தெளிவடையும் என்ற நம்பிக்கையுண்டு. ஆனுல் இப்போது என்ன பயன்? தாங்கள் பிறகு எவ்வளவு வருந்தினுலும் வெட்கினுலும் இதற்கு ஈடு கொடுக்கமுடியாது.

நரசிம்: சீ, உண்மையாம்! ஈடு கொடுக்க முடியாதாம். யாரிடம் இவையெல்லாம்? நான் எல்லாம் ஆய்ந்து முடிவுகட்டின செய்தி இது. இதில் உண்மை இல்லை என்ருல் பள்ளிப் பையன் சுற்றிவிடும் பம்பரத்தைத் தாங்குதற்குக்கூட இப் பூமிக்குப் பலம் இருக்காது. யாரடா அங்கே? இவளைச் சிறையிலடையுங்கள். இவளுக்கு யாராவது பரிந்து பேச முன்வந்தால் அவர் களும் குற்றவாளிகளே. உடனே தண்டனைதான்.

மனேன்: இது என்ன பிழை. கோள்களின் பிழைகள் தான். கோள்கள் என்னை அருட்பார்வை பார்க்கும் வரை பொறுத்திருப்பதைத் தவிரச் செய்வது என்ன இருக்கிறது. பிரபுக்களே, நான் பெண், உங்கள் முன் னர் நான் பெண்கள் போல் கண்ணீர்விட விரும்ப வில்லை எனது உறுதி உங்கள் அருளைப் பெருது. நான் பிரளயமாய் அழுது கதறினுலும் நீங்கள் முழுகு வீர்களே தவிர என்னை உங்களால் மீட்க முடியாது. என் துக்கம் என்னைச் சுடுகிறது. நும் மனங்கொண்டு தானே நீங்கள் என்னை அளக்கக்கூடும். சரி, அரசனது கட்டளை நிறைவேறட்டும்.

நரசிம்: கட்டளை, கட்டளைதான். யாரடா அங்கே!

மனேன்: அரசே, தோழிமார்கள் துணைக்கு வேண்டும். மனங்கொள்ளுங்கள். எனது நிலைமைக்குச் (கருப்பம்) சிறிது இரங்குங்கள். (ஏன் அழுகின்றீர்கள்). நான் குற்றவாளியாயிருந்து சிறைச்சாலை எனக்குத் தகுந்த தென்ருல் அழக் காரணம் இல்லை. ஆனுல் நான் குற்றமற்றவளாகச் சிறையினின்று வெளிப்படும் போது அழவேண்டும். ஒருவேளை அது பொருந்தலாம்.

நான் அமைதியாக அனுபவிக்கும் துன்பம் எனக்குச் சிறப்பைத் தருவதற்காகவே இருக்கலாம். அரசரே, உத்தரவு கொடுங்கள். தங்கள் துயரத்தைப் பார்க்கச் சிறிதும் விரும்பாத யான் பிரிகின்றேன். தோழிகளே, வாருங்கள். அரசர் உத்தரவு உண்டு.

நரசிம் : சரி, போகலாம்.

(அரசி தோழிகளுடன் போதல்)

முதல் பிரபு : அரசே, அரசியை அழைக்கச்செய்யுங்கள். இது தகாதது.

ஆனந்தன் : அரசே, இச் செயல் அரசியை மட்டுமல்ல, கருவையும் தங்களையும் அரசிளங் குமரனையும் துன் பத்துக்காளாக்குவதாகும்.

முதல் பிரபு : அரசி தூய்மையானவர். அத் தூய்மை என் உயிரைவிடச் சிறந்தது. ஆதலின் எனக்கு ஈடு வைக்கப் பொருளில்லை. அவர் தூய்மையானவர் என்று எனது உண்மையில் ஆணையிட்டுக் கூறுகிறேன்.

ஆனந்தன் : அன்னையின் தூய்மையில் குறைகூறினால் குறையின்றி எந்தப் பெண் இருப்பாள்! என் மனை வியை அறையில் அடைத்துக் காவல் காப்பேன் நான். கணமும் என்னைவிட்டுப் பிரியவிடமாட்டேன். யாவ ருமே அந் நிலைக்குத்தான் வரவேண்டும். பெண்ணு லகமே கெட்டதுதான். ஒவ்வொரு பெண்ணின் ஒவ் வொரு அங்குலமும் ஐயத்துக்கும் பாவத்துக்கும் உரியதாக ஆகிவிடும்.

நரசிம் : போதுமடா, வாயை மூடுங்கள்.

முதல் பிரபு : நாங்கள் உங்களது நன்மைக்காகவே கூறினோம். இவ்வெண்ணத்தைத் தங்கள் மனத்தில்

புகுத்தியவன் என் எதிரில் வந்தால் தப்பமாட்டான். எனக்கு மூன்று பெண்கள் உளர். மூத்தவள் வயது பதினொன்று. அடுத்தவள் ஒன்பது. இளையவளுக்கு ஐந்து வயது அரசிக்குக் கூறிய பழி உண்மையானல் இவர்கள் கன்னியாகவே அழிவர். உலகில் பெண் ணினமே அப்படியாகும்.

நரசிம்: போதும், நிறுத்துங்கள். பிணத்தின் கூடற்ற மூக்குக்கு நாற்றம் தெரிவதில்லை. உங்களுக்கு இச் செய்தியில் ஒன்றும் தெரியாது. எனக்கு ஐம்புலன் களும் சரியாக உள்ளன. எனக்கு உணர்த்திவிட்டன அவை.

முதல் பிரபு: தாங்கள் நாற்றத்தை நன்கு அறிந்து ஈடுபடுபவர்கள். ஒழுக்கத்தை, உயர்வைக் கொலை செய்து அவற்றுக்குக் கல்லறை கட்டுபவர்கள். தாங் கள் அவற்றுக்குக் கல்லறை கட்டுதல் எதற்கு? அவை யில்லாத இம்மண்ணுலகு ஒரு குப்பைமேடு என்பதற் காகவா? ஆம் அக் குப்பைமேட்டை நறுமணமாக்க அவையன்றி வேறு எதனுல், எப்படி முடியும்?

நரசிம்: நான் கூறுவதை நம்புதற்கு இங்கு யாரும் இல்லையா?

முதல் பிரபு: அரசே, இச்செய்தியில் தங்கள் வார்த் தையை நம்பாதவர்கள் நல்லவர்கள் தான். தங்களின் வார்த்தையின் மதிப்பைவிட அரசியின் தூய ஒழுக்கம் சிறந்ததல்லவா? தாங்கள் மானத்தைக் காப்பதாக எண்ணிப் பொய்ம்மையில் விழுந்து திணறக்கூடாது. பொய்ம்மை வெளுத்து அரசியின் தூய்மை வெளி யாதல் வேண்டும்.

நரசிம்: நன்றியற்ற பதர்களே, இச்செய்தியில் நான் கணவன்; அரசன். நீங்களெல்லாம் கருத்துக் கூறவும் அறிவுரை சொல்லவும் சட்டத்தில் இடம் இல்லை; அவசியமும் இல்லை. எனது நல்லியல்பு காரணமாக உங்களுடன் இவற்றைக் கலந்து பேசினேன். உங்களுக்கு உண்மையைக் காணும்

அறிவோ, அறிந்து நடக்கவேண்டிய முறையோ ஒன்று மில்லை என்பதனை நான் நன்கு தெரிந்தேன். இதனால் ஏற்படும் நன்மை-தீமை, முறைமை-முறைமையின்மை, இழப்பு-மிகுப்பு யாவும் என்னைப் பொறுத்தன. உங்களில் யாருக்கும் இவற்றில் உரிமை இல்லை.

ஆனந்தன்: அரசே, இதனைக் கணவன் மனைவியின் போராட்டம் என்ற அளவில் வைத்திருக்கலாம். ஆனால் எம்மிடம் கொண்டுவந்த காரணத்தால் நாங்கள் சொல்லலாயிற்று.

நரசிம்: எதற்கு, எங்கே, எவ்வளவு தூரம் இடம் என்பதெல்லாம் எனக்குத் தெரியும். வீணே உளருதே. கயவாகு ஏழு நாட்களுக்கு இணங்கியும் இல்லாமல் ஓடியது. கமலாபதி எவர்க்கும் தெரியாமல் அவனைப் பின்பற்றியது, இவையே போதும் அவளது நடத்தையை அறிய. இருந்தாலும் நன்கு உறுதிப் படுத்துதற்காகவே பழனிமலை முருகக் கோட்டத்திற்கு ஆட்கள் அனுப்பியுள்ளேன். ஒவ்வொரு கணமும் அங்கிருந்து வரும் தேவ வாக்கையே எதிர்பார்த்துக் கொண்டுதான் இங்கு பேசிக்கொண்டிருக்கிறேன். வந்ததும் எப்படி நடவடிக்கை எடுப்பது என்பதை முடிவு கட்டலாம். இது சரிதானே ?

முதல் பிரபு: மிகவும் சரி!

நரசிம்: எனக்குச் சிறிதும் ஐயம் இல்லை. தெய்வு வாக்கும் அதனை உறுதிப்படுத்தினால் மக்களின் மனம் அமைதியுறும்.

ஆனந்தன்: செல்வோம்; எப்படியும் உண்மை வெளிவரும்.

(அரண்மனைச் சிறைச்சாலை வாயில்)

முத்தம்மாள் – ஒரு பிரபு – வேலையாட்கள்.

முத்தம்மாள் : (பிரபுவைப் பார்த்து) சிறை அதிகாரி யார்? கூப்பிடுங்கள். நான் யார் என்பதனையும் கூறுங்கள். (அரசியை நினைத்துக் கூறல்) அரசியே, நீ இப்போது சிறையில் இருப்பது வேறு எந்த அரசாங்கத்துக்குப் பொறுக்கும்? சிறை வாழ்வு. இது என்ன கோளாறுக்கோ? (பிரபு சிறைகாப்போனுடன் வருதல்) நான் யார் என்பது தெரியுமல்லவா?

சிறை காவலன் : தெரியாமல் என்ன?

முத்த : அப்படியானால் என்னை அரசியிடம் அழைத்துச் செல்லுங்கள்.

சிறை கா : வருந்துகிறேன். அப்படிச் செய்ய எனக்கு உத்தரவில்லை.

முத்த : ஒழுக்கமும், உயர்வும் சிறையில் அடைப்பட்டிருக்கும்போது இரக்கம் எட்டிப்பார்க்க உத்தரவும் இருக்காது; சட்டமும் இடம் தராது! தோழிகளில் யாரையாவது பார்க்கலாமா?

சிறை கா : பெயரைக் கூறுங்கள்; அழைத்து வருகிறேன்.

முத்த : சுமத்திரை,

சிறை கா : இதோ அழைத்து வருகிறேன். இவர்கள் (கூட இருப்பவர்) சற்று விலகி இருக்கவேண்டும். (போகிறார்கள்).

சிறை கா : அம்மா நீங்கள் இருவரும் பேசிக்கொண்டிருக்கும்போது நானும் கூட இருக்கவேண்டும்.

முத்த: நன்ருக இருக்கலாம். எனக்கும் நல்லதுதான். குற்றமற்றதைக் குற்றமுள்ளதாக்க எவ்வளவு கருப்புச் சாயம் தடவினுலும் நிற்குமா? வெளுத்துத் தான் போகும்.

(சிறையாள் சுமத்திரையுடன் சிறிது தாழ்ந்து வரல்)

முத்த: சுமத்திரை, அரசி எப்படி இருக்கிருர்கள்.

சுமத்திரை: எப்படி வாழ்ந்தவர்கள் இப்படிச் சிறையில் இருப்பது எவ்வாறிருக்கும்! எவ்வளவோ பொறுமை தான். எப்படியோ எதிர்பார்த்த காலத்துக்கு முன்னரே குழந்தை பிறந்துவிட்டது.

முத்த: ஆணு? பெண்ணு?

சுமத்திரை: பெண்; நல்ல அழகு. பிழைத்துக்கிடக்கட்டும். பெண்ணுய்ப் பிறந்தது ஒருவகையில் புண்ணியமே. அரசி குழந்தையைப் பார்த்துக் கொண்டு அடிக்கடி "நாம் இருவரும் ஒன்று" நான் சிறையில், நீ என்னுள், நாம் இருவரும் குற்றமற்றவர்கள் என்று சொல்லிக்கொண்டிருக்கிருள்.

முத்த: உண்மையில் அரசனுக்கு ஒரு வகையான மூளைக் கோளாறுதான். சிறையில் பிள்ளைப்பேறு! என்ன கொடுமை? அரசனிடம் சென்று உண்மைகளை எடுத்துச் சொல்லவேண்டும். அதற்கு ஒரு பெண்தான் உரியவள். நானே அக்கடமையை மேற்கொள்கிறேன். சுமத்திரை, அரசிக்கு எனது வணக்கம் கூறு. குழந்தையை என்னிடம் நம்பிக்கொடுத்தால் குழந்தையுடன் அரசன்முன் செல்வேன். அவர் உள்ளத்தை உருக வைப்பேன். குற்றமற்ற-பேச்சில்லாத அதனுருவம் பெரிய நாவலரும் அடையமுடியாத வெற்றியைப் பெறும்.

சுபத்திரை : தாயே. உனது அருள் வீணுகாது! தன்னலமற்றவர்களின் முயற்சியும் உழைப்பும், திட்டமும் வீணுகாது! அரசிக்கும் இந்த எண்ணம் இருந்தது. இதோ சென்று வருகின்றேன்.

முத்த : சுமத்திரை, அரசியிடம் கூறு. நான் உண்மையில் நிற்கின்றேன். அஞ்சாமையும் அறிவுடைமையும் எனக்குத்துணை செய்யும், வெற்றி கிடைக்கும். குழந்தையைத் தூக்கிவா.

சுமத்திரை : கடவுள் துணை செய்வாராக!

சிறை கா : அரசி குழந்தையை அனுப்பினுலும் அதனை வெளியில்விட எனக்கு உத்தரவு இல்லை; அது முடியாத காரியம்.

முத்த : அரசி சிறைக்கு வந்தபோது அது வயிற்றுள் இருந்தது. அது சட்டத்துக்கு உட்பட்டதல்ல. குழந்தை குற்றம் செய்யவில்லை. அதன்மேல் கோபமும் இல்லை; தண்டனையும் இல்லை. ஏதாவது இருந்தால் அது அரசியைத்தான் கட்டுப்படுத்தும்.

சிறை கா : நீங்கள் சொல்வது நியாயம்; நான் நம்புகிறேன். ஆனுல்......

முத்த : பயப்படவேண்டாம். ஏதாவது ஏற்படுவதாயிருந்தால் நான் ஏற்றுக்கொள்கிறேன். அச்சம் வேண்டாம், காவலரே!

(மதுரை அரண்மனை அறை—நரசிம்மன், ஆனந்தன், பிரபுக்கள், சேவகர்கள்)

நரசிம்மன் : அறுபது நாழியும் அமைதியே இல்லை. அதைப்பற்றியே நினைப்பது ஒரு கெட்ட குணமே, ஆனால் அக்கற்பிலியை நினைக்காமல் எப்படி மறப்பது? அவன் நமது பிடிப்புக்கு அப்பால் இருக்கிறான். அவனை ஒன்றும் செய்ய முடியாது. இவளை வதைத்துத் தொலைத்துத் தீயிட்டுக் கொளுத்தி விட்டால் ஓரளவாவது அமைதி ஏற்படும். யாரடா அங்கே ?

வேலைக்காரன் : அடியேன் வணக்கம்.

அரசன் : கேசரிக்கு உடல் நிலை எப்படி ?

வேலைக் : இராத்திரி நல்ல தூக்கம்; விரைவில் குணமடையலாம்.

அரசன் : சிறிய பயலுக்கு எவ்வளவு பெரிய தன்மை. தாயின் தீச்செயலைக் கேட்டவுடன் வேரறுந்த கொடி போல் தளர்ந்து சோம்பி வதங்கி ஒரு பெரிய மாறுதலடைந்துவிட்டான். சரி, போ; குழந்தையைக் கவனித்துக்கொள். (வேலைக்காரன் போகிறான்) சீ, சீ, சிம்மளனைப்பற்றிய நினைப்பால் பயன் இல்லை. அவனையும் கமலாபதியையும் பழிவாங்க ஒரு காலம் வரும். நமக்குப் பலம் மிகுந்த அவனுக்குத் துணைவலி குறைய நாளாகாது. இப்போது இவளைப் பழி வாங்கி நான் ஆறுதலடைவேன்.

(முத்தம்மாள் குழந்தையுடன் அங்கு வருதல்)

முதல் பிரபு: உள்ளே போகக் கூடாது.

முத்தம்: அப்படிச் சொல்லவேண்டாம். நான் உண்மையின் பக்கம் இருக்கிறேன். நீங்கள் என் பக்கம் இருங்கள். கொடுங்கோலரசின் கோபம் நல்ல அரசியின் மூச்சை விட எவ்வளவோ தாழ்ந்தது; பல மற்றதுங்கூட. அரசி தூயமுத்து, அரசன் மஞ்சள் நோய் (காமாலை கொண்டவர்). நோய்க்கு இடம் தராதீர்கள்; எனக்கு இடம் தாருங்கள்.

ஆனந்தன்: போதுமடி; உன்னை எனக்குத் தெரியும். உனக்குச் சிறிது இடம் கொடுத்தால் அவ்வளவுதான்!

இரண்டாம் பிரபு: தாயே, அரசர் இரவெல்லாம் தூங்கவில்லை. யாரையும் காணமுடியாதெனச் சொல்லியிருக்கிறார்.

முத்தம்: அப்படியானால், நிழலைப்போல் தொடரும் உங்களால் அவருக்கு நன்மை செய்ய முடியாவிட்டாலும், நன்மை செய்வோரை ஏன் தடுக்கின்றீர்கள்! என்னைக் கண்டால் அவருக்கு நல்ல தூக்கம் வரும். நான் கொண்டுவந்திருக்கும் மருந்து அவருக்கு பல நன்மைகளைச் செய்யக்கூடியது; உள்ளிருக்கும் அசட்டைப் போக்கும்; கவலையை நீக்கிக் கண்வளரச் செய்யும்.

நரசிம்: (உள்ளிருந்தபடியே) என்ன இரைச்சல் அங்கே?

முத்தம்: (உள்ளே நடந்துகொண்டு) எல்லாம் தங்கள் நன்மைக்காகத்தான்.

நரசிம்: யார் முத்தம்மாளா? ஆனந்தரே, இப் பிடாரி இங்கே வரக்கூடாதென்று முன்னரே கூறியிருக்கிறேன் அல்லவா?

ஆனந்தன் : நான் முன்னரே கூறிவிட்டேன், எனது கோபத்துக்கும் அரசனது தண்டனைக்கும் ஆளாக வேண்டாம் என்று.

நரசிம் : அப்படியென்ருல் உம்மால் அவனை அடக்கி யாள முடியவில்லை யென்பதுதானே ?

முத்தம் : நான் தவறு செய்தால் அடக்கலாம்; ஆளலாம். நான் நேர்மையில் ஈடுபடும்போது பாராட்டவேண்டாமா? நேர்மையில் இறங்கியுள்ள என்னை அவர் கடிந்துகொண்டால் தங்களை முழுதும் ஒத்தவராவார். இக்காரியத்தில் என்னை அவர் அடக்கமுடியாது. அது பெரிய தவறு.

நரசிம் : என்ன ஆனந்தரே காதில் விழுந்ததா ?

ஆனந்தன் : விழுந்தது. கடிவாளத்தை வாயில் தந்தால், ஓரளவு ஓடித்தான் நிற்கும்.

முத்தம் : கூறுவதைச் சிறிது கேளுங்கள். தேளா - பாம்பா மருளவேண்டாம். நான் உங்கள் அடிமை, வேலைக்காரி, மருத்துவன், போதகன் தங்கள் தொல்லைகளை மாற்றிக்காட்டும் மந்திரவாதிகூட, தங்களின் வாழ்க்கைத் துணைவியிடமிருந்து வந்திருக்கிறேன்.

நரசிம் : வாழ்க்கைத்துணைவி! நீ கூட ஒருவனின் துணைவிதான், போதும்!

முத்தம் : நான் கூறுகிறேன், அரசி நும் வாழ்க்கைத் துணைவி என்று, நான் ஆணய்ப் பிறந்திருந்தால் உங்கள் சார்பில் வரும் வீரனைத் தோற்கடித்து அரசியின் கற்பினை நிலை நாட்டுவேன்.

நரசிம் : வெளியே தள்ளுங்கள் இவளை.

முத்தம் : (கையை நீட்டிக்கொண்டு) தன் கண்ணை இழக்க விரும்புபவர்கள் கிட்டே வரலாம். அரசே, நானே போய் விடுவேன் ; வந்த வேலை முடிந்ததும் இங்கு எனக்கென்ன வேலை ; கற்பரசியின் குழந்தை இது. உம்முடைய செல்வம் ; இதனை இங்கு விட்டுச் செல்கின்றேன் ; ஆசி கூறுங்கள் ; காப்பாற்றுங்கள். நான் போகட்டுமா ?

நரசிம் : பெண்ணும் ; சூனியக்காரி, போ வெளியில். தவறுஒழுக்கத்துக்கு உடன் செல்பவள்.

முத்தம் : அப்படியெல்லாம் கூற வேண்டாம். தகாத இச்செய்தியை வாய்விட்டுச் சொல்லிய உங்கள் அறிவில்லாத்தனம் எவ்வளவோ, அவ்வளவுக்கு நான் குற்றமற்றவள். உங்களுக்குப் பிடித்திருக்கும் பைத்தியத்தின் அளவுக்கு எனக்கு இயற்கையில் நல்லொழுக்கம் அமைந்திருக்கிறது. மற்றொருமுறை நும் வாயால் அவ்வாறு கூறவேண்டாம் ; மனத்தைக்கூட எனிமாக் கொடுத்துச் சுத்தம் செய்யவேண்டும்.

நரசிம் : பதர்களே ! பயங்கொள்ளிகளே ! உங்கள் கண்ணைக் காப்பாற்ற நான் மானமிழப்பதா ? பிடித்துத்தள்ளுங்கள் இவளை. இப்பீடையையும் இவளே எடுத்துச் செல்லட்டும். (ஆனந்தனைப் பார்த்து) ஏ செயலற்ற பேடியே ! சிறகற்ற சேவலே ! இப்பீடையைத் தூக்கி அவள் கையில் கொடு.

முத்தம் : அக்குழந்தை அவ்வளவு அற்பமானதல்ல. அதனைத் தொட்டால் உன் கைகள் செயலற்றுப் போகும்.

நரசிம் : இப்படி அஞ்சுபவனை நான் பார்த்ததே இல்லை.

முத்தம் : நீவிரும் உம் மனைவிக்கு இதுபோல் அஞ்சியிருந்தால் இக் குழந்தையிடம் ஐயம் ஏற்பட்டிராது. அரசும் நன்றாக இருந்திருக்கும்.

நரசிம் : என்னை அடுத்துள்ள அத்துணைபேரும் துரோகிகள் தானா?

ஆனந்தன்; இவ்வொளியில் ஆணையிட்டுச் சொல்லுகிறேன், நான் துரோகியல்லன்.

முத்தம் : நானும் துரோகியல்லள் வேறு யாரும் இல்லை. அரசரே அரசருக்குத் துரோகி. அவர் ஒருவரே தன் பெயரையும், அரசியின் பெயரையும், வீரகேசரியின் பெயரையும், இக்குழந்தையையும் அடாப்பழிக்கு உள்ளாக்க நினைப்பவர்; வேர் அற்ற கொடியானார். கல்லின்மேல் பாசி, கல்லை என்ன செய்யும்? முற்றின விதையை நீர் அழுக வைக்காது, முளைக்கத்தான் வைக்கும். அடாப்பழி கூறியவர் அதன் தீப்பயனை எவ்வளவுக்குத் துய்ப்பாரோ?

நரசிம் : வேசி, நரம்பற்ற நாக்குடையவளே, ஒவ்வொரு உறுப்பும் இவளுக்கு நாக்காகவே இருக்குமென நம்புகிறேன். ஒவ்வொரு உறுப்பும் பேச முன் வருகிறது. கணவனை அடக்கினாள்; என்னிடம் தன் வரிசை காட்டத் தொடங்கி விட்டாள். இது என் குழந்தையா? சிம்மளனது பீடை; தூக்கு. பெற்ற தாயையும் சேர்த்துத் தீயிலிட்டுக் கொளுத்துங்கள்.

முத்தம் : பீடையல்ல; குழந்தைதான். உம்முடையதே. விதையொன்று போடச் சுரையொன்று முளைக்காது. உம்மைப்போலவே உள்ளது. அதுவும் அதற்கொரு குற்றமே. பிரபுக்களே, கவனியுங்கள். பெரிய உருவம். சிறிய அச்சில் நல்ல நகலாக உள்ளது. கண், மூக்கு, உதடு, மோவாய், நெற்றி, கன்னம், கன்னக் குழி, நகம், விரல், கை, கால், சிரிப்புக்கூட எப்படித் தான் அமைந்தனவோ? ஏ, இயற்கையே இவ்வளவு உண்மையாகத் தந்தையின் கூறுகளைக் குழந்தையிடம் அமைத்த நீ அவன் உளத்தை அதற்குக் கொடுத்தனையோ என்று அஞ்சுகிறேன்; அதில் மஞ்சள் கலந்திருந்தால், குழந்தையும் மஞ்சள்

கண்ணவளாய்த் தனது குழந்தைகளை யெல்லாம் பிறருடையனவாய்க் காணுவளே என்று நடுங்குகின்றேன்.

நரசிம் : மானங்கெட்டவளே ! இவையெல்லாம் என்ன பேச்சு ? (ஆனந்தனைப் பார்த்து) அவள் வாயைக் கிழியடா. அடக்கமுடியாவிட்டால் உனக்குத் தூக்குத் தண்டனைதான்.

முத்த : அரசே, அறிவுருவமே, மனைவியை அடக்க முடியாத மக்களையெல்லாம் தூக்கில் இடுவதென்றால் அரசாங்கத்தில் ஆண்குடிகளே இருக்கமாட்டார்கள். ஆட்சிப்பீடத்திலும் அரசிதான் !

நரசிம் : இதுவே கடைசி முறை. நீங்கள் யாராவது இவளை வெளியில் தள்ளுகிறீர்களா ?

முத்த : முற்றிய கொடுங்கோல் ஆட்சியில்கூட இதற்கு மேல் வேறு என்ன செய்யமுடியும் ?

நரசிம் : உன்னைத் தீயிலிடுவேன்.

முத்த : வரவேற்கின்றேன் ; தீயை மூட்டுங்கள் ! இறைவனே தீ. உயிருடன் தீயில் நிற்பவர்தான் உண்மைக் கடவுள் பற்றுள்ளவர்கள். அது என் போன்றவர்கட்குத்தான் கிடைக்கும். மனைவியை இழந்து மகளை இழந்து மக்களால் பழிக்கப்பட்டுக் கொடுங்கோலனாகும் நீவிர் இம்மையையும் இழப்பீர், மறுமையிலும் அப்படித்தான். இறைவன் உம்மிடம் இரக்கம் காட்டார். என்ன செய்வார் என்று என் வாயால் கூற விரும்பவில்லை.

நரசிம் : எனதுணவை உண்டு, இவள் தூற்றுமொழிகளையும் கேட்டுக்கொண்டிருக்கிறீர்களா ? நான் கொடுங்கோலனாயிருந்தால் என் எதிரில் இவள் இவ்வளவு பேச முடியுமா ? உயிருடன் இருப்பாளா ? தள்ளுங்கள். (தள்ளப்படுகிறாள்).

முத்த : தள்ளவேண்டாம் அரசே, தங்கள் குழந்தையைக் கவனித்துக்கொள்ளுங்கள். பிரபுக்களே, மூடர்களால் அரசனுக்கும் பயன் இல்லை, தமக்கும் பயனில்லை. இதோ போகின்றேன்.

நரசிம் : (ஆனந்தனைப் பார்த்து) நீ, மனைவியைப் பிடாரியாக்கினவன் – எல்லாம் உனது தூண்டுதலே. இப்பீடை என் குழந்தையல்ல இதனிடம் இரக்கம் காட்டும் நீயே உன் கையால் இதற்குத் தீயிடு. தூக்கு-போ ; செய்தியை மெய்ப்பி. தவறினால், உனது உயிர் பிரியும். உன் இனத்தவரும் யாவற்றையும் இழக்க நேரும். நானே இப்பீடையின் உருவைக் குலைப்பேன். ஆனால் உனக்கு இவ்வேலை அரசாங்கப் பரிசு. மனைவியை உசிப்பிவிட்டவனல்லவா நீ.

ஆனந் : அரசே, இல்லை. இப்பிரபுக்களைத் தனித்தனியாகக் கேளுங்கள். நான் குற்றமற்றவன் என்பதை எப்படியும் மெப்பிக்க முடியும்.

முதல் ப்ரபு : அரசே, அவள் இங்கு வந்ததற்கு இவர் காரணமே இல்லை.

நரசிம் : போதும். நீங்கள் யாவரும் பொய்யர்கள்.

முதல் பிரபு : யாங்கள் நன்றிகெட்டவர்களல்லர். கடமையும் அறிந்தவர்கள். இரத்தக் கொதிப்பினால் இப்போக்கு ஏற்பட்டிருந்தால், விரைவில் இது மாற் படல்வேண்டும்; இதனால் நன்மையில்லை.

நரசிம் : காற்றின் பக்கம் சாய்ந்து பறக்கும் காற்றாடியா நான்; இல்லை. அரசனே யான்! எனக்குத் தெரியாததா? இப்பீடையை முளையிலேயே கிள்ளாவிட்டால் பின்னர் என்னை அப்பாவென்று அழைக்க வந்துவிடுமே ! கிள்ளுவதென்ன, தள்ளிவிடுவது நல்லது. ஆனந்தரே, வாரும். இப்பீடை உண்டாதற்கு உதவி செய்தவர் ; உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் ; ஆணை தவறக் கூடாது.

ஆனந் : என்னுடலிலுள்ள ஒவ்வொரு சொட்டு இரத்தமும் உங்கள் ஆணையை நிறைவேற்ற முற்படும். தங்கள் கட்டளை. குழந்தையைத் தள்ளவும் என் உயிரைக் காப்பாற்றவும் ஆவனவற்றை உறுதியாக நான் நிறைவேற்றுவேன்.

நரசிம் : இக்கத்தியின் மேல் ஆணையிடலாமா ?

ஆனந் : ஆணையிடுகிறேன். அப்படியே செய்வேன்.

நரசிம் : ஆணைமீறின் உன் மனைவியே முதலில் உயிர் இழப்பாள். பீடையை எடு; கப்பலேறு. ஏதேனும் அக்கரைச் சீமையின் கடலோரத்தில் போட்டு வா. காற்று, மின்னல், மழை, குளிர், வெயில் இவற்றினூட பிழைத்து வளரட்டும். வந்த விதம் போல் போகும் விதமும் விந்தையாகவே இருக்கட்டும்.

ஆனந் : (குழந்தையை எடுத்துக்கொண்டு முடிந்தனை என்றாலும் கவலையில்லை. உனது நிலையற்ற வாழ்வு அமைதி யற்ற தன்மையைத் தருகிறது. பிணம் தின்னும் கழுகும், காக்கையும், உனக்கு ஊட்டுந்தாயா? கோநாயும், கரடியும், உனக்குச் செவிலித்தாயா? கைவிடப்பட்ட குழந்தைகளுக்குக் கொடிய மிருகங்களும் கருணை காட்டுவது இயற்கையே. அரசே, ஏவிய தங்களுக்கு இச்செயலால் ஏற்படும் நன்மைகள் எனக்கும் ஏற்படட்டும். குழந்தாய்! உனது நல்வினை தான் உனக்குத் துணையாகவேண்டும்.

நரசிம் : (தனக்குள் யாருடைய குழந்தை, எவ்விடத்தில் வளர்வது) யாரது? (வேலைக்காரன் வருதல்)

வேலைக்காரன் : அரசே, வணக்கம். வாழ்க! பழநியிலிருந்து தேவதாசரும், இரத்னாகரரும் வந்துவிட்டனர். விரைவில் இங்கு வருவார்கள்.

முதல் பிரபு. அரசே, அவர்கள் எப்படி அதற்குள் வர முடிந்தது ? அணிமையில்தானே சென்றனர்.

நரசிம்: சுகத்திலிருப்பவர்கட்குக் காலம் குறுகலாய்த் தான் தோன்றும் இன்று பத்தாம் நாள், எனினும் வினை விரைவில் தான் முடிந்திருக்கிறது. உண்மை வெளியாகும். அரசியைக் குற்றவாளியென்று வெளிப் படையாகச் சொல்லும் உரிமை நியாய சபைக்கே உண்டு. பழநி வாக்கு வருவதற்கு முன் விசாரித்து முடிவு செய்யவேண்டும். சபையைக் கூட்டுங்கள்.

அங்கம் 3] [களம் 1

[இரத்தினுகரன் — தேவதாசன்]

இரத்தினுகரன்: ஆகா! வெயிலே தெரியவில்லை. உயிர்க்காற்று; மணம் நிறைந்தது. மரங்கள் உயர் வில் விண்ணைத் தொடுவன என்றால், அதைவிடப் புகழில் உயர்ந்தன. வளத்தில் என்றாலோ புகழை விட வளமிக்கது. பல வளங்களும் பழுநியது. பழநி என்ற சொல்லே இன்பம் நிறைந்தது.

தேவதாசன்: என் உள்ளத்தில், சரிகைக்கரை போட்ட பட்டுடையும், அதைச் செறுகிச் செறுகிக்கொண்டிருந்த பூசாரியின் அமைதியும் நன்கு பதிந்து எங்கெங்கும் தோன்றுகின்றன. சூட ஒளியில் கண்ட காட்சி என்னுல் சொல்லவே முடியாது! மணியின் ஒலி விண்ணுலகின் தொடர்பை உண்டாக்கியது.

இரத்தி: பூசாரி தெய்வமேறிக் கத்தினுரே, அதப் பழநி யாண்டவன் குரல்போலவே உணர்ந்தேன். ஆனுல் பொருள் புலனுகவில்லை.

தேவதா: பயணத்தால் எனக்குப் புலனுவதெல்லாம் அரசிக்குப் பழிச்சொல் விலகக்கூடும் என்பதேதான்.

இரத்தி. எல்லாம் முருகன் திருவிளையாடல். நீதி மன்றத்தின் முடிபு மதில் பூனையாக ஒருதலைப் பக்க மாகலாம்; சட்டத்தின் கோளாறு அது; முருகன் வாக்குப் பொய்யாது; பார்ப்போம்.

தேவதா : இந்த ஆடம்பரத்தில் என்ன இருக்கிறது. மதுரையே புதுமாதிரிதான் இருக்கிறது. எப்படியும் உண்மை உண்மைதான். அஞ்சல் குதிரைகள் வந்து விட்டன. அரண்மனை மன்றத்துக்குச் செல்வோம்.

அங்கம் 3] [களம் 2

மன்றம்

(நரசிம்மன்—பிரபுக்கள்—உத்தியோகத்தினர்)

நரசிம் : எனது விருப்பத்தைப் பொறுத்தல்ல; சட்டம் அப்படி. இவ்விசாரணையால் எனக்கு வருத்தம்தான். குற்றவாளியாய்க் கருதப்படுபவள் என் மனைவி. ஒரு பேரரசனின் மகள்; மதிப்பு மிக்க அரசி. நான் கொடியவன் அல்லன். கொடுமைக்காக இது செய்யப்படவில்லை. வெளிப்படையாக விசாரணை நடக்கட்டும். சாட்சிகள் வரட்டும். குற்றவாளியா இல்லையா என்பது விவாதிக்கப்படுவதற்கு அவளும் கொண்டு வந்து நிறுத்தப்படட்டும்,

உத்தியோ : அரசியாரே, நீதி மன்றத்திற்குத் தாங்கள் வர அரசனது கட்டளை.

(மனோன்மணி—முத்தம்மாள்—பிற தோழிகள்.)

நரசிம் : குற்றச் சீட்டைப் படிக்கலாம்.

உத்தியோ : (படித்தல்) மதுரை மன்னனின் இராணியாகிய மனோன்மணி! நும் பேரில் சாற்றப்பட்டுள்ள குற்றங்கள் ஒன்று-இராசத் துரோகம்; இரண்டு-சிம்மள மன்னனுடன் சோரமாடியது; மூன்று-கமலாபதியுடன் கூடி மதுரை அரசனின் உயிரைப் போக்கச் சதி செய்தது; நான்கு-சிம்மளனைக் காப்பாற்ற வேண்டுமென்று கமலாபதியின் துணையோடு அவனை வெளியேற்றி விட்டது.

நரசிம் : உன் சார்பில் கூற வேண்டுவது ஏதேனும் உண்டோ ?

மனோன் : நான் குற்றவாளியல்ல. என் சார்பில் கூற இங்கு சாட்சிகள் இல்லை. இக் குற்றச் சாட்டுகள் யாவும் உண்மைக்கு மாறானவை. யாவும் அறியும் இறைவனை நம்புகிறேன். அவர் அருள் நிறைந்தவர். அவர் சார்பில் நின்று நான் குற்றமற்றவள் என்று கூறுகிறேன். பொய்ம்மை வெட்கி முகத்தை மூடிக் கொள்ளட்டும். எனது பொறுமைக்கு முன் அரசன் கொடுங்கோன்மை ஆற்றாது நடுங்கட்டும். (அரசனை நோக்கி) அரசே! இன்று வேம்பாகத் தங்களுக்குத் தோன்றும் நான் தேனாகத் தங்களால் கருதப்பட்டவள். அது தங்களுக்குமட்டும்தான் தெரியும். எனது தீவினை தங்கள் உள்ளத்தைக் கருக்கிவிட்டது; தாங்கள் நினைவற்றீர்கள். ஆனால், வரலாறு, நாவல், நாடகம், காவியம் எதிலும் என்போல் துன்புற்றபெண் ஒருவரும் இல்லை. நான் அரசி; அரியணை பகுதிக்கு உரியவள்; பேரரசனின் மகள்; வீரகேசரியின் தாய். எனது நிலை மாறிவிட்டது; உங்கள் முன் விடைபெற நிற்கிறேன். எனக்கு வாழ்வில் பற்றில்லை. சீர் தூக்கிப் பார்ப்பின் துக்கமே அதிகம் நிறைந்துள்ளது. ஆனால் ஒழுக்கத் துக்காகவே மன்றாடுகிறேன். எனது தகுதிக்குத் தக்க வாறே எனது மக்கள் மதிக்கப்படுவர். அப்பழியை அவர்கள் தலையில் சுமத்த விரும்பவில்லை. தங்கள் கட்டளைப்படிதான் சிம்மளரிடம் மரியாதையாக நடந்து வந்தேன். உடல், உரை, உள்ளம் மூன்றி லும் நான் தூயவளே; தூய்மை தவறியிருந்ததால் மக்கள் என் சமாதியில் துப்பட்டும்.

நரசிம் : போதும், இதுவரையில் உலக வரலாற்றில் ஒழுக்கம் கெட்ட பெண்களில் பேசத் தெரியாதவர் யார்? தனது தவறான செயலை மறைக்க நீலிக் கண்ணீர் விடாதவர் யார்?

மனோன் : வரலாறுகளில் எப்படியோ? ஆனால் என் மட்டில் சிறிதும் பொருந்தாது.

நரசிம் : நீ ஒப்புக்கொள்ளமாட்டாய்.

மனோன் : பொய்யர் பொய்யாக ஒப்பலாம். நான் எப்படி ஒப்புக்கொள்வது ? சிம்மளனை விருந்தோம்பும் முறை யில் தங்கள் பணியைச் செய்தேன். அது இப்போது தவறென்ருல், செய்யாதிருந்தாலும் பெருந்தவருக முடிவுசெய்யப்பட்டிருக்கும். அரசாங்கத்தின் பகுதி யாகிய நான், எனக்கு தீங்கு செய்துகொள்ளும்படி நான் இராசத் துரோகியாக இருக்க முடியாது. கமலா பதியோ தனது எல்லா நலன்களையும் மதுரையில் விட்டுச் சிம்மளம் சென்றதன் காரணம் எனக்குத் தெரியவே தெரியாது.

நரசிம் : அவன் ஊரைவிட்டுப் போனது உனக்கு எப்படித் தெரியும் ?

மனோன் : தங்களால்தான். தாங்கள் காணும் கனவுக் கெல்லாம் என்ருல் விடைகூற முடியவில்லை.

நரசிம் ; சீ, கனவு காணுவது நானல்ல; நீ தான். ஆனுல் உன்னுடைய தீச்செயல்களை நான் எப்போதும் கண்டுகொண்டிருக்கிறேன். சிம்மளனிடம் ஒரு பீடையைப் பெற்றுவிட்டாய்; வெட்கத்தை விட்டாய்; உண்மையைத் தொலைத்தாய், தந்தையற்ற சிசுவை நான் என்ன செய்யலாம்? பாவம் அதனுடைய குற்றம் அல்ல; குற்றம் உன்னது. தண்டனை உனக்குத் தான். குறைந்த அளவில் தண்டனை மரணம்தான்.

மனோன் : பயத்தால், துன்பத்தால் நடுங்குபவர்களே உண்மையாய் மரணத்துக்கு அஞ்சுவர். என் போன் ருேர்க்கு மரணத்தில் அச்சமில்லை. தங்கள் அன்பை இழந்த அன்றே வாழ்வின் விருப்பை விட்டேன். வீர கேசரியை என்னிடமிருந்து விலக்கினீர்கள். எனக் கென்ன தொழுநோயா ? எனது கைக்குழந்தையைக் காணேன். நான் ஒழுக்கமற்றவள் என்று விளம்பரப் படுத்தப்பட்டுள்ளேன். எவ்வளவு எளியவளானுலும் ஈன்று அணிமையுடைய பச்சை உடம்பென்ருல் அது பெறும் இரக்கம்கூட என்னளவில் இல்லை. நிற்கக்கூடப்

பலமற்ற நான் நியாய மன்றத்தில் விசாரிக்கப்படுகிறேன். மேல் விசாரணை நடக்கட்டும். தக்க சாட்சிகள் இன்றித் திரிபுள்ள தங்களின் உள்ளத்தின் துணை கொண்டு குற்றம் சாட்டுதல் சட்டம் அல்ல. கொடுங்கோன்மை. பிரபுக்களே, மனிதர்கள் எப்படியோ? பழநியாண்டவன் வாக்குப் பொய்யாகாது,

முதல் பிரபு: தாயே, தாங்கள் கூறியன நியாயமே. முருகன் திருவருளைக்கொண்டே முடிவு செய்வோம். யாரடா அது? அவர்களை அழைத்து வாருங்கள்.

மனோன்: எனது தந்தையார் இங்கிருந்தால் — இக்கொடுமையைப் பார்த்தால் — அவரும் அமைதியுடன் தான் இருப்பார். பழிவாங்க எண்ணார். எம்மரபின் பண்பே அது. முருகன் விட்டவழி காண்போம்!

(தேவதாசு – இரத்தினகர் அழைத்து வரப்பட்டனர்)

முதல் உத்தி: இக் கத்தியில் ஆணையிட்டுக் கூறுங்கள். பழநிக்குச் சென்றீர்களா? பூசாரியினிடமிருந்து முத்திரையிட்ட கடிதம் கொண்டுவந்தீர்களா? பூசாரி உங்கள் கையில் நேரே கடிதம் தந்தாரா? இதுகாறும் அதனைப் பிரிக்காது பாதுகாத்துக்கொண்டு வந்தீர்களா?

தேவதா: ஆம், பழநிக்குச் சென்றோம். பூசாரி நேரே கடிதம் தந்தார். முத்திரை இட்டு அவர் தந்தபடி கொண்டுவந்தோம். நாங்கள் பிரித்துப் படிக்கவில்லை. கத்தியின்மேல் ஆணையிட்டுக் கூறுகிறோம்—உண்மை.

நரசிம்: கடிதத்தைப் பிரித்துப் படியுங்கள்.

முதல் உத்தி: (படித்தல்) மனோன்மணி குற்றமற்றவள்; கமலாபதி நேர்மையானவன்; நரசிம்மன் கொடுங்கோலன்; கைக்குழந்தை நரசிம்மனுடையது; போக்கடிக்கப்பட்ட குழந்தை மீட்கப்பட்டாலொழிய அரசாளப் பிள்ளை இல்லை.

(மன்றத்தார் ; முருகா, முருகா.)

மனோன் : கடவுளே, உலகையே காப்பவனல்லவா நீ.

நரசிம் : கடிதத்தில் உள்ளபடிதான் படித்தாயா ?

முதல் உத்தி; ஆம் அரசே, இதோ பாருங்கள். உள்ளதைத்தான் படித்தேன். (கையில் தருதல்).

நரசிம் : (பார்த்து எறிதல்) உண்மையற்றது ; எல்லாம் பொய். விசாரணை நடக்கட்டும்.

(பணி ஆள் துக்கத்துடன் வருதல்)

பணி ஆள் : அரசே, அரசே !

நரசிம் : யாரடா அவன் ? ஏன் ?

பணி ஆள் : ஐயையோ, என் வாயால்தான் இது வர வேண்டுமா ?

நரசிம் : வாயால் வராமல் பின் எப்படி வருவது ? சீ, சொல்.

பணி ஆள் : தன் தாயின் துக்கத்தால் வீரகேசரிபோய் விட்டார்.

நரசிம் ; எங்கேடா போனார் ? சரியாய்ச் சொல் – உளருதே.

பணி ஆள் : இறந்தே போய்விட்டார் (அழுதல்.)

நரசிர் ; தண்டனை முருகன் எனக்குக் கற்பித்த பாடம் மிகவும் கடுமையானது. நான் அவரை அறியவில்லை. அவர் என்னை அறிந்தே இத்தண்டனை தந்தார். (மனோன்மணி மயக்கத்தால் விழுதல்) அதைக் கவனியுங்கள்.

முத்த ; அவ்வளவுதான் ! அரசியும் போனுள். வாய் கிட்டிவிட்டது. இனிமேல் உயிர் வரவா போகிறது ?

நரசிம் : துக்கத்தால் ஏற்பட்ட மயக்கம் இது. எடுத்துச் செல்லுங்கள். மருத்துவ உதவி செய்யுங்கள். உயிர் வந்துவிடும். (முத்தம்மாள் — இராணியை எடுத்துச் செல்லல்). முருகா, போதும். உன் வாக்கைக் குறை கூறிய நான் அடைந்த தண்டனை போதும். பிறரைக் குற்றவாளியாக்கு முன் நான் குற்றவாளியானேன்; தண்டனையும் பெற்றேன். சிம்மளன் உயிருக்கு உலை வைக்கத் திட்டமிட்டேன்; கமலாபதி மூலம் நஞ்சு கொடுக்கப் பணித்தேன். கடமையினும் அருளின் உயர்வை அவன் அறிந்தான். தனது நலனையெல்லாம் இங்கு இழந்து அவனைக் காப்பாற்றினுன். அவன் இன்பம் கொண்டான். தீயிலே காய்ச்சப்பட்ட பொன்போல ஒளிவிடுகிருன்; மதிப்படைகிருன். நான் துன்புறுகிறேன். மண்ணிலே இடப்பட்ட இரும்பாய்த் துருப்பிடித்து மங்குகிறேன்; மதிப்பிழந்தேன். அக் கமலாபதி எனது உண்மை நண்பன்; என் நண்பனுக்கும் நண்பன். எங்களைக் காப்பாற்றினுன். (முத்தம்மாள் வருதல்)

முத்த : அரசரே, எனக்கென்ன தண்டனை ? சக்கரத்திலிட்டு நசுக்குதலா ? இருப்புப் பீப்பாயிலிட்டு எலும்புகளை இழுத்து நொறுக்குதலா ? தீயிடலா ? வெள்ளுரியாய் உரித்தலா ? உருக்கிய ஈயத்திலோ கொதிக்கு எண்ணெயிலோ இடுதலா ? கொடுங்கோலாட்சியி இவையெல்லாம் நற்குடிகளின் பரிசுகள் அல்லவா ; சிம்மளனுக்கு நஞ்சைக் கொடுக்க நினைத்தது ; கமலாபதியை அதற்கு ஆளாக்கினது ; தனது அருமைக் குழந்தையைக் கழுகுகட்கு இரையாக விடச்செய்தது ; வீரகேசரியின் சாவுக்குக் காரணமாயிருந்தது ; இறுதியாக மனைவியின் உயிரை விழுங்கியது. இன்னும் யாருக்கு என்ன பரிசு கிடைக்கப் போகின்றதோ ?

முதல் பிரபு : அரசி எப்படியிருக்கிருள் ? இறந்துவிட்டாளா ?

மூத்த : நான் கூறுகிறேன், அவள் இறந்துவிட்டாள். உதட்டில் வெண்மை தோன்றுகிறது. அரசியின் கண்ணில் ஒளியும், உடலில் வெப்பமும், மூக்கில் உயிர்ப்பும் யாரேனும் உண்டாக்கினல் அவரே தெய்வம்; அவரே வணங்கத்தக்கவர். ஆனல் கொடுங்கோல் மன்ன, உனக்கு ஒரு ஆறுதலும் இல்லை ஆயிரம்பேர், பத்தாயிரம் ஆண்டு, ஊண் உடையின்றிப் பசுமையற்ற மலைச் சாரலில் விடா மழை, புயலிடை உனக்காகத் தவம் செய்யினும் கடவுளுக்கு உன்னிடம் இரக்கம் வராது. உனது செயல் இரக்கம் எட்டிப்பார்க்கமுடியாது.

நரசிம் : சொல், நீ சொல்வனவெல்லாம் மிகையாகா. உலகில் உள்ளவர் அனைவருமே தந்தம்மால் இயன்ற வரை என்னைக் கொடுமையாகப் பேசலாம். என் செய்வது ?

முதல் பிரபு : வேண்டாம். எப்படியிருந்தாலும் அரசனிடம் பேசும் முறையில் தவறக்கூடாது.

மூத்த : உண்மை; அது என் குற்றம்தான். குற்றத்தை ஒப்புக்கொண்டு அதற்காக வருந்துவது என் வழக்கம், மிகையாகப் பேசிவிட்டேன். அரசன் மனம் வருந்துகிறது. கழிந்ததைப்பற்றி நான் இனி இரங்குவதிலும் பயன் இல்லை. நீங்கள் மறக்கவேண்டியதை நினைவூட்டிய எனக்குத் தண்டனையே தகும். அரசே, நான் அரசியைப்பற்றியோ, குழந்தைகளைப்பற்றியோ தங்களிடம் பேசியிருத்தல் கூடாது. எனது கணவரைப் பற்றியும் நான் குறிப்பிடல் தகாது இழப்பைப்பற்றிப் பேசாமல் துன்பத்தை அனுபவிக்க வேண்டியதுதான், பேசியது பெரிய தவறுதான்.

நரசிம் : நீ பேசியவற்றில் தவறில்லை. எல்லாம் உண்மையே. நீ என்னிடம் இரக்கம் காட்டி நிறுத்த வேண்டியதில்லை. நான் என் குற்றத்தை ஒப்புக்கொள்கிறேன். என் மனைவி, மகன் இருவரையும் ஒரே இடத்தில் புதைத்து, எனது துக்கமும் 'தவறும்' பொறித்த

ஒரு கல்லையும் அங்கு நடுவோம், எனது உடலில் இரத்தம்ஓடும்வரை அங்குசென்று ஒவ்வொரு நாளும் அழுதுவிட்டு வருவதுதான் என் உள்ள அமைதிக்குரிய வழியாகும்.

அங்கம் 3] [களம் 3

சிம்மளக் கடற்கரை

ஆனந்தன் — கைக்குழந்தை — கப்பலோட்டி.

ஆனந்தன் : இது யாழ்ப்பாணக் கரைதானே.

கப்பலோட்டி : ஆம் இது தான். விண்ணில் இருள் சூழ்கிறது. மழையும் பெய்யலாம். எனது மனத்தில் மயக்கமும், கண்ணில் கலக்கமும் உண்டாகின்றன. நாம் மேற்கொண்ட வேலை இயற்கைக்கும் பிடிக்காததாக இருப்பதாகத் தோன்றுகிறது.

ஆனந் : இயற்கையை வெல்லவும் முடியாது. அஞ்சுவதாதல்தான் பயன் என்ன? விதிப்படி நடக்கட்டும். நீ போய்ப் படகில் இரு. நான் கணத்தில் திரும்புவேன்.

கப்பலோட்டி : கொடிய மிருகங்கள் இங்கு மிகுதியாம். விரைவில் திரும்பவேண்டும்.

ஆனந் : நீ போ. இதோ மீள்வேன்.

கப்பலோ : சூழ்நிலை சரியாக இல்லை. இந்தப்பாவத்தில் எனக்குமா பங்கு வரவேண்டும்? (போகிருன்).

ஆனந் : குழந்தாய் வா. ஆபத்தான காலத்தில் இறந்தவர்கள் நம் கண் முன் தோன்றுவர் எனச் சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் நான் நம்பியதில்லை. கனவோ நனவோ நானறியேன். இராணியார் வெண்மையான உடையுடன் துக்கம் நிறைந்தவராய் என் கண்முன் தோன்றி எனது நல்ல இயல்புக்கு

மாருக இக் கொடிய காரியத்தை நான் மேற்கொண்டதற்கு வருந்திஞர்கள். குழந்தையைக் கொல்லாது அக்கரையில் விட்டு வரவும் கூறிஞர்கள். இனி மனைவியை நான் பார்க்க முடியாதென்றும் கூறி மறைந்தனர். நான் முதலில் மிகவும் அஞ்சினேன். பின்னர் தெளிந்தேன். உண்மையோ பொய்யோ சிம்மளக் கரைக்கு (குழந்தையை நோக்கி) நீ வரவேண்டியது நியாயம். படுத்திரு இங்கே; இதோ உன் வரலாறு. இதோ உன் நகைகள்; சீதனப் பொருள்கள். உன் அழகுக்கும் அழகு செய்யும் உடை இது. இவற்றுடன் உன்னை இந்த நிலனும் நீரும் சாட்சியாக விட்டுச்செல்லுகிறேன். இச்செயல் எனது கடமையாயிற்று. என் செய்வேன்? (போகிருன் பகலில் இவ்வளவு இருளா? கடலில் இவ்வளவு குமுறலா? காற்றில் இவ்வளவு ஓசையா? இது காறும் நான் கண்டதே இல்லை! இவையெல்லாம் குழந்தையின் தூக்கத்திற்கு உதவுவனபோலும்! எப்படியாவது கப்பலைப் போய்ச் சேரவேண்டும். ஐயோ! கரடி, கரடி, செத்தேன். (கரடி கொன்றது).

(கந்தக்கோனர் வருகை)

கந்தக்கோனுர்: பத்து வயது முடியணும். உடனே இருபத்துமூணுதொடரணும். தொடர்ந்தால் தீயொழுக்கம், திருட்டு, பொய், வஞ்சனை இன்னும் எல்லாக்கெடுதல்களும் சமூகத்தில் உண்டாகா. இந்த இடை வயது தான் தீமைக்குக் காரணம். இந்த மழைக் கம்மலிலே வேட்டையாம். துப்பாக்கி வெடிச் சத்தத்திலே இரண்டு ஆடுகள் வெருண்டு ஓடின. கோனுர் அவற்றைக்காண எங்கே போனுர்? இருபதாவது வயதுதான் இந்தப் பயலை இப்படிச் செய்யச் சொல்லுகிறது. கோனும் தின்றிராவிட்டால் கடல்கரை யோரத்தில் உப்புப் புல்லைக் கறித்துக்கொண்டு நிற்கும் என் ஆடுகளிரண்டும் ஒருவேளை மரத்துமேலே ஏறிப்பதுங்கிகொண்டு இருந்தாலும் இருக்கும், பார்ப்போம். (மேலும் கீழும் பார்த்துச்செல்கிருன்). இதென்னடா இங்கே குழந்தை!

ஆணு, பெண்ணு? பெண்தான். நல்ல அழகு. அழகல்லாத வழியில் உண்டாகி இப்படி வந்திருக்கு. குழந்தை, நீ என்ன செய்வாய்? வா வீட்டுக்குப் போவோம். பயல் அப்பும் வந்து விட்டால் நல்லது.

(அப்பா, அப்பா என்று கத்திக்கொண்டு
அப்புக்கோனுர் வருதல்.)

அப்பு : பக்கத்தில் இருக்கிற பாவனையில் கத்தினேன்; நீயும் பக்கத்திலே வந்து விட்டாய்.

கந்தக்கோனுர் : பாருடா கண்ணுலே எல்லாவற்றையும். வா கிட்டே — யாரிடமும் சொல்லாதே.

அப்பு : அப்பா, நான் இரண்டு பார்த்தேன். ஒன்று கடலிலோ-ஒன்று கரையிலே. இப்பப் பார்க்கமுடியாது. அவ்வளவு இருட்டு -கடலும் மானமும் கலந்துவிட்டன ஊசிக் குத்தக்கூட இடமில்லே.

கந்தக்கோ : என்னடா பார்த்தே ?

அப்பு : யாராலேயும் செரல்ல முடியாது. காத்து, மின்னல்; கப்பல் கடலிலே ஊஞ்சல் ஆடியது. முழுகி முழுகி எழுந்தது. முழுகியே போனது. ஒரு ஆளைக் கரடி பிடிச்சது தோளைப் பிய்த்தது. ஆனந்தன் செத்தேன் என்று அலறியது; அடங்கியது. எனது நெஞ்சைத் தொட்டுப்பார் இப்பத்தான் அடங்குகிறது.

கந்தக்கோ : இப்பத்தானு ?

அப்பு : ஆமப்பா, கடலுக்குள் பார்த்தால் முழுகினவர் உடலும் இன்னும் குளிர்ந்திருக்காது. கரையில் கரடி அவனை முழுதும் தின்றிருக்காதப்பா.

கந்தக்கோ : உன்னோடை நானும் இருந்திருந்தா கரடியை அடித்து அவர்களையும் காத்திருக்கலாம்.

அப்பு : ஆமப்பா, உனக்குத்தான் நீஞ்சத் தெரியாதே. தெரிந்த ஆள் ஒருத்தன் இருந்தால் கடலிலே போய்ச் சில பேரைக் காப்பாற்றியிருக்கலாம் அப்பா.

கந்தக்கோ : பாவம், போனது போச்சு, கவலைப்படாதே அப்பு. இதைப்பார். நான் கண்டெடுத்தது சிரிக்கிது, முழிக்கிது, கையை வாயிலே வைக்குது. செல்லப் பிள்ளை. துணியைப்பார்; அதில் உள்ள பையைப் பார். உள்ளே இருப்பதை எடு. (எடுக்கிறன்) அடே யப்பா முன்னரே எனக்குச் சொள்ளு வள்ளுவர் சொல்லியிருக்கிறர். கடைசிச் காலத்தில் தான் எனக்கு நல்ல காலமாம்-அதுதான் தெய்வக்குழந்தை, எல்லாம் கொண்டுவந்திருக்கு. இதென்னடா, என் னமோ எழுதிருக்கு. எனக்குத்தான் படிக்கத் தெரி யாதே. நல்ல காலம் படிப்பைத் தராதோ? படிக்கத் தெரியலேயே.

அப்பு : எல்லாம் தங்கம் அப்பா. நீ இளமையில் செய்த பாவத்தையெல்லாம் கடவுள் மன்னிச்சுட்டார்போலே இருக்கு. அதனலே எனக்கு இளமையிலேயே நல்ல காலம் தான். எவ்வளவு கெட்டுப்போனலும், செலவு செய்தாலும் தாங்கும் நமக்கு. அவ்வளவு இருக்கு.

கந்தக்கோ : எல்லாத்தையும் மூடு அப்பு, நல்ல காலம் நம்மிடம் தொடர்ந்து இருக்கணும்னு வாயை மூடிக்கணும் வெளியிலே சொல்லவேகூடாது. குறுக்கு வழியாக வீட்டுக்கு போவோம் வா.

அப்பு : அப்பா நீ எடுத்துக்கொண்டு போ. நான் கரடி எத்தனை தின்னிருக்குண்ணு பார்த்து, மிச்சம் மீதி இருந்தா அதற்கு ஈமக்கடன செய்துட்டு வருவேன். மிருகமெல்லாம் வயிறு நிரம்பினல் சாதுவாகப் போய் விடும்.

கந்தக்கோ : இந்த நல்ல நாளில் — நல்ல காரியம் கட்டாயம் செய்யணும்.

அங்கம் 4] [களம் 1

[கையில் உடுக்குப் போன்ற கண்ணாடி ; அதற்குள் மணல்.

கிழ உருவம் ; முன் குடுமி ; சிறகுள்ள மனித உருவம்.]

காலம் பேசுதல்: என்னிடம் சிலருக்கு மகிழ்ச்சி. எனது சோதனைக் குள்ளாகாதவர் எவரும் இலர். யாவருக்கும் மகிழ்ச்சியை உண்டாக்குகிறேன். மறைவாகச் செய்யப்படும் தவறை நாளடைவில் வெளிப் படுத்திக் காட்டுகிறேன். ஒரேவழி யையத் தள்ளாடிச் சென்றாலும், மிகுதியும் பறந்தே செல்வேன். தற் போது பதினாறு ஆண்டு இடைவெளியைத் தாண்ட வேண்டியிருக்கிறது. என்னால் எதுவும் இலகுவில் செய்யமுடியும். பழைய நாட்டு வழக்கங்களை மாற்று வேன். சட்டங்கள், நடையுடைகள் யாவும் கணத்தில் மாறும்படிச் செய்வேன். எல்லாவற்றுக்கும் முந்திய வன் நான். யாவும் அழிந்த பிறகும் இருப்பவன் நான். எனது கண் இமைப்பிற்குள் எத்தனையோ மாறுதல்கள். பிறர் முக்காலம் என்பது என்னை தான். இதோ என் கருவியைக் கவிழ்க்கிறேன். உ களுக்குத் தெரியாதன பலவுள. தெரிந்துகொள்ள வேண்டியன சிலவற்றைத் தெரிந்து கொள்ளுங்கள். வீண் ஐயத்தின் விளைவால் நரசிம்மன் வெட்கி அரண மனையிலேயே இருக்கிறான். சிம்மள இளவரசனிடம், அழகு மிகுந்த, கைவிடப்பட்ட, நங்கையின் நட்பு, தழைத்துக்கொண்டு வருகிறது. அவள் ஒரு இடைப் பெண்ணாகவே கருதப்படுகிறாள். என்னைப்போல் யாராவது வீண் பொழுது போக்கிக்கொண்டிருப்ப வர்கள் உண்டா? இனி உங்கள் காலம வீணாக வேண்டாம்.

சிம்மளன் அரண்மனை

(கமலாபதி — சிம்மளன் வருகை.)

சிம்: கமலாபதி, எனது ஆருயிர் அமைச்சரே! வேண்டாம்; இதைக் கேட்கவேண்டாம். கேள்வியே துன்பம் தருகிறது. நான் எப்படி அதற்கு ஒப்புவது?

கமலா: எனது நாட்டைப் பிரிந்து பதினைந்து ஆண்டுகள் கடந்துவிட்டன. எனது வாழ்நாளில் சிறந்த பகுதி இங்கே கழிந்தது. தன் குற்றத்தை உணர்ந்த எனது அரசனின் வேண்டுகோள் கடிதம் என்னை மதுரை செல்லத் தூண்டுகிறது. நான் சென்றால் அவர் ஆறுதலடைவர். அவரது துன்பம் குறைத்தலே எனது ஆறுதலாகும்.

சிம்: கமலாபதி, எனது உயிரைக் காத்தீர். நான் கேளாமலே பல உதவிகள் செய்தீர். உம்மாலே இவ்வரசு பலப்பட்டிருக்கிறது. எல்லாக் காரியங்களிலும் உமது துணை எனக்கு அவசியமாவிட்டது. உலகப் பற்றெல்லாம் பழக்கத்தால் ஏற்படுவதுதானே. தாங்கள் பிரிந்தால் இதுகாறும் நீவிர் செய்த நன்மைகள் யாவும் வீணாவதுடன் நானும் வீணாவேன். மதுரையைப்பற்றி எண்ணவேண்டாம். எல்லாம் நிகழ்ந்த பின் குற்றத்தைப்பற்றி நினைத்தால் என்ன? வருந்தினாலென்ன? வீரகேசரியைக் கொண்டுவருமா? அரசியை உயிர்ப்பிக்குமா? அஃதிருக்கட்டும். நமது பூக்காந்தனை எப்போது கண்டீர்கள்? ஒரு வகையில் ஒழுங்கற்ற பிள்ளைகள் இருந்துகொண்டு பெற்றோர்களுக்குக் கவலையைத் தருகிறார்கள். மற்றொரு வகையில் அறிவும் குணமும் நிறைந்து இளமையிலேயே இறப்பதால் பெற்றோர்களுக்கு வயிற்றெரிச்சலை உண்டாக்குகின்றனர்.

கமலா : உண்மைதான். உலகில் இன்னும் எத்தனையோ விதங்கள்! நான் இளவரசைக் கண்டு மூன்று நாட்கள் ஆகின்றன. அவர் சில நாட்களாகவே சட்ட சபைக்கு வருவதில்லை. உடற்பயிற்சியில் கவனம் இல்லையாம். வேட்டையாடல் அறவே நின்று விட்டதாம்.

சிம் : அமைச்சரே. நீர் அறியாததும் உண்டோ? அவன் நமது குடிமகன் கந்தக்கோனார் வீட்டில் அடிக்கடி காணப்படுவதாகக் கேள்வி கோனருக்கு இளையாள் பார்வையால் எல்லாச் செல்வமும் மிகுந்திருப்பதாகவும் கேள்விப்பட்டேன்.

கமலா : பார்வையால் மட்டுமா? உருவமே அங்கு இருக்கிறதாம் நமது காந்தன் அங்கு பறந்து செல்கின்றாராம் அடிக்கடி.

சிம் : சென்று தங்குவது பூவல்ல. அத்தூண்டியில் நம் பூக்காந்தன் சிக்கிக்கொள்ளாமல் காக்கவேண்டும். மாறுவேடம் கொண்டு இருவோரும் செல்லுவோம். கபடமற்ற கோனார் வீட்டிலிருந்து நாம் நேரிலேயே உண்மையை அறிந்துவரலாம். மதுரை செல்வதில் வேண்டாம். இதில் எண்ணத்தைச் செலுத்துங்கள்.

கமலா : அரசே, தங்கள் கட்டளைப்படியே.

கயபாகு : இப்போது தான் என் உள்ளக் கமலாபதி, உருமாற்றிக்கொள்வோம்.

அங்கம் 4] [களம் 3

(கந்தக்கோனர் வீட்டின் அண்மையில் உள்ள வழியில் கண்ணன் பாடிக்கொண்டு வருதல்.)

மக்களுண்டுதான் நானும் உண்டுதான்
தீமை உண்டுதான் நன்மை உண்டுதான்
ஆண்டி உண்டுதான் அரசன் உண்டுதான்
அழிவு உண்டுதான் உலகம் உண்டுதான்

கண்ண : நான் இளவரசனிடம் வேலை பார்த்தவன். ஒரு காலத்தில் மகமல் சட்டை போட்டிருந்தவன். இப்போது அதற்காக அழுவதா ?

இரவு என் மதிக்கு இன்னொளியாம்
பகலும் நல்ல பலன் தருமே
போவார் வருவார் பொருளெல்லாம்
கண்ணன் கைவரும் கண்டார் யார்?

கண்ண : எனது வியாபாரம் துணி வியாபாரம்தான். பருந்து கூடுகட்டினால் கைக்குட்டைகள் காணாமல்தான் போகும். நான் பிறந்தது கன்னியில், பார்த்தது சனி, சேர்ந்தது செவ்வாய், உச்சத்திலே புதன். தொழிலைக் கேட்பானேன் ? சாவுக்கு அதிகப் பயம் எனக்கு. பெரிய வீட்டில் நுழையவே மாட்டேன். தன்னந்தனியாக ஏழை எளியதுகள், குழந்தை குட்டிகள் வந்தால் கண்ணன் கண்மறைத்துச் செய்வான். ஏதோ ஒன்று வருது.

(அப்புக் கோனார் வருகை)

அப்பு : பதினொரு ஆடு ஒரு தாடு. ஒரு தாடு உரோமம் ஒரு பவுனுக்கு வரும். ஆயிரம் ஆடு உரோமத்துக்கு என்ன வரும் ?

ண்ண ; பொறியை வைத்தால் விழாமலா போகும் ?

அப்பு : புளியங்கொட்டையில்லாமல் கணக்கு வராது. அது கிடக்கு. விருந்துக்கு என்னென்ன வேணும் ? மூணு வீசை சர்க்கரை, ஆறு பலம் திராட்சை, ஏழு பவுண்டு அரிசி இத்தனை கொடுத்தால் என்ன செய்ய மாட்டாள் அவள். எல்லாம் அப்பா தந்த செல்லம் அவளுக்கு. அவள் நல்லவள் தான், என் தங்கச்சி அல்லவா? என் தங்கம் எனது கூட்டாளி பன்னிரண்டு பேருக்குப் பூச்செண்டு கட்டி வைத்திருக்கிறாள். எல்லாரும் பாடுவார்கள். ஒருத்தனுக்கும் அஞ்சாங் கட்டைக்குமேல்

ஏருது. முழுப் பாட்டாக ஒருத்தனுக்கும் தெரியாது. அந்தப்பயல் வேதாந்தி எப்பவும் சாமகானந்தான் பாடுவான். அடே பாக்கிச் சாமான் குங்குமப்பூ, சாதிபத்திரி, பேரிச்சங்காய், இஞ்சிக்கொத்து இதை இனமாகக் கேட்டு வாங்கிக்கலாம். பொங்கல்தான் ஒரே பொங்கல்!

கண்ண : (கீழே விழுந்து உதறிக்கொண்டு) ஐயோ கடவுளே, என்னைக் கூப்பிட்டுக்கோ ; என்னை அழைச்சுக்கோ ஒங்கிட்டே.

அப்பு : என்னடா இது ? யாருடா இது ?

கண்ண : ஐயோ, ஐயோ, யாராவது வந்து என் சட்டையைக் கிழிங்களே. கிழிச்சி எறிங்களே. செத்தாப் போதுமே.

அப்பு : (அருகில் சென்று) அடே பாவி! அம்மணத்தை மறைக்கத் துணிதான் வேணுமே, இதையுமா எடுக்கச் சொல்லுறே ?

கண்ண : எடுத்தால்தான் பிழைப்பேன். (முதுகைத் துடைத்துக்கொண்டு) எத்தனை இலட்சம் அடிகள் இந்த முதுகில். அடே அப்பா !

அப்பு : ஐயோ பாவம், லச்சம் அடி அடிக்க எத்தனை நாழி பிடிச்சுருக்கும் ?

கண்ண : அடிச்சதோடவா ? என் பணமும் போச்சு ; துணியும் போச்சு. இந்தத் துணியை அவன் என் முதுகுலே மாட்டிவிட்டுப் போயிட்டான்.

அப்பு : அடே அவன் யாரு ? குதிரை ஆளா ? கால் ஆளா ? எப்படி வந்தான் ?

கண்ண : கால் ஆள்தான்.

அப்பு : இந்தத் துணியைப் பார்த்தாலே குதிரை ஆளா இல்லேண்ணு தெரியுது. எங்கே எழுந்திரு, கைகொடு.

கண்ண : ஐயோ, அழுத்தமாகப் பிடிக்காதே, வலிக்குது.

அப்பு : பாவம். நன்ருய் அடிபட்டுப்போச்சு. கொஞ்சம் நில்லு. (தூக்குதல்)

கண்ண : மெதுவாக, உடம்பெல்லாம் புண்ணு வலிக்குது, தோள்பட்டை நழுவிருக்கு, வலிக்குது மெதுவாக.

அப்பு : நிக்கவே முடியலேயா ? நில்லப்பா.

கண்ண : நீ, மகராசனுயிருக்கணும். (பையில் கையை விட்டுப் பணம் திருடியபின்) பெரிய உதவி. தர்மசாலி. மழை இதனுலேதான் பெய்யுது.

அப்பு : கையிலே காசு இருக்கா தம்பி ?

கண்ண : அது கிடக்குதுங்க. பக்கத்திலே எனக்கு உறவிருக்கு. அங்கே போகிறேன். நல்ல உதவி. உடம்பெல்லாம் இப்படி வலிக்குதே.

அப்பு : அந்த ஆள் எப்படிப்பட்டவன் ?

கண்ண : அவனு ? பொல்லாதவன். அவனிடத்திலே என்ன நல்ல குணம் இருந்ததோ? அரமனை வேலையிலிருந்து அவனை நீக்கிவிட்டார்களாம்.

அப்பு : அவனது கெட்ட குணத்துக்காக என்று சொல்லு. அங்கு கூடியவரையில் நற்குணத்தைத்தான் வைத்துக் காக்க எண்ணுவது. ஆனுல் அங்கு அது அமைவதில்லே.

கண்ண : ஆமா, நான் கெட்ட குணம் என்றுதான் சொல்லியிருக்கவேண்டும். அவனை எனக்கு நன்ருய்த் தெரியும். பல மாறுவேடம் பூணுவான், ஆனுல் நல்ல திருடன். கண்ணன் என்று பெயர்.

அப்பு : நம்ப கண்ணம் பயலா? ஒண்ணுமில்லேயப்பா; அவன் சந்தை, கடைத்தெரு, நாடகக் கொட்டகை, ஏழூர்த் திருநாள் கூட்டம் இங்கெல்லாம் இருப்பான். அதே ஆள் தான். அதனை எனக்குத் தெரியுமே.

கண்ணா : அதே பேர்வழிதான். அவனே தான் என்னை இப்படிச் செய்தவன்.

அப்பு : அந்தப் பயல் மிகவும் பயந்தவன். நீ அவனை ஒருதரம் விழித்துப் பார்த்தால் போதும். மூஞ்சிலே துப்புமுன் ஓடிப்போவான்.

கண்ணா : உங்களிடத்திலே உண்மை சொல்லாமல் என்னுங்க. நான் மிகவும் பயந்தவன். சண்டைபோட மாட்டேன். அவனுக்குத்தான் அது நன்ருய்த் தெரியுமே.

அப்பு : இப்ப எப்படித் தம்பி இருக்கிறது? நானும் துணைக்குப் பின்னுல் கொஞ்சம் வரட்டுமா?

கண்ணா: உங்களுக்கு ஏன் அந்தத்தொல்லை; வேண்டாம்.

அப்பு : மெதுவாகப் போ அப்பா. நான் கடைக்குப்போய் கொஞ்சம் சாமான்கள் வாங்கவேணும்.

கண்ணா : (தனக்குள் : விருந்துச் சாமான் வாங்கப் பணம் கூடவா இருக்கு? நானும் விருந்துக்குப் போவேன். அவர்கள் ஆடுகளைச் சிறைத்து மொட்டை அடிக்கட்டும். நான் இவர்களை ஒட்டச் சிறைப்பேன். இவர்களை நான் எனது ஆடுகளாக்கா விட்டால் எனது பெயர் கண்ணன் இல்லை).

சாலை வழியிலே சலிப்பின்றி நடப்பதற்கும்
ஒத்தடிப் பாதையிலே உவப்புடன் செல்லுதற்கும்
கவட்டை நெறியிலே கண்விழித்து முனைதலுக்கும்
உள்ளம் உறுதுணையாய் ஓரளவு பெற்றவனே
அயராதுள மறைத்து ஆக்கமிக வழிவகுப்பான்.

(கோனூர் குடிசை, பூக்காந்தன்—மாசிலாமணி)

பூக்காந்தன்: உனது உடைகள் உறுப்புகட்கும் சிறப்புத் தருகின்றன; தாமும் சிறப்படைகின்றன. சிங்களப் பெண்ணாக, இல்லை மண்ணுலகப் பெண்ணாக எவரும் எண்ண முடியாது. வசந்தத்தின் அழகைக்காண விண்ணிலிருந்து பூக்கடவுள் பூமிக்கு வந்ததுபோல் தோன்றுகிறாய் ஆட்டுமயிர் சேர்க்கும் விழாக் கூட்டத்தில் உன்னைச் சார்ந்துள்ள பிறரும் உன்னொளியால் விண்ணுலகினரை நினைவூட்டுகின்றனர்.

மாசிலாமணி: தாங்கள் சொல்வதைக் குற்றமெனக் கூறவில்லை; மிகைப்பேச்சு. பகலவன் மேகத்துள் மறைவது காணுவோர்க்கு இன்பந்தரும். அரசாளும் தாங்கள் ஆட்டிடையர் உடையில் மறைந்து தோன்றுவதும் அப்படியேதான். எளியவளாகிய என்னை ஒளிப்படுத்தவே தாங்கள் மறைந்து வேடிக்கைப் பார்க்கின்றீர்கள். இவ்விழாவும் விருந்தும் பகுத்தறிவற்ற போக்குடையனதான். வழக்கம் என்ற இருளால் குற்றம் குறைகள் பலர் கண்ணுக்குப் படுவதில்லை. வழக்கம் உயர்ந்த சீரண மருந்து; சீரணக்காரி. அதனால்தான் மீண்டும் மீண்டும் விழா நடத்தப்படுகின்றது. தாங்களும் இவ்வுடையில் வர முடிந்தது. இவ்வுடை என் முகம் பார்க்கும் கண்ணாடி. அதுவே என்னை இவ்வுடையில் வரப் பணித்தது.

பூக்காந்: எனது வேட்டைப்பறவை இங்கு வந்ததால் தான் உன்னைக்காண நேர்ந்தது. அதை நினைக்கின்றேன்.

மாசிலா: அந்த நினைப்பு வாழ்வதாக! மலைக்கும் மடுவுக்குமுள்ள நமது சாதி மாறுபாடு அச்சம் விளைவிக்கின்றது. தங்களின் அரசப் பிறப்பில் அச்சம் தோன்றாதிருக்கலாம். எனக்கோ தாங்கள் தந்தையாரை எண்ணும்போது அச்சம் மிகுகின்றது. தற்செயலாக அவர்

இங்கு (தாங்கள் வந்ததுபோல) வர நேர்ந்தால்—நம்மைப்பற்றி அறிந்தால்—என்ன நினைப்பார்? என்ன செய்வார்? நினைத்தால் புதுவுடை மகிழ்ச்சி துக்கத்தைத்தான் தருகின்றது.

பூக்காந்: இந்திரன் பூனையானது. கடல் தேவன் ஆட்டுக்கடாவாய்க் கத்தியது. சூரியனே என்னைப் போல் ஆட்டிடையனாக வந்தது. வேலன் குறவனாக வந்ததன்றி வேங்கை மரமாகக்கூட நின்றது. இவையெல்லாம் எதற்காகப் புராணங்கள் சுமந்து கொண்டிருக்கின்றன? நமது காதல் தூய்மையானது. இயற்கையும் இதற்கு உதவி செய்யும். ஒருவரைவிட்டு ஒருவர் இனி வாழ முடியாது. ஒருவரை ஒருவர் ஏற்று உள்ளத்தில் குடியேற்றிவிட்டோம். உறவினர் ஏற்கவேண்டும். உலகினர் அறியவேண்டும். அவையெல்லாம், தானே நடந்துவிடும்.

மாசிலா; உம் தந்தையார் இதற்கு இணங்கார். அவரை விட்டுத் தாங்கள் பிரிய முடியாது. நாமும் ஒருவரை ஒருவர் விட முடியாது. என் செய்வது?

பூக்காந்: மாசிலாமணி! ஏன் வீணை இந்த எண்ணங்களினால் விழாவினையும் விருந்தினையும் கெடுத்துக் கொள்கின்றாய்? அதனதன் பயனை அவ்வப்போது துய்க்கவேண்டும். விழாக்கெடவேண்டாம். நான் உன்னைச் சேர்ந்தவன், என் தந்தையைச் சேர்ந்தவனல்லன். நீ இல்லை என்றால் நான் இல்லை. இல்லாத எனக்குத் தகப்பனும் இல்லை. வேறு யாரும் இல்லை. இதில் விதிக்கு வேலை இல்லை. வேண்டாமென்று கூறினும் தோல்வியடையும். தனது நிறைந்த வெற்றியை யெல்லாம் இழக்கும்படி இதில் தலையிடாது. மகிழ்ச்சியாக இரு. ஐயம் தோன்றின் அப்போதே அழித்துவிட்டு வினைசெய். விருந்தினரை மகிழ்வுடன் ஏற்றுக்கொள். இதுவே நமது மணநாளென்று எண்ணி முகமலர்ச்சிகொள்.

மாசிலா : தங்கள் வாக்கு நிறைவேறட்டும். எங்கும் மகிழ்ச்சி மல்கட்டும்.

கந்தக் கோனூர், அப்புக் கோனூர், பொன்னி, அமெரி, கோதை, கமலாபதி—சிம்மளன் (இருவரும் மாறுவேடத்தில்) இவர்கள் அங்கு வருதல்

கந்தக்கோ : மாசிலாமணி, உன் தாயார் இன்றைக்கு இருந்திருந்தால் எல்லாம் அவளாகத்தான் இருப்பாள். சமையல் வேலை, கூட்டுவது, வரவேற்பது, தலைவியா யிருப்பது, வேலைக்காரியாக அங்கும் இங்கும் ஓடுவது, தன் கையாலேயே ஒவ்வொருவருக்கும் பரிமாறுவது, எல்லாம் அவள்தான். சிட்டுமாதிரி பறப்பாள். அவள் பாவம் போய்விட்டாள். நீதான் அந்த இடத்தில் இருக்கிறாய். விருந்தாளிமாதிரி இருக்காதே. யாவருக்கும் நல்வரவு கூறு. நாலுபேருக்குத் தெரிய அதெல்லாம் ஒரு நல்வழி. உன் புது உடைக்காக வெட்கப்படாதே. உடைக்காக உன்னை மாற்றிக் கொள்ளாதே. வந்தவர் முகமலர்ந்தால்தான் ஆடு மாடு பெருகும். நாமும் சுகமாக வாழலாம்.

மாசிலா : தங்கள் விருப்பம்போல் செய்கிறேன். யாவரும் வாருங்கள். அனைவருக்கும் வணக்கம். (கோதையைப் பார்த்து) பெண்ணே! வரவேற்புக்குரிய பூக்களை எல்லாம் என்னிடம் கொடு. (கயபாகுவினிடம்) தாமரை மருக்கொழுந்து இரண்டும் தங்களுக்கு. உருவிலும் அழகிலும் வாட்டம் இருந்தாலும் மணம், குணம் இரண்டிலும் குறைவுபடா.

கயபாகு : பெண்ணே, உன் அழகுக்கேற்ப அல்லது மிகுதியாகக்கூட உனது அறிவுத்திறம் உள்ளது. எம் வயதுக்குப் பொருந்தவே நீ அவைகளை எமக்குக் கொடுத்தாய்.

மாசிலா : ஐயா, ஆண்டு மிகுதியால் இளமை இறப்பதில்லை. தங்கள் பணிக்காலம் இன்னும் முடியவில்லை. நடுக்கம் தரும் குளிர்காலம் இன்னும் வரவில்லை. இதற்குரிய மலர், சாதிமல்லி, முல்லைப் பூக்கள். ஆனால் எம்தோட்டத்தில் அவற்றை வைப்பதில்லை. அவற்றின் நுட்பங்களையும் நான் இன்னும் சரியாக அறியவில்லை.

கயபாகு : உன் தோட்டத்தில் அவை வைக்கப்படாததற்கு எனக்குக் காரணம் தெரியவில்லையே! காரணம் பிறகு கூறலாம். ஆனால் பூவினைப்பற்றி ஓரளவு அறிந்துள்ள நீ பொழுதினைப்பற்றியும் அறிந்திருப்பாய் என்றே எண்ணுகிறேன்.

மாசிலா : பூ, மலர், போது, அரும்பு எல்லாம் பொழுதுடன் சம்பந்தப்பட்டவைதான். ஒரு நாளின் பகலிரவையும், அவற்றின் கூறுபாடான மணிகளையும்-இன்னும் சிறிய நிமிடங்களையும் கூட அறிவதற்கு ஏற்ற பூக்கள் உள. இயற்கையின் நுட்பத்தை அறிந்தால் பூக்களைக் கொண்டே பொழுதினை அறியலாம். செயற்கை வசதியற்ற அஃறிணைகள், நம்மினும் நுட்பமாய் இன்னும் அறிந்து வாழ்கின்றன. நாளைச் சிறு பொழுதெனலாம். ஆண்டினைப் பெரும்பொழுதென்னலாம். தாங்கள் எதுபற்றிக் கேட்கின்றீர்கள ?

கமலா : எதுபற்றியா ? எல்லாவற்றையும்தான். இருக்கட்டும். (ஆட்டம்) இலையுதிர்காலம, (விண்டர்) குளிர்காலம், (ஸ்பிரிங்) இளவேனிற்காலம், (சம்மர்) கோடைகாலம் என்பவற்றுள் எது சிறந்தது ?

மாசிலா : ஆண்டின் கூறுபாடுகள் இவை. இவற்றைக் கார், கூதிர், முன்பனி, பின்பனி, இளவேனில், முதுவேனில் என்றும் கூறுபடுத்துவர். எப்படியும் குளிர்காலம், வேனிற்காலம் என்ற இரண்டுகள் அடக்கிவிடலாம். நான்கினை இரண்டிரண்டாகவும், ஆறினை மும்மூன்றகவும் அடககிப்பார்த்தாலும் குளிர்காலத்தை

ஒரு பகுதியாகவும், வேனிற் காலத்தை ஒரு பகுதி யாகவும் காணலாம். இரண்டும், பருவத்துக்கும் நிலைமைக்கும் சிறந்ததாகவும், அல்லாததாகவும் அமையலாம். ஆனால் என்னைப் பொருத்தவரையில், குளிர்காலத் தொடக்கம் வேனிலின் மகிழ்வுக்கு முதலா யிருப்பின் எதனைச் சிறப்பாய்க் கொள்வது? எனது நிலை அப்படி! பொழுதைப்பற்றிப் பேசிப் பொழுதை வீணாக்க வேண்டாம்.

கயபாகு: முல்லைதான் எனக்கு மிகவும் பிடிக்கும். அது ஏன் இல்லை?

மாசிலா: இருப்பிடத்தைக் கெடுத்துக் காடாகப்பெருகி விடும். அல்லாமலும் உறுதியற்ற பல்லிளிக்கும் சிலரைப்போல இனமும் மாறிவிடும்.

கயபாகு: மாறுதல் உண்மையென்றே வைத்துக் கொண்டாலும் அதனால் புது நலமே உண்டாகும். தீமையில்லையே!

மாசிலா: இல்லை. இயற்கைக்கு மாறானதல்லவா உயர்ந்தவை திரிந்து, தாழ்ந்த இனமாகவன்றோ மாறிவிடும்.

கயபாகு; மாறானதாகாது. சேர்க்கையால் வேறுபாடு அமைந்தால் அதுவும் ஒரு இயற்கையேதான். அல்லது (சேர்க்கை) அச்செய்கையும் இயற்கையின் கூறுபாடேயாம். இக்கூறுபாடுகள் எல்லாம் சேர்ந்து தான் இயற்கை என்ற பெயர் பெறும். அன்றியும் இயற்கையே ஒரே வழி சிறப்படையவும் செய்கிறது. இரண்டு மாறுபட்ட மாமரங்களின் ஒட்டுமுறையால் உயர்ந்த சாதி மரத்தினை உண்டாக்கலாமே!

மாசிலா: இருக்கலாம்.

கயபாகு: உன்னுடைய தோட்டத்தில் முல்லை, மல்லிகையை உண்டாக்கு. அவைகளைக் கீழாக எண்ண வேண்டாம்.

மாசிலா : என் கையால் பூமியில் அதனைச் செய்வதற்கு ஒரு சிறு வேலை கூடச் செய்ய நான் அறியேன்.

கயபாகு : சரி, இதோ என் நண்பர் இருக்கிறார். (கமலாபதி)

மாசிலா : நான் எனது உடைகளை மாற்றிக்கொண்டு வேறு நிலையில் முன்னின்று ஆடினால் அவருக்குப் பிடிக்கலாம். நான் அவ்வாறு செய்யப் போவதில்லை. இதோ சிவகரந்தை, வெற்றிவேர், சூரியகாந்தி, இவைகள் ஆண்டின் நடுவில் உண்டாகின்றன. நடுத்தர வயதினருக்கு மிகவும் ஏற்றவை. உமது வரவு நல்வரவாகுக!

கமலாபதி : நான் உனது ஆடுகளில் ஒன்றாயிருந்தால் உன் பல்லைப்பார்த்துக்கொண்டேயிருப்பேன். புல்லைத் தின்னவே எனக்குத் தோன்றாது.

மாசிலா : என்ன வார்த்தையிது? இருக்கட்டும். பார்த்துக்கொண்டு வயிற்றுக்குத் தின்னாமல் காய்ந்தால் குளிர்காற்றைக்கூடத் தாங்க முடியாதே. (பூக்காந்தனைப் பார்த்து) எனது இள நண்பரே, தங்களுக்குத் தரவேண்டிய வசந்தகாலப்பூ என்னிடம் ஒன்றுமில்லை. கோதை, பொன்னி, அமெரி, உங்களுக்கெல்லாம் விரைவில் மணமாக வேண்டும் என்று குமுதப்பூ கூறுகிறது. கொடுக்கத் தகுந்த வேறு பூக்கள் இல்லை. ஏ பூத்தேவியே, அன்று பாதாள உலகம் ஆளும் நமனுடன் நீ சென்றபோது அஞ்சி நழுவவிட்ட பூக்கள் இப்போது என் கையில் இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்! அவை ஒரு காலத்து மீண்டும் தலை தூக்கும்; அவை போகட்டும். பறவைக் குஞ்சுக்குச் சிறகு முளைக்கு முன்னர் வளர்ந்து பூக்கும் மரங்கள் சில உண்டு. காற்றுத் திசை மாறி வீசும்படி மயக்கும் பூக்களும் உண்டு. கட்புலனிற்படாது தரையோடு படிந்து தம் மணத்தால் உலகினையே நிரப்பும் பூக்களும் உள. இந்திராணி திறந்த கண்மூடாமல் தவம் கிடந்து வேண்டத்தக்க அழகுமிக்க

நீலப்பூக்களும் உள. பகலவனுல் தோன்றி வளர்ந்தும் அவன் ஒளியைக் காணமுடியாமலும் வெப்பத்தைத் தாங்க முடியாமலும் அழிந்து படும் பூக்களும் உள. வெயில் மழை காற்று எதற்கும் சளேக்காமல் நிற்கும் பூக்களும் உள. அல்லி ஒன்றிலேயே எத்துணேயோ வகைகள். இவ்வகைப் பூக்கள் எல்லாம் என்னிடம் இருந்தால் வகைக்கொன்ருய் வைத்து மாலே கட்டிக் கழுத்தில் பூட்டிக்கொள்வேன். உதிரியைத் தரமறிந்து வழங்குவேன்.

பூக்காந்த : பேச்சே பிண அலங்காரத்தை நினேவூட்டு கிறது. கிடைக்காதது நல்லகாலம் தான்.

மாசிலா : ஏன், அந்த நினேப்புத்தான் வரவேண்டுமா? மணமக்களின் திரட்சிக் கட்டிலின் அலங்காரம்? இது தானே உலகினே நிலே நிறுத்தி வைப்பது! அந்த அலங்காரத்தால், இறந்தவர் பிறப்பதில்லே, யார் கண்டது? இதனுல் இருப்பவர் பிறப்பை உண்டாக் கலாம் இது யாவரும் கண்டது. இதோ இருக்கும் பூவைப் பேருக்கொன்ருய் எடுத்துக்கொள்ளுங்கள். எனக்கே வியப்பாக இருக்கிறது. இப்படியெல்லாம் பேச எனக்கு எவ்வாறு துணிவும் சலுகையும் ஏற் பட்டது? நான் அணிந்துள்ள ஆடையின் புதுமை யால்தான். நாடகங்களில் உடைகள் இவ்வாறு நடிக்கச் செய்ததைப் பார்த்திருக்கிறேன். இது எனது குணத்தையே மாற்றிவிட்டதே!

பூக்காந்த : யாவரும் உடுத்துவதுதான். ஆனுல் உனது போக்கில் அழகு மிகுதிப்படுவது மட்டுமல்ல; ஒவ்வொன்றும் ஒரு கலேயாக வளரும்போல் தோன்று கிறது. நீ பேசினுல் அதை நிறுத்தாமல் தொடர்ந்து கொண்டிருக்க விருப்பம் ஏற்படுகிறது. பாடினுல் பாட்டாகவோ ஆயுள் முழுதும் இருக்க அவா உண்டா கின்றது. நடந்தால் அதுபோல் வேறு எதையும் அவ்வளவு அழகாய்ச் செய்யமுடியாது போலவும் நடந்துகொண்டேயிருந்தால் கண்மூடாமல் பார்த்துக் கொண்டே தொடரலாம் போலவும் தோன்றுகிறது.

நீ பிறருக்குக கொடுத்தால் கொடுத்துக்கொண்டே யிருக்கவேண்டும்போல் தோன்றுகிறது. ஒவ்வொன்றிலும் அவ்வளவு அழகு! கரியை உன் கையில் எடுத்துக்கொடுத்தாலும் மின்னலை அதனால் எழுதி விடுவாய்போல் தோன்றுகிறது.

மாசிலா : மிகை; இளமை இவ்வாறு மிகைப்படுத்திக் கூற முனைவது இயல்புதான். ஆனால் அரசன் இவ்வாறு இழிந்த குலத்தின் மணந்து கொள்வது இயல்பல்லவே. அது குறித்து நான் அஞ்சுகிறேன்.

பூக்கா ந்த : நீ அஞ்சக் காரணமும் இல்லை. உன்னைப் பயமுறுத்துவது எனது நோக்கமும் அல்ல. பேசத் தெரியாத அன்னங்கள் பிரிவதில்லை. கைகொடு; இனிப் பிரிவதில்லை.

மாசிலா : அவைகளைப் பொறுத்த வரையில் உண்மை, உறுதியுந்தான்.

கயபாரு : (எல்லாம் கவனித்த பிறகு) இழிகுலத்தில் பிறந்த இவளிடத்தில் சிறப்பிருக்கிறது. இவளது ஒவ்வொரு நிகழ்ச்சியும் இவ்விடத்திற்கும் சமயத்திற்கும் மேற்பட்டு விளங்குகின்றது.

கமலாபதி : பால், தயிர், நெய் யாவற்றுக்கும் அவள் அரசி ஏன் ? ஆடு மாடுகட்குக்கூட அவள் அரசியே அவள் காதில் அவன் ஏதோ ஊதுகிறான். அவள் அதைச் சுவைத்திலள்போல் தோன்றுகிறது. முகம் முழுதும் சிவந்துவிட்டது.

அப்புக்கோ : ஏன் ஊதுங்களே நாதசுரத்தை. (பொன்னி கையைப் பிடித்துக்கொண்டு) பொன்னி, நீ என்ன சொல்லப் போகிறாய் ?

பொன்னி : நீ ஒன்றும் பேசவேண்டாம். வாயைத் திறந்தால் வரும் உள்ளிப்பூண்டு வாசம்கோதைக்குத்தான் பிடிக்கும். அவளை நீ கலியாணம் பண்ணிக்கொள்.

கோதை: நீ ஒருத்தி இல்லாவிட்டால் எனக்குக் கலியாணமே ஆகாது? முதலில் உன் வாயை மூடு.

அப்புக்: சண்டையெல்லாம் வேண்டாம். ஒரு வார்த்தை கூடப் பேசக்கூடாது. இது வீடு சந்தைக்கடையில்லையம்மா. எங்கே, இசைக் கீதம் பாடுங்கள். இல்லை, ஆட்டம்.

(இடையர் இடைச்சியர் ஆட்டம்)

கயபாகு: (கந்தக் கோனரைப் பார்த்து) உம் பெண்ணிடம் ஆடுபவர் யார்?

கந்தக்: அவரைத் துரைக்கண்ணு என்று கூப்பிடுகிறார்கள். நிறைந்த சொத்து உள்ளவராம். அவரும் அப்படித்தான் சொல்லிக்கொள்ளுகிறார். பொய்ப் பேர்வழியாகத் தோன்றவில்லை. என் பெண்ணைக் காதலிக்கிறார் என்றும் கூறுகிறார்கள். விண்ணிலிருக்கும் முழுமதி கடலைக் கண்கொட்டாது கண்டு தானும் களித்து அதற்கும் களிப்பைத் தருகிறதே, அதே போலத்தான் அவர் அவளுக்கு. யார் யாரை அதிகமாகக் காதலிக்கிறார்கள் என்று கூறமுடியாது.

கயபாகு: நன்றாகத்தான் ஆடுகிறாள்.

கந்தக்: அவள் எதை எடுத்தாலும் நன்றாகத்தான் செய்வாள். என் வீட்டுப் பெண்ணைப்பற்றி நானே புகழ்ச்சியாகக் கூறக்கூடாதுதான். ஆனால் துரைக்கண்ணு மட்டும் இவளையே கட்டிவிட்டால் அவருக்குக் கனவில்கூடக்கண்டிராத இலாபமும் இன்பமும் உண்டு;

(வேலைக்காரன் புகுதல்)

வேலைக்கா: ஐயா, வெளியில் யாரோ ஒரு வியாபாரி வந்திருக்கிறார். அவர் பாடுகிறார். அவர் பாட்டைக் கேட்டுவிட்டால் யாரும் பிறகு பேண்டு வைத்துக் கொண்டு ஆடவேமாட்டார்கள். நீங்கள் பணம் எண்ணுவதற்கு மேல் வேகமாக நல்ல நோட்டுகள் எல்லாம்

பாடுகிறார். பாட்டெல்லாம் கரைச்சுக் குடிச்சிருக்கிறார். வாயைத் திறந்தால் வருவதெல்லாம் பாட்டுத்தான். சினிமா மெட்டுத்தான்.

அப்புக்: அவனை உள்ளே வரச்சொல்லடா. நல்ல சமயத்தில் வந்திருக்கிறான். எனக்கு இசைக் கீதம் மிகவும் பிரியம். ஆட்டத்துடன் கலந்தால் மிக மிகப் பிரியம். ஆனால் துன்பமான செய்திகளாயிருந்தால் இன்பமான பாடலிலும், விளையாட்டுச் செய்திகளாயிருந்தால் முகாரி இராகத்திலும் அமைத்துப் பாடுவது தான் எனக்குப் பிடிக்கும்.

வேலைக்கா: பெரிய பலசரக்குக் கடையில் அவரவர் வேண்டிய சாமான்களை எடுத்துக்கொள்வது போல் அவரவருக்கு வேண்டிய பாடலைப் பாடச்சொல்லலாம். எல்லாம் நல்ல உருப்படிகளாகவே பாடுகிறார். "என்னடீ மெத்த தளுக்குக் காட்டுகிறாய்" இந்த மாதிரிப் பாடல்களே இல்லை. "நல்லவர்போல் தோன்றுகிறார்" இதுபோன்ற பாடல்கள் தான்.

கயபாகு: பேர்வழி சரியானவன்தான் போல் இருக்கு.

அப்புக்: அந்தப் பயலை எனக்குக்கூடத் தெரிந்திருக்கலாம். சரிகை, பட்டு இவை இல்லாமல் எல்லாம் துணிகளாய்க் கொண்டுவந்திருக்கிறானா ?

வேலைக்கா: ரிப்பன் நிறைய இருக்கு. வானவில்லில் உள்ள நிறங்கள் எல்லாம் அதில் இருக்கு. ஒவ்வொரு முடிச்சும் எந்த வக்கீலாலும் அவிழ்க்க முடியாது. கம்பளிக் கயிறு, பட்டுக் கயிறு, வெள்ளையிலேயே பல விதம், ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பாடல். ஒரு சட்டை யென்றால் அதன் கைகள், கழுத்துப்பட்டை, வட்டக் கழுத்து ஒவ்வொன்றுக்கும் பாடல்தான். பக்தன் தன் கடவுள்மேல்கூட அவ்வாறு பாடமாட்டான். எல்லாம் புண்ணியம் செய்த சாமான்கள்.

அப்புக்: *சீக்கிரம் அவனை அழைத்துக்கொண்டு வா; பாடிக்கொண்டே வரச்சொல்.*

மாசிலா: இடக்கரடக்கலாகப் பாடிக்கொண்டு வரச் சொல்.

(வேலைக்காரன் போகிறான்)

அப்புக்: (*மாசிலாமணியைப் பார்த்து*) தங்கச்சி! இப் பேர்ப்பட்ட ஆட்களை எளிதாக நினைக்கக்கூடாது. இடக்கு அதிகம்; அடக்கம் ஒரு நூறு ரூபாய்ச் சாமான் தான் தலையில் கொண்டு விற்பான். இலட்சக்கணக்கில் விற்றுவடுவான் அவற்றை.

மாசிலா: இருக்கும்; வாங்க ஆள் இருந்தால் ஏன் விற்கமாட்டான்?

(கண்ணன் பாடிக்கொண்டு வருதல்)

வாங்குங்கள் வாங்குங்கள் வாழ்க்கைக்கு இப்போதே
வாங்குங்கள் வைத்திருக்கும் கைப்பணம் வீணாகும்
இமயம்போல் வெள்ளைமல் காக்கைபோல் கருஞ்சேலை
அல்லிபோல் மேலாக்கு அரவம்போல் சிறுதுண்டு
கரடிகள் சிங்கங்கள் காட்டானை முகங்கள்போல்
பின்னிய குட்டைகள் பெய்வளை மோதிரம்
மயிலெண்ணெய் முகப்பூச்சு பல்பசை கரும்பொட்டு
காதுக்குக் கழுத்துக்குக் காலுக்கு நல்லணி
வாங்குங்கள் இவை இன்றேல் வையத்தில் அழகேது
காதலோ உள்ளன்போ கலந்த இல்வாழ்க்கையோ
அறத்துப்பால் பொருட்பாலோ அந்த இன்பப்பாலோ
எல்லாம்பொய் நாமெல்லாம் மிருகம்தான் பறவைதான்
வாங்குங்கள் வாங்குங்கள் வாழ்க்கைக்கு இப்போதே.

அப்புக்: அந்தப் பெண்ணாலேதான் ஏதாவது வாங்க வேண்டியிருக்கிறது: இல்லாவிட்டால் ஒரு பைசா வுக்குக்கூட இவனிடம் வியாபாரம் பண்ணமாட்டேன். என்ன பொன்னி, நாலு ரிப்பன் போதுமா?

பொன்னி: ஆமா, ரிப்பன், நாடா எல்லாம் முந்தியே வாங்கித் தந்திருக்கத் தவறி விட்டிங்க. கட்டாயமா இப்பவாவது எல்லாம் வாங்கித்தாருங்கள்.

கோதை: ஏ அம்மாடி, இந்த உலகத்திலே எத்தனை பேருதான் பொய் பேசுகிறவர்கள் என்று எண்ணவே முடியாது. உனக்கு அவரு முந்தியெல்லாம் ஒன்றும் தந்ததே இல்லையா பொன்னி?

பொன்னி: நீ மிகவும் கெட்டிக்காரி; அவருடையதெல் லாம் உனக்குத்தான்.

அப்புக்: இந்தா சும்மா இருக்க மாட்டிங்களா? ஒவ் வொரு காரியத்துக்கும் ஒரு நேரமில்லையா? எல்லா ருக்கு முன்னே என்ன இப்படியெல்லாம் பேசலாமா?

கோதை: பேருதான் பெரிய பேரு. எனக்கு ஒரு நல்ல ரவிக்கைகூட இல்லை. மச்சான் இன்றைக்கு எனக்கு எல்லாம் வாங்கித்தர வேண்டும்.

அப்புக்: உனக்கு மூளையே இல்லை.

கோதை: நான் தான் வழியில் எல்லாம் திருட்டுக் கொடுத்து விட்டு வெறும் ஆளாய் வந்திருக்கேன் என்று சொன்னேனே, என்னைத் தொல்லைப்படுத்த லாமா?

கண்ணன்: ஆமா, ஆமா! ஊருமுழுக்க அதிகத் திருட்டு. அறிந்தே வந்தேன்; கவனம் வேண்டும். உடனே வாங்கணும்; காசு பணம் தொலைந்து போகும்.

அப்புக்: பயப்படாதே தம்பி, இங்கு உனக்கு எதுவும் ஏற்படாது.

கண்ணன்: விலைமிகுந்த பொருள்கள் எல்லாம் வித விதமாய் வைத்திருந்தேன். அதனாலேதான் பய மெனக்கு. அப்புச் சொன்னால் பயமே இல்லை.

அப்புக் : அப்படி என்ருல் பாட்டுப் புத்தகம் இருக்கா ?

கண்ணன் : இதோ பார் ஒரு பாட்டுப் புத்தகம் ?

செட்டியார் வட்டியிலே செல்வமாய்க் கொழுத்திருந்தார்
செட்டியம்மாள் நாக மொன்றைச் சீக்கிரமாய்ப் பெற்ருளே
மருத்துவச்சி ஊரெல்லாம் மாநாகக் கதைசொன்ருள்
ஊரார் அவ்விட்டார்க்கு ஊ ஊ வென் றஞ்சினரே.

இதுமாதிரி எத்தனையோ பாட்டுகள் இதிலே உண்டு.

பொன்னி : இது உண்மையா ? நடந்ததுதாஞ ?

கண்ணன் : இது எழுதி ஒரு மாதங்கூட ஆகவில்லையே, பொய்யாகவா இருக்கும் ? பொய்யை நான் தூக்கிக் கொண்டு வருவேஞ ? தூக்கத்தான் முடியுமா ?

பொன்னி : அந்த புத்தகத்தை வாங்குங்கள்.

அப்புக் : சரி; அவளுக்குவேண்டிய வெல்லாம் எடுத்து வையப்பா.

கண்ணன் : இதோ மீனும்பாள் கதை — ஏப்ரல் 20 புதனன்று மலையாளக் கடற்கரையில் ஒரு மீன் இடுப் புக்கு மேலே பெண். கீழே தான் மீனும். ஆனல் முழுதும் பெண்ணுயிருந்தவள், தன்னை மணக்கவந்த வனை மறுத்ததால் கீழ்ப்பாகம் மீனுய்ப் போயிற்று. இது நடந்த கதை. முழுதும் கேட்டால் மனம் உருகும்.

கோதை ; ஐயா, இது உண்மைக் கதையா ஐயா ? அதை எடுங்கள்.

கண்ணன் : ஐந்து "ஐக்கோர்ட்டு" நீதிபதிகள் கையெழுத்துப் போட்டிருக்கிருர்கள். சாட்சிகளும் கையெழுத்தெல்லாம் போட்டிருந்தால் என்னுல் தூக்கிக்கொண்டே வர முடியாது. இதோ இதைப் பாருங்கள் ; இது ஒரு சிரிப்புக் கதை.

அப்புக் : அப்படியானுல் எல்லாவற்றிலும் ஒவ்வொன்று எடுத்து வை.

கண்ணன்: இதைப் பாருங்கள். இது ஒரு தரு மெட்டு; மூன்றுபேர் சேர்ந்து பாடுகிற பாட்டு. இதிலே மூன்று வாங்கினால்தான் நீங்க மூன்றுபேரும் பாடமுடியும். பேருக்கொன்று வைத்துக்கொண்டு பாடுங்கள்

அப்புக்: புத்தகங்கள் இருக்கட்டும். நாங்கள் மூவரும் பிறகு பாடிக்கொள்வோம். எங்கள் அப்பாவும் புதிய இருவரும் என்னென்னமோ பேசிக்கொண்டிருக் கிறார்கள். அவர்களுக்கு இடைஞ்சல் இல்லாமல் இருக் கட்டும். ஏய், புத்தகங்களை எல்லாம் எடுத்துக் கொண்டு வாடா. ஏ, குட்டிகளா. உங்களுக்கு வேண் டிய சாமான்களையும் எடுத்துக்கொண்டு உள்ளே வாருங்கள் உள்ளே (போகிறார்கள்).

கண்ணன்: வாங்குகின்றவர்கள் எல்லாம் வாங்கட்டும். நான் உன்னிடத்திலே பணம் வாங்கிக்கொள்வேன்; வாங்கியும் இருக்கிறேன்.

நாடா, ஊசி, கழுத்துமாலை—தங்கம், வெள்ளி, கில்டு நகைகள்—தாம்பரம், செம்பு. பித்தளைச் சாமான்—வேண்டியவெல்லாம் எடுத்துக்கொள்ளுங்கள்.

வேலைக்காரன் வருதல்

வேலைக்: ஐயா, பன்னிரண்டு பயில்வான்கள் கர மாதிரி இருக்கிறார்கள். மல், கம்பம், குத்துச் சண்டை யெல்லாம் செய்யப்போகிறார்கள். வந்து பார்க்க வேண்டும்.

கந்தக்: போட்ட கும்மாளம் போதாதா? அது நமக்கு வேண்டாம் என்ன பெரியவரே (சிம்மளனைப்பார்த்து) இதெல்லாம் உங்களுக்குப் பிடிக்குமா?

கயாபாகு: நாங்கள் போய்க் கொஞ்சம் வேடிக்கைப் பார்த்துவிட்டு வருகிறோம்.

வேலைக்: ஒரு ஆள் 12 அடி உயரம் இருக்கிறானுங்க.

கந்தக்: போடா முட்டாள். அதெல்லாம் என்ன பேச்சு. விருந்தாளிகளை அழைத்துக்கொண்டு போய்க் காட்டுவானா, என்னமோ பேசுகிறான்.

வேலைக்: பக்கத்திலே தான்; இப்படியே வரலாம்.

கயபாகு: (கமலாபதியிடம்) கோனாருக்கு நம்மைப்பற்றி ஒன்றும் தெரியாது. பையனை இனிப் பிரிக்காவிட்டால் கெட்டுப்போகும். எல்லைமீறிப் போய்விட்டது; இனி விடக்கூடாது, (பூக்காந்தனைப் பார்த்து) இளைஞரே நும் கண்ணும் கருத்தும் சாப்பாட்டில் இல்லையே. எனக்கும் இளமை, காதல் எல்லாம் இருந்தன. காதலிக்கு விழாச் சமயத்தில் வேண்டிய பொருள்களை வாங்கித்தர வேண்டாமா? அதற்குக்கூட முடியாமலே செயலற்று மூழ்குவது என்ன காதலோ? உனக்கு இழப்பு இல்லை. ஆனால், அவள் தன்னிடத்தில் உனக்கு அன்பில்லை என்று தான் கூறப்போகிறாள். அப்போது உனது பிடிப்பினால் என்ன பயன் ஏற்படும்?

பூக்காந்: பெரியவரே, இப்பொருள்களை அவள் கண்ணால் கூடப் பாராள்—என்னிடத்தில் அவள் விரும்புவதெல்லாம் எனது உள்ளத்தில் குடியிருக்கவே—அது அவளுக்கே கொடுக்கப்பட்டும் விட்டது எங்கள் மூச்சிலும் ஒவ்வொரு பேச்சிலும் உலகப்பொருளே மதிப்பிழக்கும்; எங்கள் பேச்சோ முடிவற்ற பேச்சாக வளரும்.

கயபாகு; வளரட்டும்; நான் அதைத் தடுக்கவில்லை. சிறப்பாக என்னதான் பேசப்போகிறாய்? கேட்கக் கூடியதாக இருந்தால் கேட்கலாமல்லவா?

பூக்காந்: நன்றாய்க் கேளுங்கள். எனக்கு ஒரு சாட்சியாகக் கூட இருங்கள்.

கயபாகு: (கமலாபதியைச்சுட்டி) என்னுடைய நண்பர்; இவர் மற்றொரு சாட்சி.

வேண்டாம். நான் எங்கே போவேன், என்ன செய் வேன், என்பனவெல்லாம் கேட்கவேண்டாம்.

கமலா: இளவரசே, தங்கள் முடிபு சரியானதுதான். ஆனால் தங்களின் சக்தி தங்களின் அவசியத்துக் கேற்றபடி நடந்துகொள்ளும் நிலையில் இல்லாமை யால் எனது சொற்படி நடப்பதே நல்லது.

பூக்நாந்: மாசிலாமணி. இப்படி வா. (இருவரும் தனித்து மறைமொழி பேசிக்கொள்ளல்.)

கமலா: (தனிப்பேச்சு) இக் காட்டைவிட்டுப் புறப்பட முடிவுசெய்துவிட்டனர். அந்தப் போக்கில் என் காரியமும் நிறைவேறவேண்டும். அவர் மதிப்புக் கெடாமல் விபத்திலிருந்து அவரைக் காக்கவேண்டும். எனது மதுரை மன்னனையும் காணவேண்டும். கண்டு அவர் துன்பத்தைப் போக்கி, யானும் அமைதிபெற வேண்டும்.

பூக்நாந். கமலாபதி, நாங்கள் உறுதிசெய்துவிட்டோம் போக விடை பெறுகின்றோம்.

கமலா: நும் தந்தையாருக்கு நான் ஓரளவு உதவி செய்தவன் என்பது தாங்கள் அறிந்ததே, அவரிடத் தில் அன்புள்ளவன். அவரையடுத்து நும்மிடமும் எனக்கு மிகவும் அன்புண்டு. நீங்கள் புறப்படுமுன் யான் கூறுவதை ஆழ்ந்து கேட்டுவிட்டுச் செல் லுங்கள். நும் கூட்டு வாழ்வு இனிப்பிரியாது. பிரிக்க வும் முடியாது. இறைவனும், இயற்கையும், சான் றோரும் துணை செய்வதைக் காண்பீர்கள். தங்கள் தகுதிக்கேற்ப வரவேற்புக்குரிய ஓரிடத்திற்கு உங்களை அழைத்துச் செல்லவே நான் விரும்புகிறேன். குறிக் கோளின்றி வேற்று நாடு செல்வது ஒரு வழியும் இல்லாவிட்டாலல்லவா? தங்களைப் பிரிந்து வருந்தி யிருக்கும் நும் தந்தையரையும் ஆற்றிக் கோபம் தணித்து அன்பு வளருமாறு செய்வேன். இதற்கு இணங்கலாமா?

பூக்காந்: உண்மையா? முடியக் கூடியதா? மனித சக்திக்குட்பட்டதா? மந்திர ஏற்பாடா? இது நிறைவேறினல் எனக்குமட்டுமல்ல, எங்கள் இருவருக்குமே தாங்கள்தான் தெய்வம். தங்கள் வார்த்தையே எங்கள் வாழ்க்கை வண்டி போகச் சிறந்த சாலையாகும்.

கமலா: இருவருமே போகும் இடம்பற்றி எண்ணவில்லையா?

பூக்காந்: இல்லை. குறிக்கோளின்றித் தொடங்கப்பட்ட எதற்கும் விதியே வழி காட்டும் என்பதே எங்கள் எண்ணம். பாய்மரக் கப்பல் காற்றின் வழியில் செல்லவில்லையா? தாங்கள் கருதியுள்ள இடம் எது?

கமலா: பாண்டியன் தலைநகரம் ஆகிய மதுரைக்கே செல்லவேண்டும். அது அரசி தங்குவதற்கு மிகவும் ஏற்ற இடம். பிள்ளையற்ற மனைவியற்ற, நரசிம்மன் அரசியை மகிழ்வுடன் வரவேற்பார். ஆனல், மாசிலாமணி அரசி உடையில் செல்ல வேண்டும். தாங்கள் கயபாநவின் மகனர் என்று அறிந்ததும் தந்தையாருக்குச் செய்த பிழையை மகன் மூலம் பொறுத்து, மன்னித்தருளுமாறு தங்களை வேண்டுவர். தங்களுக்குச் செய்யும் சிறப்பு மூலமாகத் தந்தைக்குச் சூழ்ந்த தீவினைப் பழியைப்போக்கி மகிழ எண்ணுவர். பகையால் கேடும், அன்பால் நன்மையும் ஏற்படும் என்பது இரு நாட்டரசரும் அறிந்ததே யாதலின் பகை யொழிந்து அன்பு வளரும்.

பூக்காந்: கமலாபதி, தாங்கள் தீர்க்கதரிசியின் உள்ளம் பெற்றவர். எதிர்வறிந்து கூறுகிறீர்கள். நான் மதுரை அரசரைக் காண ஒரு காரணம்கூட வேண்டாமா?

கமலா: நும் தந்தையார் முதலில் நும்மை அனுப்பினர்; பின்னல் அவரும் வந்து கொண்டிருக்கிறர் என்று கூறினல் போதும். அத்துடன் மதுரை யாசருக்கும் நும் தந்தையாருக்கும் எனக்கும் மட்டும் தெரிந்த சில

செய்திகளை ஒரு கடிதத்தில் எழுதித் தருகிறேன். அக் குறிப்பை வைத்துக்கொண்டு அரசரிடம் அறிவோடு பேசல் வேண்டும் அரசன் அப்பேச்சிலிருந்து நும்மை முழுதும் நம்பித் தந்தையார் வருதலும் உறுதி யென்றே முடிவு கட்டி மகிழ்வார்.

பூக்காந் : யாங்கள் தங்களுக்கு வழி வழியாகக் கடமைப் பட்டுள்ளோம்.

கமலா : காற்றையும் கடலையும் கப்பலையும் நம்பி, எங்காவது போகலாம் என்று விதியை வம்புக்கிழுக்கும் விதம் சிறந்ததாகாது. அறியாத ஊரில் சென்று பிழைப்புக்குத் துன்புறுவதும் அழகல்ல. காதலர்களின் காதலும், இன்பமும், செல்வததால் தான் செழிப் படையும். வறுமையால் வாட விடுவது மிகவும் அறியாமையாகும்.

மாசிலா : நான் இதனை ஒத்துக்கொள்ள முடியாது. வறுமை முகத்தாமரையை வாடச் செய்யலாம். அக மலரை அது என்ன செய்யும்? குழிந்த கண், வற்றிய கன்னம், சூம்பிய தோள் இவற்றுக்குக் காதல் புறம்பானதா? பிதுங்கிய கண்ணும், தள்ளிய வயிறும் உடைய ஊனோறு செல்வத்துக்குத்தான் காதல் சொந்தமானதா? அப்படியானல் அரசருக்கு அதிக மும், குடிகட்குப் படித்தரம்போல் குறைவாகவும் அல்லவா அமையும்!

கமலா : எதற்காக இவ்வளவு நீண்ட பேச்சு. கோனார் வீட்டில் நும்போன்ற பெண் தோன்றப்போவதே இல்லை. பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்ற அடிப்படையில் வறுமையின் கொடுமையைக் கூறி னேன். அடிமை, மடமை இரண்டையும்விட வறுமை கொடுமை யுடையதாக எனக்குப்பட்டது. அதனல் கூறினேன். அடிமை யுலகிலும் அன்பு, காதல், இன்பம் இவை இருக்க நான் காண்கின்றேன். வறுமை யுலகில் இருப்பது என் கண்ணுக்குட்பட வில்லை. ஒரு வேளை எனது குற்றமாகவும் இருக்க லாம். கோனார் வீட்டுப் பெண்ணுக்கு இவ்வளவு

என்பது தெரிந்தே உன் மாயவலையில் சிக்கவைத்து மணத்துக்கும் ஏற்பாடு செய்துவிட்டாய். பெண்ணுடலைத் தூக்கிலிட வேண்டாமென்று எண்ணுகிறேன். ஆனால் நீ செய்த குற்றம் பெரியது. சட்டத்தையும் மீறி அரசன் இரக்கம் காட்டினேன்.

கந்தக்; (போகிறேன்) இவர் அரசர் மகனா? எல்லாம் எமனாகத்தான் வந்திருக்கு.

கயபாத: ஏ, தடி முட்டாளே! அவனை மறந்துவிடு. அவனை நினைத்துப் பெருமூச்சு விட்டாலும் உனது உடம்பு உனது இப்போதைய நிலையைவிடத் துன்பத்துக்குள்ளாகும். முட்களால் உடலெல்லாம் கீறிவிட்டு ஆற்ற ஏற்பாடு செய்வேன். (மகனை நோக்கி) நான் கூறுவதைக் கவனி. உடனே என்னுடன் அரண்மனைக்கு வந்துவிடு. கோனாரே இத்தடவை மன்னித்தேன். பெண்ணே, இளவரசனைப்பற்றி எண்ணி ஏதாவது செய்வதாக வெளிப்பட்டால் நரகவேதனை என்பதனை மண்ணுலகில் பலர் காணும்படி நீ அனுபவிக்க நேரும்.

மாசிலா; சண்டாளன் வீட்டிலும் சந்திரன் நிலவெறிக்கிறான். சூரியன், அரண்மனை முகட்டிலும் குடிசையிலும் ஒரு படித்தாகவே தன் முகத்தைக் காட்டுகிறான். உயர்ந்த பண்பும் சிறப்பும் உடையவர்க்குப் பெரியர் சிறியர் எல்லாம் ஒன்றே; உயர்ந்தவர் தாழ்ந்தவர் என்று வேறுபட்ட எண்ணமே வருவதில்லை. எனக்குப் பயம் ஒன்றுமில்லை. இவ்வார்த்தைகளை அவரிடம் கூற எண்ணினேன். கூற்றால் தெளிவடைய மாட்டார் என்று எண்ணியே வாளா இருந்தேன் (பூக்காந்தனைப் பார்த்து) ஐயா, தாங்கள் அவர் பின்னாலேயே சென்றுவிடக் கூடாதா? அரண்மனையிலிருந்து அரசியல் வினையில் ஈடுபடுங்கள். கனவிலிருந்து தெளிந்தேன்; விழித்தே யிருப்பேன். இனிக்கனவுகாண மாட்டேன். கண்ணில் நீர் பெருக, ஏனத்தில் பால்பெருக ஆடு கறந்தே எனது வாழ்க்கை கழியட்டும்.

கமலாபதி: பெரிய கோனாரே, துன்பத்தை மனதில் வைத்துக்கொண்டு சாகக்கூடாது! வாழவும் கூடாது. மனம்விட்டுச் சொல்லலாம்.

கந்தக்: பேசத்தோன்றவில்லை; நினைத்தாலே பயம்; (பூக்காந்தனைப் பார்த்து) உம் செய்கை, அமைதியாக இருந்த எண்பத்து மூன்று ஆண்டுக் கிழவனை அலையில் தள்ளி அசைக்கின்றது. எனது தந்தை செத்த அதே படுக்கையில் அமைதியாகச் சாக நினைத்திருந்த என்னைப் படுகுழியில் தள்ளிவிட ஏற்பாடு செய்துவிட்டது. (மாசிலாமணியைப் பார்த்து) இளவரசர் என்று முன்னரே உனக்குத் தெரிந்திருந்தும் இப்படி நீ நடந்தது கொலைக்கு வழிசெய்து கொண்டதேயாகும். நான் போதிய அளவு வாழ்ந்துவிட்டேன். இப்போது இறந்தாலும் குறையில்லை.

பூக்காந்: என்னைப்பெறவேண்டுமென்று என் தந்தையார் பெறவில்லை, எந்த நிபந்தனையிலும் நான் அவருக்கு மகனாக வரவில்லை. புலன்களும், அறிவும் எனக்குத் தனியே உண்டு. இதுகாறும் கழுத்துப் பட்டை போட்டுக்கொண்டிருந்த வேட்டை நாயாக இருந்தேன். பட்டையை அறுத்துவிட்டேன். விடுதலை பெற்றபின்பு துக்கம் ஏது? அரசன் சட்டம் மணச் சடங்கைத் தடுக்கலாம், எங்கள் காதலை — ஒருமைப் பாட்டை என் செய்யும்.

கமலாபதி: இளவரசே நும் தந்தையார் பேச்சு அவருடைய குணத்தைவிட முரட்டுத்தனமானது. அவர் போக்கை மாற்ற முற்படுவது வீண். அவர் கண்ணில் படாமல் அவர் சினம் தணியும்வரை மறைந்திருப்பதே மேல் என்று எனக்குத் தோன்றுகிறது.

பூக்காந்; தாங்கள் கமலாபதி தானே.

கமலாபதி. (வேடம் மாறி) ஆம்; அவரே

பூக்காந்: அவரிடம் பேசவோ, என்றேனும் கண்ணில் படவோ விரும்பவில்லை.

மாசிலா: இது இப்படி நேரலாம் என்று நான் பல தடவை தங்களிடம் (பூக்காந்தன்) கூறியிருக்கிறேன். எனது வாழ்வு கெட்டாலும், எனது வார்த்தை பலித்ததில் மகிழ்ச்சியே. எனது நல்வாழ்வு முடிந்துவிட்டது.

பூக்காந்: உனது வாழ்வு எப்போதும் உள்ளதுதான். ஆனால் நல்வாழ்வு இனித்தான் தழைக்க உள்ளது. எனது ஆண்மை உள்ளளவும் உனது நல்வாழ்வு கெடாது. விதையை முளைக்கவைக்கும் இப்பூமி நம் காதலை அழித்துவிடாது. அரசன் ஆணை அரசாங்கத்திலிருந்து என் உரிமையைப் பறித்துவிடலாம். என் காதல் உரிமை என்னிடமிருப்பதைககண்டு வெம்பித் துன்புறத்தான் முடியும். பாவம்! அரசாங்கம் சந்ததி இழந்தது. என் காதல் எனக்கு அழியாத சந்ததியாக இருக்கின்றது.

கமலா; நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். எதிர்மறையானதல்ல; கூறலாமா?

பூக்காந்: என் மனமே எனக்குக் கூறிவிட்டது. நியாயமும் அதுதான். அதைப் பின்பற்றி வாழ்வதைவிட இன்பமாய் வேறு எதனால் வாழமுடியும்? சிம்மள அரசாங்கமட்டுமல்ல, சகலவன் ஒளிபடும் பூமியும், நீரில் மறைந்துள்ள பொருள்களும், ஒருமிக்க எனக்குக் கிடைப்பதாக இருந்தாலும் அவைகள் இப்பெண்ணினுடன் வாழும் எனது இன்ப வாழ்வைவிடத் தாழ்வானவையேயாகும். என் தந்தையார் என்னைக் காணாது துன்புறலாம். ஆனால் நான் அவரைக் காணப்போவதில்லை. என் காதலைக் கெடுத்துக்கொண்டு துன்புறப் போவதுமில்லை. எனக்கொரு பிள்ளை பிறந்திருந்தால் என் உரிமையில் தந்தையார் நடந்ததுபோல் நான் நடக்கமாட்டேன். காதல் வாழ்வில் போராட்டம் தோன்றினாலும் இறுதியில் வெற்றி உறுதி. நான் அவளை அழைத்துக்கொண்டு அக்கரை நாடு செல்லப் போகின்றேன. அது உறுதி. உமது நண்பருக்கு உம் அறிவுரை கூறலாம். அதுதான் நல்லது. எனக்கு

வேண்டாம். நான் எங்கே போவேன், என்ன செய்வேன், என்பனவெல்லாம் கேட்கவேண்டாம்.

கமலா: இளவரசே, தங்கள் முடிபு சரியானதுதான். ஆனால் தங்களின் சக்தி தங்களின் அவசியத்துக் கேற்றபடி நடந்துகொள்ளும் நிலையில் இல்லாமையால் எனது சொற்படி நடப்பதே நல்லது.

பூக்காந்: மாசிலாமணி. இப்படி வா. (இருவரும் தனித்து மறைமொழி பேசிக்கொள்ளல்.)

கமலா: (தனிப்பேச்சு) இக் காட்டைவிட்டுப் புறப்பட முடிவுசெய்துவிட்டனர். அந்தப் போக்கில் என் காரியமும் நிறைவேறவேண்டும். அவர் மதிப்புக் கெடாமல் விபத்திலிருந்து அவரைக் காக்கவேண்டும். எனது மதுரை மன்னனையும் காணவேண்டும். கண்டு அவர் துன்பத்தைப் போக்கி, யானும் அமைதிபெற வேண்டும்.

பூக்காந். கமலாபதி, நாங்கள் உறுதிசெய்துவிட்டோம் போக விடை பெறுகின்றோம்.

கமலா: நும் தந்தையாருக்கு நான் ஓரளவு உதவி செய்தவன் என்பது தாங்கள் அறிந்ததே, அவரிடத்தில் அன்புள்ளவன். அவரையடுத்து நும்மிடமும் எனக்கு மிகவும் அன்புண்டு. நீங்கள் புறப்படுமுன் யான் கூறுவதை ஆழ்ந்து கேட்டுவிட்டுச் செல்லுங்கள். நும் கூட்டு வாழ்வு இனிப்பிரியாது. பிரிக்கவும் முடியாது. இறைவனும், இயற்கையும், சான்றோரும் துணை செய்வதைக் காண்பீர்கள். தங்கள் தகுதிக்கேற்ப வரவேற்புக்குரிய ஓரிடத்திற்கு உங்களை அழைத்துச் செல்லவே நான் விரும்புகிறேன். குறிக்கோளின்றி வேற்று நாடு செல்வது ஒரு வழியும் இல்லாவிட்டாலல்லவா? தங்களைப் பிரிந்து வருந்தியிருக்கும் நும் தந்தையரையும் ஆற்றிக் கோபம் தணித்து அன்பு வளருமாறு செய்வேன். இதற்கு இணங்கலாமா?

பூக்காந் : உண்மையா? முடியக் கூடியதா? மனித சக்திக்குட்பட்டதா? மந்திர ஏற்பாடா? இது நிறைவேறினுல் எனக்குமட்டுமல்ல, எங்கள் இருவருக்குமே தாங்கள்தான் தெய்வம். தங்கள் வார்த்தையே எங்கள் வாழ்க்கை வண்டி போகச் சிறந்த சாலையாகும்.

கமலா : இருவருமே போகும் இடம்பற்றி எண்ணவில்லையா ?

பூக்காந் : இல்லை. குறிக்கோளின்றித் தொடங்கப்பட்ட எதற்கும் விதியே வழி காட்டும் என்பதே எங்கள் எண்ணம். பாய்மரக் கப்பல் காற்றின் வழியில் செல்லவில்லையா ? தாங்கள் கருதியுள்ள இடம் எது ?

கமலா : பாண்டியன் தலைநகரம் ஆகிய மதுரைக்கே செல்லவேண்டும். அது அரசி தங்குவதற்கு மிகவும் ஏற்ற இடம். பிள்ளையற்ற மனைவியற்ற, நரசிம்மன் அரசியை மகிழ்வுடன் வரவேற்பார். ஆனுல், மாசிலாமணி அரசி உடையில் செல்ல வேண்டும். தாங்கள் கயபாநவின் மகனுர் என்று அறிந்ததும் தந்தையாருக்குச் செய்த பிழையை மகன் மூலம் பொறுத்து, மன்னித்தருளுமாறு தங்களை வேண்டுவர். தங்களுக்குச் செய்யும் சிறப்பு மூலமாகத் தந்தைக்குச் சூழ்ந்த தீவினைப் பழியைப்போக்கி மகிழ எண்ணுவர். பகையால் கேடும், அன்பால் நன்மையும் ஏற்படும் என்பது இரு நாட்டரசரும் அறிந்ததே யாதலின் பகையொழிந்து அன்பு வளரும்.

பூக்காந் : கமலாபதி, தாங்கள் தீர்க்கதரிசியின் உள்ளம் பெற்றவர். எதிர்வறிந்து கூறுகிறீர்கள். நான் மதுரை அரசரைக் காண ஒரு காரணம்கூட வேண்டாமா ?

கமலா : நும் தந்தையார் முதலில் நும்மை அனுப்பினுர்; பின்னுல் அவரும் வந்து கொண்டிருக்கிருர் என்று கூறினுல் போதும். அத்துடன் மதுரை யாசருக்கும் நும் தந்தையாருக்கும் எனக்கும் மட்டும் தெரிந்த சில

செய்திகளை ஒரு கடிதத்தில் எழுதித் தருகிறேன். அக் குறிப்பை வைத்துக்கொண்டு அரசரிடம் அறிவோடு பேசல் வேண்டும் அரசன் அப்பேச்சிலிருந்து நும்மை முழுதும் நம்பித் தந்தையார் வருதலும் உறுதி யென்றே முடிவு கட்டி மகிழ்வார்.

பூக்காந் : யாங்கள் தங்களுக்கு வழி வழியாகக் கடமைப் பட்டுள்ளோம்.

கமலா : காற்றையும் கடலையும் கப்பலையும் நம்பி, எங்காவது போகலாம் என்று விதியை வம்புக்கிழுக்கும் விதம் சிறந்ததாகாது. அறியாத ஊரில் சென்று பிழைப்புக்குத் துன்புறுவதும் அழகல்ல. காதலர்களின் காதலும், இன்பமும், செல்வததால் தான் செழிப் படையும். வறுமையால் வாட விடுவது மிகவும் அறியாமையாகும்.

மாசிலா : நான் இதனை ஒத்துக்கொள்ள முடியாது. வறுமை முகத்தாமரையை வாடச் செய்யலாம். அக மலரை அது என்ன செய்யும்? குழிந்த கண், வற்றிய கன்னம், சூம்பிய தோள் இவற்றுக்குக் காதல் புறம்பானதா? பிதுங்கிய கண்ணும், தள்ளிய வயிறும் உடைய ஊனோறு செல்வத்துக்குத்தான் காதல் சொந்தமானதா? அப்படியானல் அரசருக்கு அதிக மும், குடிகட்குப் படித்தரம்போல் குறைவாகவும் அல்லவா அமையும்!

கமலா : எதற்காக இவ்வளவு நீண்ட பேச்சு. கோனூர் வீட்டில் நும்போன்ற பெண் தோன்றப்போவதே இல்லை. பசி வந்திடப் பத்தும் பறந்து போம் என்ற அடிப்படையில் வறுமையின் கொடுமையைக் கூறி னேன். அடிமை, மடமை இரண்டையும்விட வறுமை கொடுமை யுடையதாக எனக்குப்பட்டது. அதனல் கூறினேன். அடிமை யுலகிலும் அன்பு, காதல், இன்பம் இவை இருக்க நான் காண்கின்றேன். வறுமை யுலகில் இருப்பது என் கண்ணுக்குட்பட வில்லை. ஒரு வேளை எனது குற்றமாகவும் இருக்க லாம். கோனூர் வீட்டுப் பெண்ணுக்கு இவ்வளவு

ஆத்திரம் வரும் என்று எண்ணியிருந்தால் நான் கூறி யிருக்கமாட்டேன்.

பூக்காந் : கமலாபதி! கோனூர்குலம் உலகியலில்—இல்லை அரசியலில் குறைவாக எண்ணலாம் சிலர். குணவுல கில், அறிவுலகில் பிறப்பு விலக்கப்படு பொருளாகும். மாசிலாமணியின் குணம், அரசகுலம் பூசனைக்குரிய பொருளாகக்கொள்ளக்கூடாது.

கமலா : தங்கள் இருவரிடமும் நான் மன்னிப்புச் கேட்டுக்கொள்கிறேன்.

மாசிலா : பெரிய வார்த்தையை எளிய பிறவியால் தாங்க முடியாது. பரிகசிப்பாக முடியும். ஆவன செய்ய வேண்டுகிறேன்.

பூக்காந் : கமலாபதி, தாங்கள் வெறுங்காலுடன் முட் புதரில் நிற்கின்றோம். எம் தந்தையின் உயிரைக் காத்து என்னையும் காத்து எம் குலத்தையே காக்கும் குணக்குன்றாக உம்மை யாங்கள் அடைந்திருக்கின் றோம். எனது நிலை அரச குமரனாக ஒரு அரசினை அடையும் அளவில் இல்லை. மதுரையை எப்படி அடைவது ?

கமலா : அதுபற்றிக் கவலை வேண்டாம். மதுரையில் எனக்குரிய சொத்துண்டு. அங்கு சென்றதும் தங்களை அரச குமரனாகக் கணப்பொழுதில் ஆக்கமுடியும். அது எனது நாடகம். இதைக் கேளுங்கள் ஒத்துக்கொள் வீர்கள். (காதுடன் சொல்லல்) ... ... மற்றொரு புறம்.

கண்ணன் : ஆ! ஆ! ஒழுக்கம், நல் நடத்தை, இவை முட்டாள் தனத்துக்கு முன்னாலே பிறந்தன. நம் பிக்கை என்பது அடுத்தபடி பிறந்தது. என்னிட மிருந்த பழைய சரக்கெல்லாம் தள்ளிவிட்டுப் பண மாக்கிவிட்டேன். எனக்கு முன்னே எனக்கு முன்னே என்று காசிக் கயிற்றைக் கையிலே கட்டிக்கொள்ள, வாங்க விழுவது மாதிரி விழுந்தார்கள். அவர்கள்

பணமெல்லாம் என் பையிலே விழுந்து விட்டன. விற்று பணம் சம்பாதிக்க முடியும்! எத்தனையோ பணப் பைகள் என்னிடத்தில் வந்து மறைந்து கொண்டன. அப்புக் கோனாரும் சரியான ஆள் தான். இரண்டு பெண்களையும் சரிக்கட்டி நடத்தினாரே!

கமலா : (இடைமறித்து) யாரடா அவன் வியாபாரியா? உன்னையே பண்டமாற்று வியாபாரம் செய்யவேண்டி யிருக்கிறது. நானென்று நினைத்தேன். வலுவில் நீயே வந்து சேர்ந்தாய். உன் பெயர் என்ன ?

கண்ணன் : என் பெயர் கண்ணன். நான் சும்மா விகடமாகப் பேசிக்கொண்டு வந்தேன் (தனக்குள் இன்று தூக்குத் தண்டனை தான்).

கமலா : வெயில் கொளுத்தும்போது என்னடா நடுக் கம். பயப்படாதே, உன்னை யாரும் விழுங்கிவிட மாட் டார்கள்.

கண்ணன் : ஐயா, நான் ஓர் ஏழை.

கமலா : நல்லது. அப்படியே இரு. உன்னிடம் யாரும் திருடமாட்டார்கள்; மோசடியும் ஏற்படாது. இருக் கட்டும். உனது வியாபார வேடத் துணைகளை மட்டும் கழற்று. அதற்குப் பதிலாக இவருடைய உடைகளை அணிந்துகொள். இதனாலும் உனக்கு இலாபம் ஏற் படினும் ஏற்படலாம். ஆனால் எமக்கு அவசியம் உண்டு.

கண்ணன் : நான் ரொம்ப ஏழைங்க. தனக்குள் உன்னைத் தெரியுதையா).

கமலா : முடிந்ததா ? என்னடா இம்...விரைவில்.

கண்ணன் : இதோ இதோ (தனக்குள் ஏதோ மறை விருக்கிறது).

(கண்ணனும்–பூக்காந்தனும் உடை மாற்றுதல்)

கமலா : அம்மா, நீயும் அத்தொப்பியில் உள்ள பஞ்சுகளை எடுத்து மேலே ஒட்டிக்கொண்டு உருமாற்றிக் கொள்ளவேண்டும்.

மாசிலா : இந் நாடகத்தில் எனக்கும் ஒரு வேடமுண்டு. வேறு வழியில்லை. கப்பலில் கண்கள் படும்.

கமலா : உங்கள் உடைமாற்றம் முடிந்து விட்டதா !

பூக்காந் : மாசிலாமணியை எனக்கே தெரியவில்லை. என் தந்தையார் கண்டால்கூட என்னை அறிந்து கொள்ளமுடியாது.

கமலா : ஏய் வியாபாரி, இல்லை இல்லை - கண்ணு, நீ தொப்பியை எடுத்துக்கொள். போய் வருகிறேன்.

கண்ணன் : சரி, போய் வாருங்கள்.

கமலா : (தனிப் பேச்சு). எனக்குள்ள அடுத்த வேலை என்ன? நேரே அரசரிடம் போகவேண்டும். இவர்கள் இருவரும் மதுரைக்குப் போகிறார்கள் என்பதைக் கூற வேண்டும். இவர்களைப் பின்தொடர்ந்து அரசர் புறப்பட்டால் என்னை விட்டுப்போக மாட்டார். அவரைப் பார்க்க மனம் துடிக்கின்றது.

பூக்காந் : நற்காலம் நம்முடன் இருக்கட்டும் இனி இங்கு தாழ்க்கக் கூடாது. விரைவில் மதுரையை யடைவதுதான் நமக்கு நல்லது. (இருவரும் அகலுதல்).

கண்ணன் : இரண்டு கால், கை, கண், காது எல்லாம் எதற்காக! தனது சொந்த இலாபத்துக்குத்தான். இல்லாவிட்டால் இந்த உடை மாற்றித் தனம் எதற்கு ? எல்லாம் இலாபத்துக்குத்தான். நாம் எதையும் கண்ணை மூடிக்கொண்டு செய்யலாம். இந்த ஆண்டுப் பலனை எல்லாத் தெய்வங்களும் கண்ணை

மூடிக்கொண்டிருப்பதாகப் பஞ்சாங்கத்திலே எழுதி யிருக்கு. நாம் எதையும் ஆலோசிக்காமலே செய்ய லாம். யார் கண்டுபிடிப்பது? அரசனே ஒரு திருடன்; ஒரு பெண்ணை இழுத்துக் கொண்டு ஓடுகாலியாய் ஓடும்போது நான் எதைச் செய்யக்கூடாது? நான் இவர்கள் சென்றதை அரசனிடம் போய்க்கூறுவது ஒரு நல்ல காரியம் என்ருல் நான் போய்ச் சொல்ல மாட்டேன். நானும் மதுரை செல்லலாம் என்பதற் காகத்தான் இதற்குத் துணிகிறேன்.

(கந்தக் கோனார் அப்புக் கோனார் வருதல்)

இவர்களாலும் நமக்குப் பயன் உண்டாகலாம். மறைந்து கொள்வோம்.) பிழைக்கக் கிளம்பினால் மனிதனுக்கு எங்குதான் வேலையில்லை. கோயில், சந்தை, கடை, தூக்குப்போடும் இடம், ஒவ்வொரு மூலை முடுக்கிலும்தான் வேலை இருக்கிறது.

அப்புக்: அதற்குள் என்ன அவசரம். அவள் நம் வீட்டுக் குழந்தையே அல்லன் என்று அரசரிடம் மெய்ப்பித்தால் எல்லாம் சரியாய்ப் போகுது. நமக்கு என்ன பயம்?

கந்தக்: இல்லையப்பா, நான் சொல்வதைக்கேள்.

அப்புக்: சொல்லித்தொலை.

கந்தக்: நம்ப வீட்டுப் பெண்ணாயிருந்தால்தான் தொல்லை. அவள் காட்டில் கண்டெடுக்கப்பட்டபெண், அவளும் நம்மிடம் இல்லை. கண்டெடுத்தபோது அவள் கூட இருந்த சொத்து, உடை, கடிதம் எல்லாம் எடுத் துக் காட்டிவிட்டால் அதற்கப்புறம் எல்லாம் சட்டப்படி நடக்குது; நமக்கு என்ன பயம்?

அப்புக்: ஆமப்பா? நான் அரசனிடம் எல்லாம் சொல்லி விடுகிறேன். அதோடு அவன் பிள்ளை மோசக்காரப் பயல் என்பதையும் சொல்லிவிடுகிறேன். அவன்

யாரிடம் உண்மையாய் நடந்தான்? அரசரிடமே நடக்க வில்லையே; என்னிடம் எங்கே உண்மையாய் நடப்பது? கடைசியில் நானல்லவா ஏமாந்து போனேன். என்னை நல்ல மச்சானா பண்ணி விட்டான்.

அப்புக்: நீயா மச்சான்? நீ மச்சானுயிருந்தால்தான் உனக்கு மதிப்பு - உனது இரத்தத்தின் விலை - மிகவும் ஏறி இருக்குமே!

கண்ணன்: (தனிப்பேச்சு) இந்த நாய்க்குட்டிகள் கூடப் புத்திசாலித்தனமாகப் பேசுதுகள்.

அப்புக்: வாங்கப்பா அரசனிடம் போகலாம். இந்த மூட்டையில் இருப்பதெல்லாம் கண்டாலே அவர் பாதி விளங்கிக் கொள்வார்.

கண்ணன்: (தனிப்பேச்சு) இதென்னடா கிணறு வெட்டப் பூதங் கிளம்புகிற மாதிரி. இளவரசனின் பயணத்துக்கல்லவா ஆபத்து நேரும். அவர்களை அங்கு விடக்கூடாது. கப்பலில் ஏற்றி அக்கரை அனுப்ப வழி செய்ய வேண்டியதுதான்.

அப்புக்: ஆமாப்பா, நாம் போகிறோம்...அரசன் அரண் மனையில் இருந்தால் தானே? அரசர்தான் மாறு வேடத்தில் திரிபவர் ஆச்சே?

கண்ணன்: (தாடியை எடுத்துவிட்டு, தலையணி வைத் துக்கொண்டு) ஏ நாட்டுப்புறங்கள், எங்கே போகி றீர்கள்?

அப்புக்: அரண்மனைக்கு ஐயா.

கண்ணன்: அங்கே என்ன வேலை? அந்த மூட்டை என்ன? அங்கே தூக்கியது அது? உங்கள் விலாசம் முழுதும் சொல்லுங்கள்? சொந்த வீடு உண்டா?

அப்புக்: நாங்கள் மிகவும் எளிய குடிகள். எங்கள் விலாசம் உங்களுக்கு எதற்கு?

கண்ணன் : நீயா எளியவன் ? எவ்வளவு பெரிய உடம்பு-உடம்பெல்லாம் உரோமம். பொய் கூடாது. வியாபாரியா பொய் சொல்ல. நான் ஒரு யுத்த வீரன். இரும்பால் குத்துபவன். ஆனால் பொய் சொல்லும் வியாபாரியை ஒன்றும் செய்யமாட்டோம். நாங்களும் ஏமாறுவோம். நீங்கள் சொல்லக்கூடாது பொய்யை.

கந்தக்: தாங்கள் யுத்த வீரரா? மந்திரி மாதிரி இருக்கே ?

கண்ணன் : எல்லாந்தான். இந்த உடை, நடை, கால் போடுதல், கைவீச்சு. எல்லாம் அரச சமுகத்திலே இருந்து வர வேண்டுமே தவிரப் படித்துக்கொள்ள முடியாதப்பா. நான் நின்ற இடத்தில் மோந்து பார்த்தாலும் அரமனை வாசம் அடிக்குமே ! என் முகமே அரமனையைக்காட்டுமே! நான் இவ்வளவு தூரம் உங்களிடம் பேசுவதால் சந்தேகம வேண்டாம். நான் கொஞ்சம் இரக்க மனம் உள்ளவன். என் தலை முதல் கால்வரை அரசாங்கத் தோற்றமே தெரியுமே, அரசாங்கத்தில் என்னால் எதுவும் செய்யமுடியும். உள்ளத்தைச் சொல்லிவிடு.

கந்தக்: நான் அரசனிடன் சில சமாச்சாரம் சொல்லி விட வேண்டும். அவ்வளவு தான்.

கண்ணன் : நீ எப்படி அரசனிடம் பேச முடியும்? ஒரு 'அட்வகேட்' வைக்க வேண்டும்.

கந்தக்: புரியலையே அது.

கண்ணன் : கவுதாரி என்று அர்த்தம்.

கந்தக்: சாவலும் இல்லை பெட்டையும் இல்லை. இல்லையா ?

கண்ணன் : கடவுள் என்னை இவ்வளவு முட்டாளாய்ப் படைக்கவில்லை. ஆகையால் இவர்களை இனிப் பழிக்கக் கூடாது.

அப்புக் : (தந்தையிடம்) இவர் உத்தியோகப் பேர்வழி இல்லை அப்பா, சாதாரணம் தான்.

கந்தக்: ஆமாம். உடையே உடம்புக்குப் பொருந்தலையே.

அப்புக்: அதனலேயா? இந்த அரமனை ஆட்கள் எல்லாருமே இந்தக் கோமாளி உடைதான் போடுகிறார்கள். இவர் பல்லைக்குத்திக்கொண்டேயிருப்பதால் ஒரு பெரிய மனிதராகத்தான் இருப்பார் அப்பா.

கண்ணன்: அந்த மூட்டையில் என்ன இருக்கு?

கந்தக்: அரசனிடம் பேசும்போது எல்லாம் வெளிப்படும்-இப்பொது சொல்லக்கூடாது.

கண்ணன்: அரசர் இப்போது கப்பலில் போய்த் துக்கக் கடலில் இருக்கிறாராம். அவரை எப்படி அரமனையில் பார்க்கமுடியும்?

கந்தக்: நானும் கேள்விப்பட்டேன். இளவரசர் யாரோ கோனார் வீட்டுப்பெண்ணை ... ... அதனலேதானே?

கண்ணன்: அக்கோனன் என்னபாடு படப்போகிருன் தெரியுமா? மனிதனல் பொறுக்க முடியாது. பேயாய் இருந்தால் பொறுககலாம்.

கந்தக்: அப்படியா நினைக்கிறீங்க. யார் சொன்னது?

கண்ணன்: அவனுக்கு மட்டுமா? அவனைச் சேர்ந்தவருக்கெல்லாம் பல தலை முறைக்குத் துன்பந்தான். கோமகனைக் கோனன் ஆக்கினவன், கல்லால்தான் அடித்துக் கொல்லப்படுவானும். அவள் குற்றத்துக்கு இவை யெல்லாம் எளிய தண்டனைதானும்.

அப்புக்: அந்தக் கிழவனுக்கு ஆண் பிள்ளை உண்டா?

கண்ணன்: ஒருவன் இருக்கிருன், அவனுக்கும் தண்டனை விதித்தாயிற்று. உயிருடன் வைத்துத் தோலை உரித்துத் தேனை உடலில் ஊற்றித் தலைகீழாக நிறுத்தி வைப்பதாம். பின்னர் சூடான மருந்து தந்து நடுப் பகலில் கொதிக்கும் மணலில் கிடத்துவார்களாம். அவன் செய்த தப்புக்கு இரக்கப்படுவதால் என்ன

பயன்? உங்களைப் பார்த்தால் நல்லவர்கள் போல் தோன்றுகிறீர்கள். அரசனிடம் என்ன சொல்ல வேண்டும். நமக்கு வேண்டிய ஆள் ஒருவன் உண்டு. அவன் மூலம் எதுவும் எளிதில் முடித்துக் கொள்ள லாம். ஆக வேண்டியதைக் கூறுங்கள்.

(அப்புவிடம் கந்தக்கோனர் மெதுவாக இவர் பெரிய ஆள்தான்)

அப்புக்: சரியென்று சொல்லு. முதலில் கொஞ்சம் தங்கம் கொடு. அப்புறம் சொல்லலாம். (மெதுவாகக் கரடியை மூக்குக்கயிறு போட்டுத் திருப்பலையா? தங்கம் என்ன செய்யாது. கல்லடிச்சாவு, உயிருடன் உரிப்பது, எல்லாம் நின்று போகும்.)

கந்தக்: எங்களுக்கு இதில் உதவி செய்யுங்கள். இந்தத் தங்கத்தை எடுத்துக்கொள்ளுங்கள். காரியம் முடிஞ்சதும் பாக்கி தருவேன்.

கண்ணன்: (அப்புவைப்பார்த்து) நீ ஏதாவது சொல்ல வேண்டியது, கொடுக்கவேண்டியது உண்டா?

அப்புக்: உயிருடன் உருக்க மாட்டாங்களே?

கண்ணன்: அந்தக்கோனர் பிள்ளை, அவன் தொலைந்தான். அவனது மூன்று தலைமுறையும் அப்படித்தான்.

அப்புக்: உடனே அரசனிடம் எல்லாம் சொல்லிவிட வேண்டும். உன் மகளும் இல்லை. என் தங்கையும் இல்லை. எல்லாம் மெய்ப்பிக்க வேண்டும். ஐயா, அவரு தருகிற அளவுக்கு நானும் தருவேன். நானே அதற்கு ஈடு.

கண்ணன்: நான் உன்னை நம்புகிறேன். நீங்கள் கடற்கரைப் பக்கம் போங்கள். அங்கு ஒரு கப்பல நிற்கிறது. நான் போய் முடித்துக்கொண்டு பின்னலேயே வந்து விடுவேன். இருவரும் கடற்கரைப் பக்கமும்-கண்ணன் வேறு பக்கமும் போதல்.)

அப்புக் : நல்லவேளை. இந்த மனிதன் வந்து சேர்ந்தான். இல்லாவிட்டால் சொல்லவே நடுக்கம். அவர் கூறியபடி முன்னால் போவோம். தங்கத்தைத்தான் கொடுத்திருக்கிறோமே ?

கண்ணன் : (தனிப்பேச்சு) நான் நல்லவனாகத்தான் இருக்க முயலுகிறேன். முட்டாள்கள் என்னிடம் வந்து சிக்கிக்கொள்ள என் தலையில் எழுதியிருக்கு! நான் என் செய்யலாம் ? நான் இப்போது தங்கத்தை மதிப்பதா ? இளவரசனுக்கு உதவுவதா ? எது நல்லது ? இரண்டும் நல்லதுதான். எப்படியிருந்தாலும இரண்டு ஆந்தைகளையும (பகல் குருடு) அரசனிடம் சேர்ப்போம். அரசன் இவர்கட்கும் தனக்கும் ஒரு சம்மந்தம் இல்லை என்று எண்ணி என்னை முட்டாளாக்கினாலும், கெட்டவனென்றாலும், எனக்கென்ன கவலை. இப்பட்டங்கள் சிறுவர்கள் பறக்கவிடக்கூட உதவா. (சிந்தித்தல்) இப்பகலிலேயே நாமும் போய்விடுவதுதான் நல்லது.

அங்கம் 5] [களம் 1

மதுரை அரண்மனைச்சபை ; நரசிம்மன்–இரத்தினாகரர்
தேவதாசன்–முத்தம்மாள்–வேலைக்காரர்கள்

இரத்தினாகரர் : பதினைந்து ஆண்டுகளாக நீங்கள் தண்டித்துக்கொள்வது பெரும் பாவத்துக்கும் பரிகாரமாகும் அரசே. பாவங்கள் முன்னரே கழிந்துவிட்டன. ஐம்பூதங்கள் தத்தம் வேலையைச் செய்வதால் உலகைக் காக்கின்றன. தங்களுக்கும் கழிந்தவற்றை மறந்து நற்செயலில் ஈடுபடவேண்டும்.

நரசிம்மன் : கற்புடையாளைப் பட்டி என்ற எனக்கு அமைதியும் வருமா ? என் வாழ்வு கெட்டது. நான் துணையிழந்தேன். என் துணைவி மரபற்றாள்.

முத்தம் : உண்மை. உலகப் பெண்களின் நற்குணங்களை எல்லாம் திரட்டி, வல்லான் ஒருவன் பெண்ணைச் செய்து பார்த்தாலும் நமது மாண்டுபோன அரசிக்கு ஒப்பாகமாட்டாள்.

நரசிம் : மாண்டுபோன என்று கூறவேண்டாம். என்னால் கொலையுண்ட என்றே சொல். நானே அவளுக்கு எமன். நான் சொல்வதை நீ என்னிடம் திருப்பிச் சொல்லாதே. அது எனக்கு மிகவும் வருத்தம் தரும். உண்மையாயினும் பிறர் சொல்லும்போது கேட்க முடியவில்லை.

இரத்தினு : முத்தம்மாள் முதலில் சொல்லிலள். இனியும் சொல்லாள். பயன் தரும் வார்த்தையே கூறுவள். பெண்பால் பயனுள்ளதையே கூறும்.

முத்தம் : தெரியும். அரசே, தங்களை மற்றொரு மணம் கொள்ளத் தூண்டும் ஆடவர்களில் ஒருவரல்லவா இவர் ?

தேவதாசன் : அம்மா, அரசியல் போக்குத் தெரிந்தவர்கள் இவ்வாறு கூறார். அரசன் சாதாரண மனிதன் அல்லன். அரசியின் ஏக்கத்தால் ஆட்சி கெட்டுக் குடி மக்கள் துன்புறும் நிலையில் விடக்கூடாது. அரச மரபு அழிந்தால் நாடு அல்லலுறும் ; பகைவர் வருவர் ; பல குழப்பம் நிகழும். அன்றி, அவள் இறக்கும்போதும் தன் கணவனுக்கு ஒரு மகன் பிறந்து நாடு ஆளவேண்டும் என்ற எண்ணமே அவளுக்கு இருந்திருக்கும். இதற்குமேல் அவளுக்குத்தான் என்ன ஆசை இருந்திருக்க முடியும் ?

முத்தம் : அரசனுக்கு மறு மண முடிவில், ஆண்கள்-அரசியல் தெரிந்தவர்கள்-உறுதியாய் நிற்பதை யார் தடுக்க முடியும் ? அவளுடைய தகுதிகொண்ட ஒருத்தி அரசியாகக் கிடைக்கவேண்டுமே என்பதைப்பற்றித் தான் நான்-பெண்-கூறுகிறேன். நமக்கு மேற்பட்ட ஓர் சக்தியை நான் நம்புபவன். அது ஏதாவது இதற்கு ஒரு ஏற்பாடு செய்திருக்கும் - செய்யும்-என்றே நம்புகிறேன். அதனை அறியும் சக்தி மக்களுக்கு இருப்ப

தில்லையே! அறியவேண்டும் என்ற எண்ணமாவது இருப்பதுதான் விழிப்பாய் இருப்பதற்கு உதவி செய்யும். பழனியின்று வந்த வாக்கு என்ன சொல் லிற்று ? காணுமல் போனது மீண்டும் வராவிட்டால் அரசனுக்கு வாரிசு இல்லையென்றுதானே கூறியது. மறைந்தது மீள்வதும், இறந்ததாகக் கருதப்படுவது உயிர்பெற்றது வருவதும், முடியாத காரியம் என்று தோன்றலாம். குழந்தையை எடுத்துச் சென்ற என் கணவரும் இறந்துவிட்டதாக மக்கள் முடிவு செய்ய லாம். பழனி வாக்கை புறக்கணிக்கலாம். மதுரை அரசுக்கு மரபுதேய மனங்குழம்பிக்கொண்டு இருக்க லாம். (அரசனைப் பார்த்து) அரசே, தாஙகள் மதுரையை ஆளவேண்டும் என்ற எண்ணத்துடன் தோன்றவில்லை. குழந்தையாகத்தான் பிறந்தீர்கள். மதுரை ஒரு மன்னனைத் தேடிக்கொள்ளும். மகா அலெக்சாண்டர் பிள்ளையில்லாமல் இறந்தார் தனது பெரிய அரசாங்கத்துக்கு வாரிசாக ஒரு வல்லவனை அதுவே தேடிக்கொள்ளும். தாங்கள் இவையெல்லாம் அறிந்தவைதானே !

நரசிம் : எனது தவறுதலை ஒப்புக்கொண்டு உனது அறிவுடைமையை உணர்ந்தேன் என்பதற்கறிகுறி யாகஉன்னை நல்லம்மாள் என்றே நான் அழைப்பேன். மனோன்மணியின் நினைவை உனது தூய உள்ளத்தில் இவ்வளவு செழிப்பாய் வளர்த்திருப்பாய் என்று என் ஞல் எண்ணக்கூட இதுகாறும் முடியவில்லை முன் னரே உன் சொல்லுக்குச் செவி சாய்த்திருந்தால் எனக்கு இவ்வளவு துன்பமேன்? மனையுடன் எவ் வளவோ நலன்களைத் துய்த்துக்கொண்டிருப்பேன்.

முத்தம் ; அது மட்டுமா ? தங்களை அப்பா என்று அழைக்கும் ஐந்தாறு குழந்தைகளை எவ்வளவு அன் புடன் வளர்த்து மகிழ்வார் அரசியார்? அச்செல்வத்தை எண்ணிப் பாருங்கள்.

நரசிம் : உண்மை. அவளைப்போல் பெண் கிடைப்ப தரிது. எனக்கு வேறு மனைவி எதற்கு? வேறு மனைவியுடன் சிறப்பாக எப்படித் தான் வாழ முடியும்? வாழ்ந்தால் அதனை எவ்வாறு விண்ணுலகில் அவ ளால் பொறுக்க முடியும்? நடந்த நாடகம் போதும். இனியும் ஒரு மணமா ?

முத்தம் : அரசே, தங்களது அன்பு இப்போதுதான் வெளியாயிற்று.

நரசிம் : அரசியல் கட்டாயத்தால் மணம் நிகழ்வதாயி ருந்தால் அவளது எண்ணமே என்னை அவளுடன் சேர்த்து விடும். நாடு அரசனையும் இழக்கும்.

முத்தம் : நான் அரசியாயிருந்திருந்தால் தங்கள் முன் னர் எப்படி எப்படியோ வருவேன். பேயாகக்கூட வருவேன். வேறு ஒன்றையும் தாங்கள் பார்க்குமாறு விடமாட்டேன்.

நரசிம் : நல்லம்மா, அவள் கயல் கண்கள் விண்மீன் களே. முகத்திலுள்ள புண் கண்களல்ல. இனி மறு மணம் இல்லை என்பது உறுதி.

முத்தம் : தங்கள் அமைச்சர்கள் சாட்சியாய் எனது வேண்டுகோளன்றி மணம் செய்து கொள்வதில்லை என்று உறுதி செய்து தருவீர்களா ?

நரசிம் : அப்படியே. "இங்குள்ள அமைச்சர்கள் சாட்சி யாக முத்தம்மாள் விருப்பமின்றி நான் மணம் செய்து கொள்ளேன் இது உறுதி." நல்லம்மாள், இப்போது தான் எனக்கு அமைதி.

முத்தம் : பிரபுக்களே! அமைச்சர்களே! இனி அரசனது மறு மணத்தில் எனக்கே அதிகாரம்.

இரத்திஞகரர் : மண அதிகாரம் ஒரு பெண்ணுக்கு மாற்றப்பட முடியாது.

முத்தம் : எல்லாத் தகுதிகளிலும் மனோன்மணிதான் என்று கூறத்தக்க பெண்ணின் மறுமணம் பற்றிய அதிகாரம் மாற்றப்படுவதில் என்ன தவறு ?

இரத்தினு : என்னைப் பொறுத்தவரையில் மாற்றப்படுவதற்குச் சட்டமே இல்லையென்பதுதான்

முத்தம் : அரசன் உறுதி செய்து தருதற்கு முன்னரே தடுக்கப்படல் வேண்டும். அன்றியும், அரசன் விரும்பினுல் உங்கள் அனுமதியுடன் நான் முடித்து வைப்பேன். அப்பெண்ணும் மனோன்மணியின் உயிரும் உடலுமாக இருக்கவேண்டும். இந்த முறையில் தான் நான் அதிகாரம் பெற்றிருப்பதாகக் கருதுகிறேன்.

நரசிம் ; நல்லம்மாள் ! மணத்தில், எல்லாம் உனது பொறுப்புத்தான்.

முத்தம் : தங்களது நம்பிக்கையை உணர்ந்தேன். அரசே, இறந்துபோன அரசியே வந்ததுபோல் வந்தாலன்றி நான் வேறு மணத்திற்கு எளிதில் இணங்குவேனே ?

(ஒரு பிரபு வருதல்)

பிரபு : அரசே ! சிம்மளன், கயபாகுவின் மகனும். பூக்காந்தன் என்பது பெயராம். ஒரு அரசியுடன் வந்திருக்கிருர். அப்பெண் இளமையும் அழகும் பின்னிக்கொண்டு, கண்டார் கண்ணைப் பறிக்கும் தோற்றமுடையவர். தங்களைக் காணவேண்டுமாம். தங்கள் உத்தரவு என்னவோ ?

அரசன் : இருக்கலாம். கற்பனை ஊற்றுக்கொள்ளலாம். இருந்தாலும் ஓர் அரசன் மகன் துடுமென இவ்வாறு வருதல் ஐயத்துக்குரியதே. இருக்கட்டும். உடன் வந்திருப்பவர்கள் எப்பேர்ப்பட்டவர்? எத்துணை பேர்?

பிரபு : ஐந்தாறு பேர்தான். அன்ருரும் மிகச் சாதாரணமானவர்களே தான்.

நரசிம் : ஆனுல், அப்பெண் மட்டும் அரசகுமாரியாக்கும்.

பிரபு : ஆம். ஐயமில்லை. முடிந்தால், பகலவனை அழைத்துக் கேட்டால் கூட அவன் "நான் பெண்ணுலகப் பெருந் தொகையுள் இப்பேர்ப்பட்ட அழகியை இதுகாறும் கண்டதில்லை" என்றுதான் கூறுவான்.

முத்தம் : பகலவனும் ஓர் ஆணேதான்! உண்மைக்கும் ஆணுலகப் புகழ்ச்சிக்கும் உள்ள தூரம் மண்ணுக்கும் விண்ணுக்குமுள்ள அளவுகூடச் சிறிதாக இருக்குமாறு விரியலாம். ஏ மனேன்மணி, ஒவ்வொரு பெண்ணும் தத்தமக்குப் பிறகு தத்தம் கணவரை மற்றொரு பெண்ணுக்கு இரையாக்கி வந்திருக்கிருர்கள். அந்நிலைமைதான் உனக்குமா? அரசே தாங்கள் மனேன்மணியின் அழகைப் பற்றிப் பெண்ணுலகில் ஒப்புயர்வற்றவள் அவளேயென்று என்னிடம் கூறியிருக்கின்றீர்கள். எழுதிக் கையெழுத்திட்டும் தந்திருக்கின்றீர்கள்; அதனைத் தங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். பிரபுக்களே, உங்களுக்கும் இவைகள் தெரியாதனவல்லவே!

பிரபு : உண்மைதான். ஆனுல் நான் நமது அரசியைக் கண்டு நீண்டகாலம் ஆயிற்றல்லவா? இப்பெண்ணைக் கண்டால் பழைய மதவாதிகள் தத்தம் கடவுளரை விட்டுப் பக்தியில ஒரு முகமாக இப்புதுத் தேவியைக் கொண்டாடுவதில் ஒன்றுபடுவார்கள்.

முத்தம் : தங்களைப் போல் ஆண் மதவாதிகளும் ஆடவர்கள்தாம். புல்லைத் தின்று ஒரு முகமாய்ச் செல்லும் செம்மறிகள் அல்ல என்பதை நான் அறிகிறேன். ஆனுல் ஒரு பெண்ணைப் பற்றி எனக்கு ஐயம் ஏற்படுகிறது.

பிரபு: அம்மா, பெண்கள் மாறுதல் இயல்பு, எளிது கூட. அவ்வுருவத்தைக் காணுமுன்னரே பேசுவதையெல்லாம் பேசி முடித்துவிடுங்கள். பெண்மை மிக்க அவ்விளவரசி முன் நீங்கள் எல்லாம் ஆண்களேதான்.

எங்கள் அரசி இருந்து கண்டால் எப்படி பிருப்பார் களோ ? ஆண்களாகிய நாங்கள் இதுகாறும் இது போன்ற உருவினைக் கண்டதேயில்லை.

நரசிம் : இரத்னுகரரே! விரைவில் அழைத்து வாருங்கள். தகுந்த அமைச்சரிருவரைக் கூட அழைத்துச் செல்லுங் கள். இவ்வாறு வந்திருப்பதில் ஏதோ சூது இருக்கத் தான் வேண்டும்.

(அவர்கள் செல்லல்)

முத்தம் : வீரகேசரி இருந்தால் இப்போது வந்துள்ள இளவரசனை ஒத்திருப்பான். இருவரும் ஏறத்தாழ ஒரே வயதினர்தான்.

நரசிம் : அணைந்த தீ எரியத் தொடங்கிவிட்டது. சிம்மள இளவரசன் என் முன் வந்தால் நான் துக்கத்தை எவ்வாறு பொறுப்பேன் ? என் புத்தி குழப்பம் அடையாமல் இருக்குமா ?

(இரத்தினுகரர், பிரபுக்கள், பூக்காந்தன்

மாசிலாமணி வருதல்)

நரசிம் : இளவரசரே, உன் அன்னையார் மிகவும் கற்பு உடையவள். உமது உருவம் உம் தந்தையாரின் இளமையை அப்படியே காட்டுகின்றது. எனக்கு இப்போது வயது இருபத்தொன்ருக இருந்தால் கயபாகுவே வந்திருப்பதாகத்தான் பேசவேண்டும். வயதுதான் இப்போது இளமைப் பேச்சினை நும்மிடம் பேசவேண்டாமென்று தடுக்கிறது. "உம் வரவு நல்வர வாகுக" இளவரசியே! நும்மைப் போன்றும், அவரைப் போன்றும் இரண்டுமணிகளை இழந்திருக்கின்றேன் நான். அத்துடன் எனது மனையாளையும், அவளது நடத்தையையும் ஐயங்கொண்டு கயபாகுவின் நட்பினை யும் இழந்திருக்கின்றேன். புண்பட்ட உள்ளம் உன் தந்தையாரின் காட்சியால்தான் ஆறுதல் பெறமுடியும். புண் ஆற வழியுண்டா ?

பூக்காந் : என் தந்தையார் கட்டளையால்தான் நான் இங்கு வந்துள்ளேன். அரசன் என்ற முறையினை விடத் தங்களால் தம்பியென்று அழைக்கப்பட்ட முறை யாலும், அதைவிடத் தங்களிடம் கொண்ட நட்புமுறை யாலும் அவருக்குள்ள அன்பும் மதிப்பும் உலகில்வேறு எங்கும் யாரிடத்திலும் இல்லை என்பதனைப் பலமுறை அவர்கள் என்னிடம் கூறியிருக்கிறார்கள். தங்களைக் காண அவருக்குப் பேராவல் !

நரசிம் : என் அருமைத் தம்பி, உன்னை ஐயுற்றுத் தவறாக எண்ணினேன் ; துன்புற்றேன். இப்போது உணர்ந்தேன். கழுவாய் விரைவில் தேடுவேன். வாடியபயிருக்குக்காலமழையென உங்களை என்னிடம் அனுப்பிய எனது நண்பன் வாழ்க ! இளவரசே, ஒப்பற்ற இம் மாசிலாமணியுடன் வருணனையும், வாயு வையும் தப்பி எவ்வாறு வந்தீர்கள் ? கடல் வழியாக அவர் எவ்வாறு அனுப்பத் துணிந்தார் ?

பூக்காந் : அரசே, பெயரும் அதுதான். இவளைப்பற்றி அவருக்கு ஒன்றும் தெரியாது. பாரசீகத்திலிருந்து வருகிறாள்.

நரசிம் : முகமதியர்கள் நிறைந்த நாடல்லவா அது ?

பூக்காந் : அங்கிருந்துதான், எனது தந்தையாரின் கட்டளைப்படி நான் கப்பலில் வந்துகொண்டிருந்தேன. இவள் தந்தையாருடன் கப்பலில் வந்துகொண்டிருந் தாள். தென்மேற்குக் கடலில் இரண்டு கப்பல்களும் ஒன்றுசேர்ந்தன. இவள் தந்தையார் கடலிலேயே இறந்துவிட்டார். நாங்கள் இருவரும் இக்கரையேறி னோம். கரையடைந்தமையையும், எனக்குக் கிடைத்த இந்தக் கன்னியையும்பற்றி என் தந்தையாரிடம் கூறும்பொருட்டு எனது ஆட்களை நான் சிம்மளம் அனுப்பியிருக்கிறேன்.

நரசிம் : சிம்மளம் வாழ்க ! அரசன் வாழ்க ! அரிய நண்பனை நஞ்சிட்டுக்கொல்ல நினைத்த நான் என்

மக்களுக்கு இயமனுக இருந்தேன். கயவாகுவின் நற்குண நற்செயல்களுக்கு—இளவரசே, தாங்கள் ஒரு எடுத்துக்காட்டு உங்கள் இருவரைப்போல் ஒரு பெண்ணும் பிள்ளையும் இருந்தால் எனக்கு எவ்வளவு அமைதி ஏற்படும்?

(பிரபு வருதல்)

பிரபு: சிம்மள மன்னர் வந்திருக்கிறார். தனது வருகையை அறிவிக்கும்படி என்னிடம் கூறினார். அன்றியும் இளவரசர் தனது குலம், கடமை, நிலைமை யாவற்றையும் மறந்து ஒரு இடைப் பெண்ணை மணந்து, அவளுடன் இங்கு வந்துள்ளதாக அறிந்து அவரைக் கைதியாக்கும்படியாகவும் வேண்டியிருக்கிறார். நம்பமாட்டீர்களா?

நரசிம்: இங்கே இருந்தாரே. எங்கே அவர்? கிட்டே அழைத்து வாருங்கள். எல்லாம் விந்தையாகவே இருக்கின்றன.

பிரபு: ஆம், விந்தைதான். சிம்மளர் தன் மகனையும் இப்பெண்ணையும் துரத்திப் பிடிக்கக் கப்பலில் வந்து கரையேறியபோது இப்பெண்ணின் தந்தையையும். தம்பியையும் கடற்கரையில் கண்டார்களாம், அவர்களும் இவர்கள் வந்த கப்பலிலேயே வந்து விட்டதாகக் கூறினார்களாம்.

பூக்காந்: ஆ! கமலாபதியின் சூழ்ச்சியே இது. இப்படி வஞ்சிக்கவே முன்பெல்லாம் ஒத்திருந்தார் போலும்!

பிரபு: இளவரசரே, அதனை இப்போது சொல்வதில் என்ன பயன்? அவரும் உம் தந்தையுடன் வருகிறார். அப்போது மறவாமல் கூறினால் எல்லாம் விளங்குமல்லவா?

நரசிம்: யார்? கமலாபதியா?

பிரபு: ஆம். அவரே; அவருடன் நான் நேரில் பேசினேன். அவர் சில ஆட்களைப் பரிசோதித்துக்கொண்டிருக்கிறார், பாவம். அப்போது சில தொடைநடுங்கிகள்

கைகட்டி, வாய் புதைத்து, மண்ணில் விழுந்து வணங்கினார்கள். சிம்மளர் அவர்களைச் சித்திரவதை செய்யப் போவதாகக் கூறினர்.

மாசிலா: ஐயையோ! அப்பா, தாங்கள் என்னபாடு படுகிறீர்களோ? எங்கள் மணத்திற்குத் தொடக்கத்தி லிருந்தே தடைகள் உண்டாக்கல் இறைவனின் விருப்பமானால் யார் தான் என்ன செய்யமுடியும்?

நரசிம்: ஆனல், உங்களுக்கு இன்னும் மணம் ஆக வில்லையா?

பூக்காந்: இல்லை அரசே. இனி எப்படியாகுமோ? விண் ணின் உச்சிக்கு வரும் விண்மீன்கள் மலையின் கொடு முடியைவிட்டு மடுவில் உள்ள தாமரை மலர்களை முத்தமிடுகின்றன. உயர்குலமும் தாழ்குலமும் உள் ளது உண்மையானல் ஒன்றுபடுவதும் அதைவிட உண்மைதானே?

நரசிம்: இவள் ஒரு அரச குமாரிதானு? யார்?

பூக்காந்: என் மனைவியானவுடன் அப்படித்தான். மூலத்தைக் கண்டவர் யார்? நம்புவதுதான் எப்படி?

நரசிம்: அந்த 'ஆனவுடன்' உடனே ஆவதாகத் தோன்றவில்லை. உனது தந்தையாரின் சினம் என்ன செய்யத் தூண்டுமோ? குலத்துக் கொவ்வாத நும் செயல் எனக்கு மிகவும் வருத்தம் தருகிறது. ஆனல் இப்பெண்ணின் அழகுக்கேற்பக் குலம் சிறக்க வில்லையே என்பது தான் எனக்கு மிகவும் வருத்தம் தருகிறது.

பூக்காந்: பெண்ணே, நிமிர்ந்து நில். தீவினையே எனது தந்தையார் உருவுடன் வந்து தடுத்தாலும் நம் காதல் தடைப்படாது. நல்ல காதலுக்கு நல்லோர் துணை செய்வர். அரசே, தாங்கள் எம்பொருட்டுச் சிறிது கவனம் கொண்டால் நலமாய் முடியும். தாஙகள் துள

கூறினாலும் என் தந்தையார் சிறிதும் மறுக்கார். மகிழ்வுடன் நிறைவேற்றுவார். இது உண்மை.

நரசிம்: (பச்சைச் சிரிப்புடன்) உண்மைதானா? அப்படியானால் எனக்கே இப்பெண்ணைத் தரும்படி நான் கேட்பேன்?

மூத்தம்: அரசே, நும்கண்கள் புத்திளமை கொண்டனவா? நும் மணத்தின்போது கண்ட மனோன்மணியை உனதுள்ளம் கண்களுக்குக்காட்டியதா? என்ன பிதற்றல்?

நரசிம்: நல்லம்மா, என்ன கடுமை இது? முதிய கண்கள்தான். எனது இளைய உள்ளத்துடன் ஒட்டிக் கொண்டு பழமையைப்பார்த்தது. இவ்வுருவத்தின் மூலம் அவ்வுருவத்தையே காண்கின்றேன். இளவரசே, உமது விண்ணப்பத்தை நிறைவேற்ற முயல்வேன். இதோ உம் தந்தையாரைப் பார்ககச் செல்லுகின்றேன். நீர் விரும்பினால் வரலாம்; பிரபுக்களே வாருங்கள்.

அங்கம் 5] [களம் 2

(மதுரை அரண்மனை வாசலில் கண்ணனும் பிரபுக்களும்)

கண்ணன்: அவர்கள் உரையாடலின்போது தாங்கள் அணிமையில் இருந்தீர்களா?

பிரபு: கோனார் மூட்டையை அவிழ்த்து வைத்தபோது நான்தான் இருந்தேன். அம் மூட்டை தன்னிடம் வந்த விதம் பற்றியும் கூறினார். உடனே என்னையும் வேறு சிலரையும் அறையைவிட்டு வெளியே போகும்படி கூறிவிட்டார்கள். நான் வெளியே வந்தபோது கோனார்தான் மூட்டையுடன் ஒரு பிள்ளையையும் கண்டதாகக் கூறினார். அதன் பிறகு உள்ளே நிகழ்ந்தவை எனக்கு ஒன்றும் தெரியாது.

கண்ணன்: அதன் முடிவல்லவா தெரியவேண்டும். அதன் பிறகு என்ன நிகழ்ந்தது? வேறு யாருக்காவது தெரியுமா?

மற்ருெரு பிரபு: முன் பின் தொடர்புகள் எல்லாம் எனக்குத் தெரியவில்லை. ஆனால் அரசர், கமலாபதி இவருடைய முகக்குறிகள் எவ்வளவோ மாறுதல்களைக் காட்டின. ஒரு உலகம் படைக்கப்பட்டது போலவோ அல்லது அழிக்கப்பட்டதுபோலவோ அவர்கள் முகக்குறி காட்டியது. அவ்வளவுதான் என்னால் கூறமுடியும்.

மூன்ருவது பிரபு: அரசரின் பெண் அகப்பட்டுவிட்டதாக நான் கேள்விப்பட்டேன். அதோ முத்தம்மாளின் கணக்கர் வருகிருர். அவர் விளங்கச்சொல்வார். என்ன ஐயா, அரசருக்கு வாரிசு கிடைத்துப் போயிற்ருமே?

கணக்கர்: உண்மையே. காதால் கேட்டது, கண்ணால் கண்டதுபோலவே ரூதளிக்கப்பட்டுவிட்டது. மனேன் மணியின் மேலாக்கு, குழந்தையின் கழுத்தில் கிடந்தது. ஆனந்தன் கையெழுத்திட்ட கடிதம், குழந்தை கிடந்த இடத்தில் கிடந்தது. பெண்ணின் உருவமோ மனேன்மணியின் படிவமாகவே தோன்றுகிறது அவள் மனேநிலையோ அரச வமிசத்துக்குரியதாகவே விளங்குகின்றது. அஃதிருக்கட்டும்; இரண்டு அரசர்களும் ஒருவரை ஒருவர் நேர்ப்பட்டதைக் கண்டீர்களா? நந்திக் கிராமத்து இராமபரதரின் சந்திப்பை நினைவூட்டியிருக்குமே? நமது அரசனுக்கு மகளைப்பெற்ற மகிழ்ச்சியுடன் மனைவியை இழந்த துன்பமும், பகலும் இரவும் கலந்ததுபோல் காணப்பட்டது. சிம்மளரைப் பல முறை மன்னிப்புக் கேட்டார். ஆனல் பற்பல முறை இளவரசரை அணைத்துக்கொண்டார். வாயில் ஈ போனதுகூடத் தெரியாமல் கந்தக்கோனுர் பார்த்திருந்தார். அவருக்கு நல்ல மரியாதைகள் நடந்தன.

முதல் பிரபு: ஆனந்தன் செய்தி ஒன்றும் தாங்கள் கூறவில்லையே? அவர்தானே குழந்தையை அக்கரை கொண்டு சென்றவர்?

கணக்கர் : அதனை யாரும் கேட்கவே இல்லை. தாங்கள் தான் கேட்டீர்கள். அவரை ஒரு கரடி கொன்று தின்று விட்டதாகவே அவருக்கு ஈமக்கடன் கழித்த சின்னக்கோனார் கூறுகிறார். அவர் போட்டிருந்த இரண்டு மோதிரங்களும், முத்தம்மாள் தைத்துக் கொடுத்த ஒரு கைக்குட்டையும், சின்னக்கோனார் கையில் இருக்கின்றன.

முதல் பிரபு: ஆனந்தன் சென்ற கப்பல்?

கணக்கர் : கரடி ஆனந்தனை விழுங்கிய அதே சமயத்தில் கப்பலைக் கடல் விழுங்கியதாம். குழந்தைதான் தப்பியது. இதில் முத்தம்மாள் நிலை விபரீதமாய் விட்டது. கணவன் இறந்தமையால் துக்கம் ஒருபுறம். பதினைந்து ஆண்டுகட்கு முன், தான் கையில் எடுத்த குழந்தை காப்பாற்றப்பட்டு வந்தமைக்கு மகிழ்ச்சி ஒருபுறம்.

முதல் பிரபு : இந்நிகழ்ச்சிகளைக் காணவும் கேட்கவும் தவம் செய்திருக்கவேண்டும்!

மூன்றுவது பிரபு : எல்லாம் சரிதான். ஆனல், மனேன் மணியைச் சபை முன்னர் வெளிப்படையாக விசாரித்துத் தண்டனைகொடுத்த நிகழ்ச்சி,உள்ளத்தை நடுங்கச் செய்கிறது. இது சரித்திரத்தில் எழுதப் பட்டால் சரித்திரமே கண்ணீர் விடும்.

முதல் பிரபு: அவர்கள் அனைவரும் நியாய மன்றத்திற்கு வந்து விட்டனரா?

மூன்றுவது பிரபு : இல்லை. முத்தம்மாளிடத்தில் அரசியின் சிலை (உருவம்) ஒன்று உளதாம். இத்தாலியச் சிற்பியால் செய்யப்பட்டதாம். அது வினக்களுக்கு விடைகூடத் தருகிறதாம். உயிர் அதற்கு இருப்பதாகப் பலர் ஐயுறுகின்றனராம். அதை பார்கக வேண்டுமென்று மாசிலாமணி சென்றுளாம். தொடர்ந்து பலரும் சென்றிருக்கின்றார்களாம். முத்தம்மாள் வீட்டில் இடம்கூடக் காணது. இரவில் விருந்தும் அங்கு இருக்கலாம் என்று கேள்வி.

இரண்டாவது பிரபு: இதில் ஏதோ இரகசிய மிருக்க வேண்டும். முத்தம்மாள் தன் வீட்டினின்று அதிக நாழி பிரிந்திருக்கவே மாட்டாள். அடிக்கடி வீட்டிற்குச் செல்வாள். அந்த மறைவு வெளிப்படும் காலம் இது போலும். நாமும் அங்கு செல்வோம்.

முதல் பிரபு: போவோம். ஆனால் உள்ளே போக அனுமதி கிடைக்க வேண்டுமே? அப்படியும் அண்மை யில் இருந்தால் நிகழ்ச்சியால் நற்பொழுது போக்க லாம்.

கண்ணன் வருதல் (தனிப் பேச்சு)

கண்ணன்: நான் கிழவனாய் விட்டேன். அனுபவத் துக்குக் கிழத்தனம் இல்லை. சாமார்த்தியம் அதிகமாகி வழிகிறது. பிழைக்கவா முடியாது? என் வயிற்றுக்கு ஒருத்தன் தயவு எதற்கு? அக் கோனாரையும், அவர் மகளையும் நான்தான் இளவரசர் கப்பலில் ஏற்றி அழைத்து வந்தவன். கோனார் மூட்டை அதற்கு முன்னரே எனக்குத் தெரிந்த செய்திதான். இளவரசரிடம்கூட நான் குறிப்பாக அப்பொழுதே கூறினேன். அவர் வாயாலெடுத்துக் கொண்டிருந்த பெண்ணைக் கவனிப்பதில் ஈடுபட்டிருந்து விட்டார். கொந்தளிப்பும், ஊதல் காத்தும் மிகுதியாகவும் இருந்தன. அதனால் நான் பிறகும் சொல்லவில்லை. இப்போது மதுரை யரசனிடம் நான் முன்னரே அறிந்திருந்த தன்மையைச் சொன்னாலும் அதனால் எனக்கு என்ன பெருமை வநதுவிடப்போகிறது? எனது வேடங்கள், திருவிளையாடல்கள் யாவும் ஒன்றோடொன்று பொருத்தி வைத்துப் பார்க்கக் கூடியனவல்லவா? அவற்றோடு இதை ஒப்பு நோக்கின் எவ்வளவு அற்பமாயிருக்கும்? நாடகமே உலகம்! எல்லாச் சுவைகளுக்கும் நாடகம் இடம் தந்து நிற்கும்.

(கந்தக் கோனர் – அப்புக் கோனர் வருதல்)

அப்புக் : இந்த மடையர்கள் எனது உதவி பெற்று அரசனை அடுத்தவர்களாக ஆகிவிட்டனர்.

கந்தக் : அப்பு, நான் கிழவனாய்விட்டேன். எனக்கு இனிப் பிள்ளை யேது ? உனக்குப் பிள்ளையும் உண்டு ; கிழவனாயும் ஆகலாம்.

அப்புக் : (கண்ணனைப் பார்த்து) நான் யார் தெரியுமா? நான் பிரபு. பிரபுவாகி எத்தனை மணி ஆச்சு? நான்கு மணியா ? அதிகமா ? சொல்லு.

கந்தக் : எனக்கும் அப்படித்தான்.

அப்புக் : இல்லை. நான் முன்னாடியே பிரபு ஆனவன். அரசன் மகன் என்னைத்தானே முன்னாலே கையைப் பிடித்துக் குலுக்கினார். அப்பா, உன்னை இரண்டு அரசர்களும் அண்ணா என்று கூப்பிட்டதும் இளவரசனும் அரசியும் அப்பா, மாமா என்று கூப்பிட்டதும் எனது மனதை உருக்கிக் கண்கள் வழியாய் மகிழ்ச்சி பொத்துக்கொண்டு அழுகையாய் வந்துவிட்டது. நான் பிரபுவாகி முதல் தடவை அழுதது அப்போதுதான்.

கந்தக் : நீண்ட ஆயுசா இருந்து பல தடவை அழு அப்பா !

கண்ணன் : தங்களுக்கு நான் செய்தவற்றையெல்லாம் மறந்துவிட்டு அரசனிடம் என்னைப் பற்றி நல்ல வார்த்தை சொல்ல மறக்க வேண்டாம்.

கந்தக் : அப்பு, நாம் பெரிய பிரபுக்களான பிறகு கெடுதலை மறந்து யாவருக்கும் நல்லது செய்ய வேண்டாமா ?

அப்புக் : ஆமாப்பா, இனிமேல் நம்மைச் சேர்ந்தவரையும் நல்லவராக ஆக்கிவிட வேண்டாமா ?

கண்ணன் : சத்தியமாகச் சொல்வேன் நான் நல்லவனாகி விட்டேன்.

கந்தக்: சத்தியம் வேண்டாம். சும்மா சொன்னல் போதும்.

அப்புக்: பிரபுவான பிறகு நாம் பேசும்போதும், நம்மிடம் யாராவது பேசினுலும் "சத்தியம்" செய்துதான் பேசவேண்டும்.

கண்ணன்: முடிந்தவரை நான் அப்படியே நடப்பேன்.

அப்புக்: எல்லாம் மனம் வைத்தால் நடக்கும். குடிக்கிறவன்கூடத் துன்பத்துக்குப் பயப்படாமல் மன வலுவோடு குடிக்கவில்லையா? நாமும் எக்காரியத்தையும் மன வலுவோடுதான் செய்யவேண்டும். உன்னைப் பற்றி அரசனிடம் சொல்லுவேன். முத்தம்மாள் வீட்டுக்குப் பொம்மை பார்க்கப் போகணும். நாங்கள் உறவினர்கள் அல்லவா? நீயும் வா போகலாம்.

அங்கம் 5] [களம் 3

முத்தம்மாள் வீட்டில் ஒரு கோயில். அதில் மனேன்மணி சிலைபோல் நிற்றல். அதன் முன் ஒரு திரை. திரையின் வெளியில் நரசிம்மன்—கயபாகு—பூக்காந்தன்—மாசிலாமணி—கமலாபதி—முத்தம்மாள்—பிரபுக்கள்—கோனர்கள்—கண்ணன் நிற்றல்.

நரசிம்: நல்லம்மாள், (அமைதி) உன்னுல்தான் எனக்கு ஆறுதல்.

முத்தம்: நானல்ல. எனது நேர்மை. தாங்களும் மற்றவர்களும் எனது குடிலுக்கு வந்தமையால் எனக்குத்தான் ஆறுதலும் மகிழ்வும் எல்லாமும்.

நரசிம்: நல்லம்மா, எல்லாமும் என்றதால் அமைதியும் இன்பமும் இருப்பதோடு கூட எம்மைச் சிறப்பாக வரவேற்கும் தொல்லையும் ஏற்பட்டுவிட்டது. அரசியின் உருவத்தைக் காணவந்த நாங்கள் உம் கலைக்கூடச் சிறப்பினையும் கண்டு மகிழ்கின்ருேம். உருவம் எங்குளது?

முத்தம்: வாழ்நாளில் தனக்கு ஒப்புமையின்றி மனோன் மணி எப்படி இருந்தார்களோ, அதுபோல உருவமும் கலை மண்டபதத்துள் உயர்ந்ததாகவே இருக்கும். யாருடைய கையும் இதுகாறும் அதுபோல் சிறந்த உருவினைச் செய்ததே இல்லை. தனியே வைத்திருக் கிறேன். இதோ காட்டுகிறேன். வேலைத் திறத்தைப் பாருங்கள். (திரையை நக்குதல் — மனோன்மணி உருவம்) உருவம் சரியாக அமைந்திருக்கிறதா? ஒரு வரும் வாய் திறக்கவில்லையே ஏன்?

நரசிம்: (சிலையைப் பார்த்து) எனது அன்புமிக்க கல்லே, உன்னிடம் அவளது இயல்பான நிலை உளது. நீ சிலையா? மனோன்மணிதானா? குழந்தை உள்ள மும் சான்றோர் அருளும் காணுகின்றேனே. கல்லென்ற தற்கு நீ கடியாமல் இருப்பதே மனோன்மணி என்பதை நினைவூட்டுகிறது. ஆனால் நல்லம்மாள், மனோன்மணி இவ்வாறு முதுமையடைந்திருந்தார்களா?

கயபாகு: இல்லை. அப்போது இவ்வளவு இல்லை.

முத்தம்: அதுதான் சிற்பியின் வேலைத்திறம். இப் போது—பதினாறு ஆண்டுகட்குப் பின்னர்—இராணி இருந்தால் எப்படி உருவம் இருக்குமோ அதனை அப் போதே முன்னறிந்து அமைத்துள்ளார்.

நரசிம்: பதினாறு ஆண்டுகளாய் என்னுடன் இருந் திருந்தால் எனக்கு எவ்வளவு நலமாயிருந்திருக்கும்? அவள் இன்மை எனக்கு அளவிலாத் துன்பமே. எனது மணத்தின்போது நின்ற நிலை இது. எவ்வளவு அழகு, துடிப்பு, அமைதி; என்ன கல்லை இவ்வாறு கூறுவதா? கல்நெஞ்சனாகிய நானே கல். எனது மூளை குழம்பிவிட்டதா? கலலுக்கு மூளையேது? குழப்பமேது? அதுதான் கல்! கல் மூச்சு விடுமா? மூச்சு விடுவதுபோல் தோன்றுகிறதே. ஏ சிலை அரசியே, உன் தோற்றத்தில் ஒரு மந்திர சக்தி உண்டு. அதனால்தான் எனது தவறுகள் எல்லாம்

எனது உள்ளத்தை நிரப்பிக் கண்களை மறைக்கின்றன. தாயைப் போல் பிள்ளை என்பார்கள்; சரியாய் விட்டது. அவளும் கல்லாய் நிற்கின்றாள்.

மாசிலா: இது என்ன தோல் பொம்மை நாடகமா? கல்லாம்; சிலையாம். இது மூடபக்தியல்ல. எனது அன்னையே! அரசியே! நான் பிறந்தவுடன் இறந்த தாங்கள் என்னைக் கண்டவுடன் கையை நீட்டுங்கள். நான் முத்தமிட விரும்புகிறேன்!

மூத்தம்: அம்மா, சிறிது பொறுத்துக்கொள். சிலை புதிதாக இப்போதுதான் பீடத்தில் வைக்கப்பட்டுள்ளது. மெய்தொடுதல் கூடாது. நிலத்தில் விழுந்து விடும். முகத்தைப்பார்; சாயம்கூட இன்னும் காயவில்லையே. அருகில் போகாதே.

கமலா: அரசே, உங்கள் துக்கம் மிகுந்து விட்டது. கடந்த பதினாறு ஆண்டுகளாய்ப் பட்ட துன்பம்போல் இன்னும் பதினாறு ஆண்டுகள் வரை இத்துக்கம் இருக்குமோ என்று அஞ்சுகிறேன். உலகில் யாவருக்கும் இவ்வளவு நீண்ட காலம் மகிழ்ச்சியோ துக்கமோ தொடர்ந்து இருந்ததே இல்லை.

கயபாகு: அண்ணா இத்துக்கத்துக்குக் காரணமாய் இருந்த நானே இத்துக்கச் சுமையைச் சுமக்க வேண்டும்,

மூத்தம்: இச்சிலை உங்களிருவருக்கும் இவ்வளவு துக்கத்துக்குக் காரணமாயிருக்கும் என்று அறியாமல் காட்டிவிட்டேன். துன்பம் விலகட்டும். உருவை மறைக்கின்றேன். (திரையைத் தொடுதல்)

நரசிம்: மறைக்க வேண்டாம், நல்லம்மா, இனி அது மறைந்தால் நானும் மறைவது உறுதி. ஒவ்வொரு உறுப்பும் என்னிடம் போட்டியிட்டுப் பேச முற்படுவது போலல்லவா தோன்றுகிறது.

முத்தம் : அதனையே உற்றுப் பார்க்க வேண்டாம். அசைவது போல் தோன்றினாலும் தோன்றலாம்.

நரசிம் : நான் அசைவற்று இருக்கிறேன். மூச்சு விடுகிறேனா? நான் இப்போது இறந்தாலும் எனக்குச் சிலை ஏற்படும் என்பது குறித்துப் பெரு மகிழ்ச்சி. நல்லம்மா, இதை உண்டாக்கியவர் எங்கிருக்கிறார் ?

முத்தம் : அரசே, கவனியுங்கள். மூச்சு விடுவதுபோல் தோன்றவில்லையா ? நரம்புகளும் அவற்றில் இரத்தம் ஓடுவது போலவும்கூடத் தோன்றவில்லையா ?

கயபாகு : சிறந்த வேலைப்பாடு. உதட்டில் உயிர்த் துடிப்பு எனக்கு நன்கு தெரிகிறது.

நரசிம் : ஆ! கண்ணில் இமைப்பு இல்லை. ஆனால் நோக்கில் அசைவும் அன்பும் தோன்றுகிறதே! சிற்பி யின் திறம் கற்பனையையும் கடந்ததாக உள்ளது.

முத்தம் : திரையிட எண்ணுகிறேன் ; அரசர் அன்பைக் காணுகிறாராம்! நிலை தவறிய பேச்சு. மயக்கத்தில் தான் இருக்கிறார்.

நரசிம் : நல்லம்மா, வேண்டாம் ; திரையிடவேண்டாம். இம் மயக்கமே எனக்குப் பல ஆண்டுகளுக்கு இருக் கட்டும். இதைப்போல் இம்மண்ணுலகில் எனக்கு இன்பம் தருவது வேறு எதுவும் இருக்கமுடியாது.

முத்தம் : தங்கள் மனத்தைக் கலக்கியதில் எனக்கு வருத்தமே ; இன்னும் கலக்க விரும்பவில்லை.

நரசிம் : நல்லம்மாள், உன்னால் முடிந்தவெல்லாம் செய்யலாம். நீ என்பொருட்டுச் செய்வதில் எல்லாம் எனக்கு இன்பமே தோன்றுகிறது. அதோ மூச்சுத் தோன்றுகிறதே. சிறப்பாய் மூச்சுவிடுவதையும் காட்ட முடியும் என்பதைக் கற்பனையிலும் அறியேன். கண் முன் காணுகிறேன். உண்மையாக மூச்சுத்தான்

வருகிறது. என்னைப் பார்த்துச் சிரிக்க வேண்டாம். நான் அணிமையில் சென்று முத்தமிட எண்ணு கிறேன்.

முத்தா : வேண்டாம். உதட்டைப் பாருங்கள் ; அதில் ஈரம் தோன்றுகிறது. தொட்டால் நிலை மாறும் ; அழகு கெடும். நான் திரையை விடப்போகின்றேன்.

நரசிம் : வேண்டாம். இன்னும் இருபது ஆண்டுகட்கு வேண்டாம். நான் அருகில் போகவில்லை. இங்கே நின்றுகொண்டு பார்த்தே மகிழ்வேன். அதுவே போதும்.

முத்தம் : அரசே, உங்களையெல்லாம் அறையைவிட்டு வெளியேற்றுவதா அல்லது சிலையை பீடத்தி னின்றும் இறங்கி நீங்கள் இருக்குமிடம் நோக்கி வரும்படி செய்வதா என்பது பற்றித்தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நீங்கள் அச்சம் கொள்ளா விட்டால் — சூனியக்காரி என்று என்னைப் பழிக்கா விட்டால் — சிறு தெய்வங்களைக் கைவசப்படுத்தும் மந்திரக்காரி என்றும் என்னைத் தூற்ருவிட்டால் — நான் இறக்கியே காட்டுவேன்.

நரசிம் : உன்னிடம் எங்களுக்கு நம்பிக்கை உண்டு. உன் கட்டளைப்படியே நாங்கள் யாவருமே நடப்போம். உன்ருல் எதுவும் செய்யக்கூடும் சிலையையே நடத்துவாய் என்ருல் யாங்கள் உன் பேச்சைக் கேட் காமல் என் செய்வோம். அதைப் பேசவும் வைப் பாயோ ? முத்தம்மா, உனது விருப்பம்.

முத்தம் : எனது விருப்பம் உங்களது நம்பிக்கையைக் கொண்டுதான் வேலை செய்கிறது. எல்லோரும் அமைதியாய் நில்லுங்கள். மன வலுவற்றவர்கள் வெளியே சென்றுவிடுங்கள்.

நரசிம் : யாரும் அசையவில்லை. அமைதி, அமைதியாக நில்லுங்கள். நல்லம்மா ! நடக்கட்டும்.

முத்தம்: இசையே, பாடலே, சிலையை எழுப்புங்கள். ஏற்ற காலம் இதுதான். உருவே, நீ இனிக் கல்லல்ல கண்டோர் மனம்கொள்ளக் கண்ணை இமைப்பாயாக! கல்லறையில் வெற்றிடம் இராது, நன்றாக மூடி விடு வேன். அசைதல் போதாது. முன்னோக்கி ஒரு அடி எடுத்து வை. உனது அசையாத குணம் இனி அசை யட்டும். தன் குற்றம் கண்டு தத்தளிக்கும் அரசனால் உயிர் வந்து விட்டது. ஒரு அடி எடுத்து வை. அடி வைத்தால் யாரும் அஞ்சவேண்டாம். பார்த்தீர்களா? பேயல்ல; பூதமல்ல; பிணமல்ல. பெண் தான்; மனோன்மணிதான். ஒழுங்கான செயல்தான். மறுபடி மரணம் வரும் வரையில் ஒருவரும் அருவருக்கக் கூடாது. அருவருத்தல் மற்றொரு தடவை கொலை செய்ததாகும். அரசே, கைபோட்டுக் கொடுங்கள். இளமையில் தாங்கள் வேண்டியதுபோல, அரசிக்காகத் தங்களை வேண்டுகிறேன்.

நரசிம்: என்ன, இது மாய்கையா? இல்லை, உயிருடன் தான் இருக்கிறாள். இது மாய்கை என்றால் உண்ணு வது, பேசுவது, நாம் கூடியிருப்பது எல்லாம் அப்படித் தான். என்னை நோக்கித்தான் வருகிறாள். இதோ, இதோ நான் தொடுகிறேன்.

சிம்மளன்: அரசி அரசனுடன் இணைந்து தழுவிக் கொள்ளுகிறார்கள்.

கமலாபதி: அரசனது கழுத்தில் மலைபோல் புரளும் அரசி ஏன் பேசவில்லை?

கயபாகு: வாய் திறந்து பேசட்டுமே. கல்லறையி னின்று வெளிப்பட்ட விதம் - இதுகாறும் வாழ்ந்த இடம் – எல்லாம் சொல்லட்டுமே.

முத்தம்: அரசி உயிர்த்திருப்பதை நேரில் பார்க்கிறீர் கள். யாராவது கூறியிருந்தால் புராணக்கதை யென்று புறக்கணிப்பீர்கள்; நம்பமாட்டீர்கள்; பேசாக்

குறையும் நீங்கும்; சற்றுப்பொறுத்திருங்கள். மாசிலாமணி, வா அம்மா; உன் தாயாரை வணங்கு. ஆசி கூறவேண்டு. மனோன்மணி. உம் நகல் உருவம் தாயை வணங்குகிறது. மாசிலாமணியாகி வந்திருக்கிறது.

மனோன்: என் சோதனை முடிந்து விட்டதா? விதிக் கடவுளே, எனது பெண்ணுக்கு அருள் ஒளியை மட்டும் அளி. (கட்டிப்பிடித்துக்கொண்டு) நீ தப்பியது, இதுகாறும் வாழ்ந்தது, இங்கு வந்தது, யாவும் நீ சொல்ல விரும்புவாய் ஆனால், பழனி வாக்கினை நம்பியே இதுகாறும் நரன் உயிர் சுமந்து உன்னைக் காண முடியும் என்று நம்பியிருந்தேன் என்பதனை நான் முதலில் சொல்லிக் கொள்கின்றேன்.

முத்தம்: தனியே இருந்து ஓய்வாக உங்கள் வாலாறுகளைக் கூறிக்கொள்ளுங்கள். அரச குடும்பம் களிப்பினையும், பிரபுக்கள் மகிழ்ச்சியையும் அடையும் நேரம் இது. அனைவரும் வாழ்வீர்களாக! இதுவே எனது வாழ்த்து. நான் உங்களிடம் விடைபெறுகிறேன். நான் பறவை. ஒரு தனிப் புரு. ஏதாவது ஒரு கிளையில் சென்று தங்குவேன். என் கணவர் என்னை அழைத்துக்கொள்ளும் காலம் ஒன்று வரும். அதுகாறும் உங்கள் கூட்டுவாழ்வை எண்ணித் தனி வாழ்வு நடத்துவேன். அழைப்புப் பெற்றபின் அமைதியுறுவேன்.

நரசிம்: நல்லம்மா, நீ கடமையைக் கடைப்பிடித்தால் நாங்களெல்லாம் அதில் வழுவுதல் முறையாகுமா? தனித்த உனது துன்பக் குரல் எங்களது மகிழ்ச்சியை மங்க வைக்காதா? தனித்த ஒருவரின் பசியும் துன்பமும், செழித்த கூட்டத்தின் குறையாலும் கொடுமையாலும் தான் எனப் புத்துலக நீதி தீர்ப்பளிக்கின்றதே! அப்பழி அவர்கள் தலையில் சுமத்தப்பட வேண்டும் என்பதும் நீதியாகத் தானே தோன்றுகிறது? நல்லம்மா, எனது நலனை நீ விரும்பினாய், உனது விருப்பத்துக்கு இணங்கினோம்; உன்

_ளேக்கும் கீழ்படிந்தோம். என் மனைவிக்காகக் ்ரையில் பல்லாண்டு கதறிய என்னை இங்கு ழத்தாய்; சிலையைக் காட்டினுய்; உயிர் கொடுத் ; எனக்கு மறுமணம் செய்வித்தாய். யாவரும் ிந்த உண்மை இது. உனது நலனை நான் மட்டும் அல்ல; இங்குள்ள யாவரும் விரும்புகிறேம். உன் கணவனும் கல்லறையிலிருந்து வரக்கூடும். கரடி வயிற்றில் செரித்து விட்டார். ஆனந்தன் இடத்தில் கமலாபதியை நாங்கள் உனக்காக அமைக்கின்றேம். ஆனந்தன் ஆவியும் இதனை ஒப்புக்கொள்ளும். என் ஆனந்தனை உன் மடியில் மகனுய்க் கிடத்தி மகிழ் வேன். கமலாபதி, இப்படி வாருங்கள். உயிரைக் காப்பதும், துக்கத்தை நீக்குவதுமே உங்களின் உண்மைத் தொண்டு. நல்லம்மாளை முத்தம்மாளாக ஏற்றுக் கொள்ளுங்கள். இணைந்து வாழுங்கள். உங்கள் இன்பமே எங்கள் இன்பத்தை மிகுவிக்கும் கைகொடுங்கள். (இருவர் கையையும் ஒன்ருக்கல்) மனேன்மணி! கயபாகு! உங்களிருவரின் கண்களே; குற்றமற்ற உங்களை ஐயுற்று என்னைத் தண்டிக்காது மன்னித்து விட்டன என்பதனை வெளிப்படைகாகக் கூறி விட்டன. மனேன்மணி, நம் கயபாகுவின் மகன் பூக்காந்தன் நமது மாப்பிள்ளையாவர். பிரிந்தவர் ஒன்ருய்க் கூடினேம்; பேச்சில்லை. தனித்தனி பிரிந்து பதினறு ஆண்டுகளையும் சில மணிகளில் பேசித் தீர்ப்போம்.

மங்களம்.

இந்நூலாசிரியர்

வெளியிட்ட நூல்

புயல் .... விலை 1—75

—o—

இனி விரைவில்

வெளி வரும் நூல்கள்

1. செகப்பிரியர் நாடகம் ....

2. பெர்ணுட்சா நாடகம் ....

Copies can be had from :
The Registrar, University of Madras.

Printed at Githa Press, Tiruchi--2-